Registered as a Newspaper

சஞ்சீவி

# உதயன்

விலை ரூ. 60

பக்கங்கள் 16 + 8

சுடர் : 38
கதிர் : 43

ஞாயிற்றுக்கிழமை 08 ஜனவரி 2023

மார்கழி 24 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

## தமிழ்க் கூட்டமைப்பை பதிவு செய்ய முடியாது

- விக்னேஸ்வரன் மீண்டும் இணையலாமாம்
- சுரேஷை இணைப்பது தொடர்பில் ஆராயலாமாம்

தமிழ் அரசு விடாப்பிடி

யாழ்ப்பாணம், ஜன. 8

தமிழ்த் தேசியக் கட்சிகளை இணைத்து கூட்டமைப்பை பரந்து பட்ட அமைப்பாக மாற்றுவது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களால் அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுவில் நேற்று ஆராயப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்ட »15

## பரந்துபட்ட ஒற்றுமை முயற்சிக்கு குந்தகம் விளைவித்த தமிழ் அரசு

- உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்பின் 3 பங்காளிகளும் தனித்தே போட்டியாம்!!!
- பரப்புரை மேடையில் ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசக் கூடாதாம்!!!

யாழ்ப்பாணம், ஜன. 8

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் பரந்துபட்டு கூட்டமைப்பாக போட்டியிடவேண்டும் என்று சிவில் சமூகத்தினர் வலியுறுத்தியிருந்த நிலையிலும், அதற்கு வேட்டுவைக்கும் வகையில் தமிழ்த் தேசியக் »15

உள்ளாட்சித் தேர்தலில்

## தனித்துப் போட்டியிடச் சொல்ல தமிழ் அரசுக்கு உரிமையில்லை!

பங்காளிக் கட்சிகள் போர்க்கொடி

**யாழ்ப்பாணம், ஜனவரி 8**

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாம் எப்படிப் போட்டியிடுவது என்பது தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தீர்மானிக்க முடியாது. அவர்கள் எங்களைத் தனித்துப் போட்டியிடச் சொல்ல முடியாது - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.** »15

## யாழ். மக்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றார்களாம்!!!

தேர்தலில் களமிறங்க தென்னிலங்கை கட்சியினர் இப்படித் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 8

ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழைப்பழச் சீப்பு சின்னத்தில் தனித்துப் போட்டியிடவுள்ளதாக, அந்தக் கட்சியின் செயலர் சட்டத்தரணி மைத்திரி குணரத்ன தெரிவித்தார். »15

உள்ளாட்சித்தேர்தலுக்காக வடக்கில்

## தென்னிலங்கைக் கட்சி முதலாவதாகக் கட்டுப்பணம்!

வவுனியா, ஜன. 8

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கு வடக்கு மாகாணத்தில் முதலாவது கட்டுப்பணம் நேற்றுச் செலுத்தப்பட்டுள்ளது. வவுனியாவில் தரம் உயர்த்தப்பட்டுள்ள வவுனியா மாநகர சபையில் போட்டியிடுவதற்கு வாசுதேவ நாணயக்கார தலைமையிலான »15

## முட்டையின் விலை 5 ரூபாவால் குறையும்

கொழும்பு, ஜன. 8

முட்டை விலையை 5 ரூபாவால் நேற்றுமுதல் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முட்டை வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இதற்கிடையில், வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ முட்டைகளை இறக்குமதி செய்யும் பொறுப்பை அரச வர்த்தக சட்டபூர்வ கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைத்துள்ளார். முட்டை இறக்குமதிக்காக நாளை திங்கட்கிழமை சர்வதேச ஏலம் கோரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஓ-இ)

வடக்கு ஆளுநரால்

## மதத்தலைவரின் இல்லத்தில் நிர்வாகக் கூட்டத்துக்கு அழைப்பு

அதிகாரிகள் மத்தியில் குழப்பம்

யாழ்ப்பாணம், ஜன. 8

வடக்கு மாகாண ஆளுநரால் மன்னார் ஆயர் இல்லத்தில் நிர்வாகக் கூட்டத்துக்கான அழைப்பு பிரதேச செயலர்களுக்கு விடுக்கப்பட்டுள்ளது. மதத் தலைவரின் இல்லத்தில் உத்தியோகபூர்வ கூட்டத்தை நடத்துவது பொருத்தமற்றது என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். »15

காங்கேசன்துறையில்

## கப்பல் போக்குவரத்துக்கு கட்டுமானங்கள் ஆரம்பம்

அமைச்சு அதிகாரிகள் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜன. 8

இந்தியாவுக்கான கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக காங்கேசன்துறையில் துறைமுக கட்டுமானங்களை விரைவாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக »15

## கர்ப்பிணித் தாய்மாருக்கு அதிகரித்த கொடுப்பனவு

கொழும்பு, ஜன. 8

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 45 ஆயிரம் ரூபா போஷாக்கு உணவு கொடுப்பனவை வழங்கும் திட்டம் இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ளதாக பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு தெரிவித்துள்ளது. »15

## நல்லூர் சிவன் கோயிலில் தேசிய தைப்பொங்கல் விழா

ரணிலுடன் அரசியல் தலைவர்கள் பலரும் கலந்துகொள்வார்கள்

யாழ்ப்பாணம், ஜன. 8

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் தேசிய தைப் பொங்கல் விழா எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு நல்லூர் சிவன் கோயிலில் இடம்பெறவுள்ளது. நல்லாட்சி அரசின் காலத் »15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கு தமிழகம் துணைபோகக் கூடாது

## கஜேந்திரகுமார் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 8

ஒற்றையாட்சிக்குள் தமிழர்களை முடக்கும் நிலைப்பாட்டுக்கு துணை போகாமல் ஈழத்தமிழர் நலன் சார் விடயத்தில் ஆக்கபூர்வமாக தமிழகத் தலைவர்கள் செயற்படவேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக சந்திப்பானது கொக்குவிலில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

அங்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழகத்தின் சென்னையிலே மலையக முன்னணியின் ஏற்பாட்டில் தொல்.திருமாவளவன் மற்றும் மகேந்திரன் ஆகியோரின் பங்களிப்புடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுமந்திரன் மற்றும் மலையக முன்னணியின் தலைவர் இராதாகிருஷ்ணன் ஆகியோர் பத்திரிகையாளர் சந்திப்பில் நேற்றுமுன்தினம் பங்கேற்றனர்.

இந்தியாவால் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோரிய பத்திரிகையாளர் சந்திப்பாக அது காணப்பட்டது. அவர்கள் அனைவரும் அந்தச் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போது 13ஆம் திருத்தச்சட்டம் தமிழ்மக்களுக்குரிய தீர்வு அல்ல என வலியுறுத்தினர்.

எம்மைப் பொறுத்தவரை சுமந்திரனின் இந்தக் கருத்து ஆச்சரியமல்ல. சுமந்திரன் திட்டமிட்டு தமிழ்த் தேசிய அரசியலுக்குள் கொண்டு வரப்பட்டவர். ஆனால் திருமாவளவன், மகேந்திரன் போன்றவர்கள் ஈழப்போராட்டத்தின் போது ஈழத்தமிழர்களுக்காக உறுதியாக குரல் கொடுத்தவர்கள். இவர்கள் இருவரின் வாயால் கூட 13ஆம் திருத்தச்சட்டமும் மாகாணசபை முறைமையும் தீர்வு என்று உச்சரித்ததை நான் அறியவில்லை.

அவர்கள் இந்த 13 ஆம் திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்த இந்திய மத்திய அரசைக் கோரும் கருத்தானது எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கின்றது.

இன விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த விடுதலைப்புலிகள் 13ஆம் திருத்தச்சட்டத்தை தீர்வுக்கான ஒரு ஆரம்பப்புள்ளியாகக் கூட கருத மறுத்தனர். அதனால் தான் 30 வருடம் போராட்டம் நடைபெற்றது. அவ்வாறு இருக்கையில் அதனை ஆரம்பப் புள்ளியாகக் கருதினால் தமிழர் தரப்பு ஒற்றையாட்சிக்குள் முடங்கிவிடும்.

13 ஐ ஆரம்பப்புள்ளியாக வலியுறுத்தும் தமிழர் தலைவர்கள் என கூறுபவர்கள் அரசின் அடிமையாக செயற்பட்டாலும் இன்று தமிழர் போராட்டத்துக்கு பக்கபலமாக செயலாற்றிய தமிழகத் தலைவர்கள் இன்று நிலை மாறியுள்ளனர்.

ஒற்றையாட்சிக்குள் முடக்கும் 13 ஆம் திருத்தச்சட்டத்துக்கு ஆதரவளிக்காது கடந்த 35 வருடமாக தமிழர் நலன் சார்பில் எவ்வாறு செயற்பட்டீர்களோ அந்த நிலையில் உறுதியாக இருக்கவேண்டும் என்று அவர்களிடம் கெஞ்சிக் கேட்கின்றோம்.

கடந்த கிழமை ஐக்கிய நாடுகள் சபையின் துணைச் செயலர் நாயகம் விக்னராஜா அம்மையார் இலங்கைக்கு பயணம் செய்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் விக்னேஸ்வரன் ஆகியோர் தன்னைச் சந்தித்ததை இன நல்லிணக்க அடையாளமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு எடுத்துக் கூறியுள்ளார். இவ்வாறு இருக்கையில் ஜனாதிபதியுடனான சந்திப்பில் முன்னேற்றமில்லை என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் சுமந்திரன் கூறுவது தமிழ் மக்களை ஏமாற்றும் செயற்பாடாகும், - என்றார். (அ-ஔ-இ)

## மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில்
# கடலட்டைப் பண்ணைக்கான பத்திரம் வழங்கினார் டக்ளஸ்

கிளிநொச்சி, ஜன. 8

கடலட்டைப் பண்ணைகள் அமைப்பதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையில், கிராஞ்சியில் 83 பேருக்கு கடலட்டைப் பண்ணைகளுக்கான அனுமதிப் பத்திரங்களை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று வழங்கி வைத்தார்.

'கடலட்டைப் பண்ணைகளுக்கு கிராஞ்சியை சேர்ந்த 127 கடற்றொழிலாளர்கள் விண்ணப்பித்துள்ள நிலையில், விரைவில் பொருத்தமான இடங்கள் ஆய்வு செய்யப்பட்டு வழங்கப்படும்' என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அதேவேளை, பூநகரி, கிராஞ்சி இலவன்குடா பகுதியில் கடலட்டைப் பண்ணைகளுக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் நிலையில், அந்த இடத்துக்குச் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடினார்.

கடலட்டைப் பண்ணைகளுக்கு தாங்கள் எதிரானவர்கள் இல்லை என்றும், தமது தொழிலுக்கு பாதிப்பு இல்லாத வகையில் பண்ணைகளை அமைக்குமாறும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (அ-ஔ-20)

## வன்செயலுக்கு அழைப்புவிடுத்த
# 'கெத்துப் பசங்க' கொத்தாகக் கைது

வவுனியா, ஜன. 8

பூவரசங்குளம், தட்டான்குளம், செட்டிகுளம் ஆகிய பகுதிகளில் வன்முறைகளை ஏற்பாடு செய்த 'கெத்து பசங்க' என்ற வட்ஸ்அப் குழுவைச் சேர்ந்த நான்கு பேரை விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

விசேட அதிரடிப்படை வவுனியா முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், பூவரசங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டு இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 5ஆம் திகதி பூவரசங்குளம் பொலிஸ் பிரிவில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது கிடைத்த தகவலின்படி, பூவரசங்குளம், தட்டான்குளம், செட்டிக்குளம் ஆகிய பகுதிகளில் இயங்கிவரும் 'கெத்து பசங்க' என்ற வட்ஸ்அப் குழு தொடர்பில் தகவல் பதிவாகியுள்ளது.

அதனையடுத்து உடனடியாக செயற்பட்ட அதிகாரிகள் வவுனியா பிரதேசத்தில் வசிக்கும் நால்வரை 4 கையடக்கத் தொலைபேசிகளுடன் கைது செய்து, மேலதிக விசாரணைகளுக்காக பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். (அ-ஔ-இ)

# சமூக ஊடகங்களுக்கு இனிமேல் கிடுக்கிப்பிடி!

கொழும்பு, ஜன. 8

சமூக ஊடகங்களை ஒழுங்குபடுவத்துவதற்கான புதிய சட்டங்களை அரசாங்கம் அறிமுகப்படுத்தும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதற்காக சிங்கப்பூரில் தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களை அறிமுகப்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சில சமூக ஊடகச் செயற்பாட்டாளர்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்த கேள்விக்கே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (அ-ஔ-இ)

# மேய்ச்சலுக்கு விடப்பட்ட மூன்று மாடுகள் திருட்டு

## முறைப்பாடளித்தும் நடவடிக்கை இல்லை

சாவகச்சேரி, ஜன. 8

மறவன்புலவு கோவிலாக்கண்டியில் கடந்த வியாழக்கிழமை மேய்ச்சலுக்கு விடப்பட்ட மூன்று மாடுகள் வாகனங்களில் ஏற்றப்பட்டு திருடப்பட்ட நிலையில், இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று உரிமையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கால்நடை வளர்ப்போர் காலபோக நெற்செய்கைக்காக தமது வளர்ப்பு மாடுகளை மறவன்புலவு கோவிலாக்கண்டியில் கோயில்களை அண்டிய இடங்களிலும் குளக்கரைகளிலும் மேய்ச்சலுக்குக் கட்டி வருகின்றனர். அவ்வாறே கடந்த வியாழக்கிழமை மூன்று உரிமையாளர்கள் மாடுகளை ஏ32 வீதியிலிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் உள்ள குளக்கரையில் மேய்ச்சலுக்கு கட்டிவிட்டுச் சென்றனர்.

இதன்போதே மேற்படி மாடுகள் திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-14-9)

# கசிப்புடன் இருவர் கைது!

யாழ்ப்பாணம் - அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிலாவரை மற்றும் பொய்ஸி பகுதிகளில் கசிப்புடன் இருவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட ஒருவரிடமிருந்து 6 போத்தல் கசிப்பும் மற்றையவரிடமிருந்து 14 லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட 42 மற்றும் 43 வயதுடைய சந்தேகநபர்கள் இருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-14-27)

# டெங்குப் பரிசோதனையில் ஐவருக்கு வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ். மாநகர சபை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட வண்ணார்பண்ணை பொதுச் சுகாதார பிரிவு ஜே/98, ஜே/100 ஆகிய பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு ஐந்து பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

678 வீடுகள் சோதனையிடப்பட்ட தோடு டெங்குக் குடம்பி காணப்பட்ட தனியார் நிறுவனம் உள்ளிட்ட 5 ஆதனங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அத்துடன் டெங்கு பரவும் நிலையில் சூழலை வைத்திருந்த 42 பேருக்கு சிவப்பு அறிவிப்பும் வழங்கப்பட்டது. (ம-14-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 21 . 09 . 1960

மறைவு 09 . 12 . 2022

கடந்த (09.12.2022) வெள்ளிக்கிழமை
அன்று சிவபதமடைந்த எங்கள் குடுத்தலைவர்

## அமரர் இராசதுரை பாலபாஸ்கரன்

அவர்களின் 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (08.01.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 5.00 மணியளவில் கீரிமலை புனிதத் தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**"இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்"**

மயிலணி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்

(cs. 22670) (2.6)

எலிபண்ட்/மஸ்கன்ஸ் பிராண்ட் OPC சீமெந்து SLS 107
"1939 முதல் தரமான உற்பத்தியை உருவாக்குகின்றோம்"




MASCONS (PVT) LTD
ESTD 1939 P.O. BOX 175, Sri Sumanatissa Mawatha, Colombo 12
TEL : +94 11 2325561-3 / Hot Line : 076-6733744, FAX +94 11 2449537, E-mail:mascons@eureka.lk
www.mascons.com Like Mascons

| Ratmalana Branch | Kurunegala Branch | Vavuniya Branch | Jaffna Branch | Manipay Branch |
|---|---|---|---|---|
| 68, Kattukurundu watta Rd, Ratmalana | 906,Puttalam Rd, Welagane, Maspotha, Kurunegala | No.376,Jaffna Rd, Thandikulam, Vavuniya | No.35, Stanley Rd, Jaffna | No. 118, Jaffna Road, Manipay |
| Tel/Fax : 011-2737693 | Tel/Fax : 037-2239892 | Tel/Fax : 024-2050168 | Tel/Fax : 021-2222413 | Tel/Fax : 021-2256474 |

# யாழ். சர்வதேச திரைப்பட இறுதிநாளில் லெனின் எம்.சிவத்தின் 'த புரொரெக்ரர்'

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ். சர்வதேச திரைப்பட விழாவின் இறுதி நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு லெனின் எம்.சிவத்தின் 'த புரொரெக்ரர்' (பாதுகாவலன்) என்ற திரையிடலுடன் நிறைவுபெறவுள்ளது.

யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா யாழ்ப்பாணத்தில் கடந்த 2ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது.

திரைப்பட விழாவின் இறுதி நிகழ்வும், இறுதி திரையிடலும் யாழ்ப்பாணம் கார்ஹில்ஸ் சதுக்கத்திலுள்ள றீகல் சினிமாவில் இடம்பெறவுள்ளது.

இதில் லெனின் எம்.சிவத்தின்'த புரொரெக்ரர்' எனும் திரைப்படம் திரையிடப்படவுள்ளது. இந்தத் திரைப்படம் கனல் டி பனாமா சர்வதேசத் திரைப்பட விழாவில் கடந்த ஆண்டு சிறந்த சர்வதேச புனைவுத் திரைப்பட விருதைப் பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

பிறப்பு 07.04.1939



இறப்பு 07.01.2023

### சதாசிவம் நவரெத்தினம் (குமாரசாமி)

புதுவீதி, ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் நவரெத்தினம் (குமாரசாமி) நேற்று (07.01.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் காந்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், வில்வமாங்களத்தின் பாசமிகு கணவரும், இராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பவளம், தணிகாசலம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராஜினி, பிரபாகரன், கருணாகரன், சதீஸ்வரன் (வெற்றிலைக் கடை, யாழ்ப்பாணம்), ஜீவாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகசபாபதி காலஞ்சென்றவரான துரைசிங்கம், யோகராணி, காலஞ்சென்றவரான நல்லம்மா, சுந்தரலிங்கம், இராமநாதன், யோகராஜா (இந்தியா), தங்கராஜா (கனடா) ஆகியோரின் மைத்துனரும், சிவதாஸ், பாமினி (யா/புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் பாடசாலை), சுபா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜென்சி (யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்), தனுசியா, கேஷாந், கபிக்சன், தனுஜன், மகிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**புது வீதி, ஆறுகால்மடம்,**
**ஆனைக்கோட்டை**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்பு:- 077 684 5598, 076 891 4269**

(CS 22683) 1/6

## மரண அறிவித்தல்

மண்ணில் 21.12.1944



விண்ணில் 06.01.2023

### திரு. சபாரத்தினம் திருலோகசிங்கம்

**(ஓய்வுபெற்ற தபாலதிபர்)**

மறவன்புலவைப் பிறப்பிடமாகவும், கைதடியை வசிப்பிடமாகவும், கொழும்பு, உடுவில் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சபாரத்தினம் திருலோகசிங்கம் அவர்கள் கடந்த (06.01.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - கனகநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கனகரஞ்சினி அவர்களின் அன்புக் கணவரும், திருவருட்செல்வன் (Accountant Divisional Secretariat, Chankanai), வரதாம்பிகை (Canada), வாலாம்பிகை (Senior Accountant - CPA, Canada), திவாகரன் (Realtor - Canada), Dr.திருமாவளவன் (Lecturer- Centre for Defence Engineering, Cranfield University, England) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜானகி (Teacher - J/Jaffna Central College), அருள்தரன் (Engineer - HP Canada) ஆகியோரின் அன்பு மாமனாரும், கவின், ஆத்மிகா, அனன்யா, அஸ்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும், நவரட்ணராஜா காலஞ்சென்றவர்களான சிவஞானசேகரம், கனகாம்புசம் ஆகியோரின் அன்பு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.01.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் யாமாச் சந்தி, உடுவில் தெற்கு, மானிப்பாய் என்னும் முகவரியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று, பின்னர் பிப்பிலி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**யாமாச் சந்தி,**
**உடுவில் தெற்கு, மானிப்பாய்**

**T.P:077 169 7690**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 22683) 1/6

## மரண அறிவித்தல்



தோற்றம் 19.04.1970

மறைவு 07.01.2023

### சுப்பிரமணியம் நீதிராஜா

**(ஆசிரியர், யா/ சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாசாலை)**

100, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தை (ஆரியகுளம்) பிறப்பிடமாகவும், ஸ்ரீலங்கா வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நீதிராசா நேற்று (07.01.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பிள்ளையம்மா தம்பதியரின் அன்பு மூத்த புதல்வனும், ஜெயாழினி (வகிதா) அவர்களின் அன்புக் கணவரும், அமரர் செல்லத்துரை, இரஞ்சிதமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், நீதிகா, நீருஜன், டீனுஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறிஸ்கந்தராசா (சந்நிதி முருகன் பாட்ஸ் & சேவிஸ் - உரிமையாளர்), சுசிலா (கனடா), ஜெயராசா, விஜயராசா (சந்நிதி முருகன் பாட்ஸ் & சேவிஸ் - உரிமையாளர்), மாலினி, காமினி (பிரதேச செயலகம், வேலணை), ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மாவதி, சாந்தலிங்கம் (கனடா), சுபாசினி, கலைவாணி, ஜெயராஜ், ஜனனி (பிரதேச செயலகம், வேலணை) ஆகியோரின் மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.01.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**0777 110 199, 077 2018 275**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடன் சீரமைப்பு:

# இந்தியாவின் பதிலை இலங்கை எதிர்பார்ப்பு



### ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 8

இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் இந்தியாவின் பதிலை இந்த மாத இறுதியில் பெற்றுக்கொள்ள அரசாங்கம் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அத்துடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீனாவுடனான பேச்சு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

செய்தித்தாள்களின் ஆசிரியர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடக செய்திப் பணிப்பாளர்களுடன் ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதி இந்த ஆண்டின் முதல் பாதியில் கிடைக்கும் என அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. இலங்கைக்கு வழங்கிய கடனைத் தள்ளுபடி செய்யுமாறு சீனாவிடம் கோரிக்கை விடுக்கப்படவில்லை.

ஆனால், 20 வருட காலத்துக்குள் கடனைத் திருப்பிச் செலுத்த கால அவகாசம் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதற்கு சீனாவிடம் இருந்து நல்ல பதில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றார். (ம)

## தேர்தலுக்காக பணம் அச்சிடல்

### நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 8

நாட்டில் நிலவும் பொருளாதார நலிவுக்கு மத்தியில் தேர்தல் நடத்தப்பட்டால் பணத்தை அச்சிட்டு தேர்தலை நடத்திய நாடாக இலங்கை பெயர் பதிக்கும் இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எம்மால் கடந்த ஆண்டு 2 ஆயிரத்து 500 பில்லியன் ரூபா பணம் அச்சிடப்பட்டது. இதனை மறைக்க வேண்டிய அவசியமில்லை. எனினும் அன்றாட தேவைகளுக்காக இவ்வாறு பணம் அச்சிடப்படவில்லை. இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் 12ஆம் திகதி வரையான முதல் 12 நாள்களுக்கான அரச செலவு 80 பில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ள போதிலும் வருமானம் 26 பில்லியன் ரூபா மாத்திரமேயாகும்.

ஓய்வூதியக் கொடுப்பனவு, சமுர்த்தி, உரக் கொடுப்பனவு உள்ளிட்டவையே இந்தச் செலவுகளில் உள்ளடங்குகின்றன. வருமானத்துக்கும் செலவுக்குமிடையில் 54 பில்லியன் இடைவெளி காணப்படுகிறது. 54 பில்லியன்களை எவ்வாறேனும் தேட வேண்டிய நிலைமை காணப்படுகிறது. இவ்வாறான நிலைமையிலேயே தேர்தலை நடத்துமாறு பல்வேறு தரப்பினரும் கோருகின்றனர். எம்மால் தேர்தலை நடத்த முடியும். ஆனால், பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் பணத்தை அச்சிட்டு தேர்தலை நடத்திய ஒரு நாடாக இலங்கை உலகநாடுகள் மத்தியில் பெயர் பதிக்கும் - என்றார். (ச-இ)

## மிரட்டலுக்கு அடிபணியாது தேர்தலை நடத்தவேண்டும்

### தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எதிர்க்கட்சிகள் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 8

தேர்தல்கள் ஆணைக்குழுவை மிரட்டி உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க ரணில் அரசு முயற்சிக்கின்றது. இந்த மிரட்டலுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அடிபணியக் கூடாது. இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

தேர்தலை ஒத்திவைக்க ரணில் அரசு முயற்சிக்கின்றது. தோல்விப் பயத்தாலேயே தேர்தலை ஒத்திவைக்க அரசு முயற்சிக்கின்றது தேர்தலை நடத்தும் முழு அதிகாரமும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு. உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் நீதிமன்றமும் சிறந்த தீர்ப்பை வழங்கும் என்று நம்பிக்கையுள்ளது. ஆக அரசின் மிரட்டல்களுக்கு அடிபணியாது தேர்தலை நடத்த வேண்டும் என்று அந்தக் கட்சி மேலும் தெரிவித்துள்ளது. (ச-22)

## வங்குரோத்து நிலையால் வறுமைக்கு மக்கள் இரை

### சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 8

நாட்டில் நிலவும் வங்குரோத்து நிலைமையால் மூவேளை சாப்பிட்ட மக்கள் தற்போது இருவேளையும், இருவேளை உணவு உண்பவர்கள் தற்போது ஒரு வேளையுமே சாப்பிடும் நிலை ஏற்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் தற்போது பஞ்சம் ஏற்பட்டுள்ளது. நாடு வங்குரோத்தடைந்தமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. மூவேளை சாப்பிட்டவர்கள் இருவேளையும், இருவேளை சாப்பிட்டவர்கள் ஒரு வேளையும் சாப்பிடும் நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் தமது நாளாந்த உணவுத் தேவைகளைக்கூட பூர்த்திசெய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பெற்றோரால் தமது பிள்ளைகளுக்குத் தேவையான புத்தகங்களைக்கூட வாங்கிக் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டில் திருப்புமுனை ஒன்று தேவை. அது கல்வித்துறையில் ஏற்படும் மறுசீரமைப்பு சார்ந்த திருப்புமுனையாக இருக்க வேண்டும். தற்போது நடைமுறையிலுள்ள கல்விக் கொள்கையை மாற்றியமைக்க வேண்டும்.

இதனூடாக நாட்டை முதல் நிலைக்குக் கொண்டு வரும் வேலைத்திட்டம் உடனே ஆரம்பிக்கப்பட வேண்டும் - என்றார். (ச-22)

## இந்தியா செல்கிறார் ஜனாதிபதி ரணில்!

கொழும்பு, ஜன. 8

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் இந்தியாவுக்குச் செல்லவுள்ளார். இந்தியாவில் நடத்தப்படும் உலகளாவிய தெற்கு உச்சி மாநாட்டில் பங்கேற்கும் நோக்கில் அவர் அங்கு செல்லவுள்ளார்.

ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் அவர் இந்தியாவுக்கு மேற்கொள்ளும் முதல் பயணமாக இது அமைகிறது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் ஜனவரி 12 மற்றும் ஜனவரி 13 ஆகிய திகதிகளில் இந்த உச்சி மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் 20 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர். அண்டை நாடுகளின் தலைவர்களைத் தவிர, அங்கோலா, கானா, நைஜீரியா, மொசாம்பிக், செனகல், தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம், உஸ்பெகிஸ்தான், மங்கோலியா, ஐக்கிய அரபு இராச்சியம், பப்புவா நியூ கினியா ஆகிய நாடுகளின் தலைவர்களும் இந்த மாநாட்டில் பங்கேற்கின்றனர். (ம)

## உள்ளூராட்சித் தேர்தலில் பெரமுனவே வெற்றிசூடும்!

### கூறுகிறார் நாமல்



கொழும்பு, ஜன. 8

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெற்றால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே வெற்றிவாகை சூடும் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்ளும் தயார்ப்படுத்தலில் பெரமுன ஈடுபட்டுள்ளது. வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கை இடம் பெறுகின்றது. தேர்தலில் பெரமுனவுடன் கூட்டணி அமைத்து போட்டியிடும் கட்சிகள் தொடர்பான பேச்சுகளும் இறுதிக் கட்டத்தில் உள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்த திகதிக்குள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வோம். நீதிமன்றத்தின் தடை உத்தரவு எதுவும் இன்றி உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடந்தால் பெரமுனவே வெற்றியடையும் - என்றார். (ச-22)

## தான்தோன்றிச் செயற்பாடுகளால் வீழ்ந்தார் கோத்தாபய ராஜபக்ச!

### விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 8

மக்கள் வழங்கிய ஆணைக்கு சிறிதளவும் மதிப்புக் கொடுக்காது தான்தோன்றித்தனமாக செயற்பட்டமையே முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவின் வீழ்ச்சிக்கு காரணம் இவ்வாறு முன்னாள் அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோத்தாபய ராஜபக்சவின் தன்னிச்சையான முடிவுகள் மற்றும், தான்தோன்றித்தனமான செயற்பாடுகளினாலேயே அவர் ஜனாதிபதி பதவியிலிருந்து விரட்டப்பட்டார். அவரின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளை நாம் தட்டிக் கேட்டமையாலேயே எமது அமைச்சுப் பதவியும் பறிபோனது. கோத்தாபயவின் இப்படியான செயற்பாடுகள் இறுதியில் ராஜபக்ச குடும்பத்துக்கே தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது.

ராஜபக்சக்களின் கட்சியுடன் நாம் இனிமேல் கூட்டணி அமைக்கவே மாட்டோம் - என்றார். (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## சகுனிகளிடம் அவதானம்!

ரணில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முன்னெடுப்புக்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது அதிருப்தியை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியுள்ள பின்னணியில், 'சர்வகட்சிப் பேச்சு சரியான இலக்கை நோக்கியே பயணப்பட்டுக் கொண்டிருக்கின்றது' என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார் பிரதமர் தினேஷ் குணவர்த்தன. இது விடயத்தில் கூட்டமைப்பு வெளிப்படுத்திய அதிருப்தியை ஏற்க முடியாது என்றும் அவர் வரையறுத்திருக்கின்றார்.

இனவாதச் சகதிக்குள் குளித்தெழுந்த பெரமுனவினரின் ஆதரவுடன், அவர்களின் அத்திபாரத்தில் தனது ஆட்சியை அமைத்திருக்கும் ரணிலால், அனைவரும் ஏற்கும்படியான தீர்வுப்பொதியொன்றை தந்துவிட முடியாது என்பது வெள்ளிடைமலை விடயம்தான். 'நல்லதொரு தீர்வை வழங்குவதற்காக நாம் அழைத்தோம். தமிழர்கள் தரப்பு வரவில்லை' என்று ரணில் அரசாங்கம் சர்வதேசத்துக்குக் காரணம் கூறிவிடக்கூடாது என்ற காரணத்தாலேயே இந்தப் பேச்சில் தாம் கலந்துகொள்வதாக கூட்டமைப்பு தெரிவித்திருந்தது. ஆதலால், கூட்டமைப்பின் அதிருப்தியில் பின்வாங்கலில் ஆச்சரியத்துக்கு ஒன்றுமில்லை. ஆனால், 'சர்வகட்சிப் பேச்சுக்கள் அதன் சரியான பாதையை இலக்கை நோக்கியே பயணப்பட்டுக் கொண்டிருக்கின்றன' என்று பிரதமர் தெரிவித்திருப்பதன் பின்னரான தெளிவுபடுத்தலை அவர் வழங்கியே ஆகவேண்டும்.

ஜனாதிபதியுடனான ஐந்தாம் திகதிய சந்திப்புக்குப் பின்னர் கூட்டமைப்பினர் வெளிப்படுத்திய அதிருப்தியானது ஒரு பொத்தாம்பொதுவான கருத்தாகவோ அல்லது வழக்கமான அதிருப்தியாகவோ இல்லை. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனாக இருக்கட்டும், கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனாக இருக்கட்டும், அல்லது இந்தப் பேச்சில் கலந்துகொண்ட முக்கியஸ்தர்களாக இருக்கட்டும், அவர்கள் அனைவரும் எந்தெந்த விடயங்களில் அரசாங்கம் மெத்தனப்போக்குடன் இருக்கின்றது, ஏமாற்ற எத்தனிக்கின்றது என்பதை திடமாகவும் தெளிவாகவும் வரையறுத்திருந்தனர். இவ்வாறிருக்கையில், சர்வகட்சிப் பேச்சு அதன் சரியான பாதையில் பயணப்படுகின்றது என்று எந்த நிலைப்பாடுகளின் அடிப்படையில் பிரதமர் தினேஷ் தெரிவித்துள்ளார் என்ற தெளிவூட்டல் வழங்கப்பட வேண்டியது இங்கே அவசியமாகவும் தவிர்க்க முடியாததாகவும் ஆகின்றது.

ஏனெனில், இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழர்களின் சிந்தனைத் தளமும் சிங்களவர்களின் சிந்தனைத் தளமும் வேறுபட்டது. இனப்பிரச்சினைக்கான தீர்வென்ற ஒன்று வழங்கப்படுமாயின் அது 'தமிழ் மக்களின் வேணவாக்களுக்கு ஏற்ற' தீர்வாகத்தான் அமைய வேண்டுமே அன்றி, 'சிங்களத் தலைவர்கள் சிந்திக்கின்ற அல்லது வழங்கச் சம்மதிக்கின்ற' தீர்வை திணித்துவிட முடியாது. அதைப் பெற்றுக்கொள்ளவும் ஏற்றுக் கொள்ளவும் தமிழர் தேசம் தயாரில்லை. பதில் ஒன்றை எழுதிவிட்டு வினாக்களைத் தேடுவதைப்போன்று தீர்வொன்றை எழுதிவிட்டு அதற்கேற்ப காய்களை தென்னிலங்கைத் தலைவர்கள் நகர்த்திக் கொண்டிருக்கின்றனரா? என்ற கேள்விகள்தான் பிரதமரின் கூற்றின் பின்னால் 'அச்சமூட்டும் வகையில்' வியாபிக்கின்றன.

விலாங்கு மீன்கள் எவ்வாறு வாலையும் தலையையும் மாறிமாறி வெளிப்படுத்தி ஏமாற்றுமோ அவ்வாறுதான் தற்போதைய ரணில் அரசாங்கம். இது பெரமுன அமைத்திருந்த தனி அரசாங்கத்தையும் விட ஆபத்தானது. மஹிந்த, கோத்தாபய, பஸில் போன்ற கடும் போக்கு வாதிகளுக்கு மத்தியில் பசுந்தோல் போர்த்தப்பட்ட ஒரு புலிதான் பிரதமர் தினேஷ். ஒப்பீட்டளவில் பெரமுனவின் ஏனையவர்களை விடவும் அவருக்கு இருக்கும் ஜனநாயக பிம்பம், சர்வதேசத்தைச் சாந்தப்படுத்துவதற்கான ஒரு முகம். அந்த முகம்தான் ஆபத்தான தன்மையை தமிழ்த் தலைவர்கள் உணர்ந்து - திரைமறைவிலுள்ள பூகோள அரசியலுக்கு ஏற்ப காய்நகர்த்துவதுதான் காலத்தேவையும் புத்திசாலித்தனமும்.

### நாளொரு நல்வார்த்தை

"எவன் பிறர் நற்செயல்களைப் பார்த்து மகிழ்ச்சி கொள்ளவில்லையோ, அவனால் நல்ல செயல்கள் எதையும் செய்ய முடியாது."

- ஜேம்ஸ் ஆலன்.



### இனப்பிரச்சினைத் தீர்வு

# முஸ்லிம் மக்களிடத்தில் விஷமத்தனப் பரப்புரை

## ஹக்கீம் கவலை



கொழும்பு, ஜன. 8

இனப்பிரச்சினைக்கான தீர்வு காண்கின்ற பேச்சு சம்பந்தமாக விஷமத்தனமான பரப்புரைகள் முஸ்லிம் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படுவது கவலைக்குரியது எனத் தெரிவித்தார் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக ஜனாதிபதி தமிழ்க் கட்சிகளுடனும் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை ஆரம்பித்திருப்பது வரவேற்கத்தக்கது. இது சம்பந்தமாக விஷமத்தனமான பரப்புரைகள் முஸ்லிம் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படுவது கவலைக்குரியது.

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து, தமிழ் மக்களின் அபிலாஷைகள் சில சமயங்களில் முஸ்லிம்களின் அபிலாஷைகளுடன் முரண்பட்ட விடயங்களாக இருக்கின்றபோது, தேவையற்ற சந்தேகங்களை எழுப்பி, மக்களைக் குழப்பி ஒட்டுமொத்த இனப்பிரச்சினைக்கான தீர்வு வருகின்ற சாத்தியப்பாட்டை குறைக்க முயற்சிக்கப்படுகின்ற விடயமாகவே நான் உணர்கிறேன்.

அதனடிப்படையில் ஒட்டுமொத்த வடக்கு - கிழக்கு பிரதேசத்தையும் ஓர் அரசியல் அலகாக ஆக்கித்தர வேண்டும் என்ற கோரிக்கை தமிழர் தரப்பிலே நீண்டகாலமாக தெரிவிக்கப்பட்ட விடயமாக இருந்த போதிலும் அதிலே முஸ்லிம் தரப்பு சற்று மாற்றமான கருத்தைக் கொண்டிருக்கின்றது என்ற யதார்த்தத்தை தமிழ்த் தரப்பு புரிந்து கொண்டிருக்கும் என நாங்கள் உணர்ந்திருக்கின்றோம். அந்த அடிப்படையிலே இந்த விவகாரத்திலே தேவையற்ற விஷமத்தனமான பிரசாரங்களை மேற்கொள்ளாமல், அரசோ, தமிழ்த் தரப்போ இந்தப் பேச்சுக்களை முன்னெடுக்கின்றபோது இந்த விவகாரத்தில் கரிசனை உடைய ஏனைய தரப்பினரையும் இணைத்துக்கொண்டு இதற்கான தீர்வுகளைக் காண்பார்கள் என்பதில் நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கின்றோம். அதனால் பிரச்சினைக்கான தீர்வு வருகின்றபோது அதனை குழப்பியடிக்க முனையாமல் இணக்கப்பாட்டுடன் தீர்ப்பதிலேயே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகள் நம்பிக்கையுடன் இருக்கின்றன.

எனவே, இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விவகாரத்தில் நல்லதொரு தீர்வை பெற்றுத் தருவதற்கான முயற்சியை ஜனாதிபதி உளப்பூர்வமாக முன்னெடுப்பதாக இருந்தால் முஸ்லிம் தரப்பையும் இதில் இணைத்துக்கொண்டு இறுதித் தீர்வைக் காண வேண்டும்' - என்றார். (ம-22)

### நாளை

09.01.2023
திங்கட்கிழமை
மார்கழி 25

சுபநேரம் : 12.32 - 02.02
ராகுகாலம் : 08.02 - 09.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குழந்தையின்மைக்கான அதிநவீன சிகிச்சைகள் இருக்கையில் கலலை எதற்கு?

உங்களுக்கும் குழந்தை நிச்சயம் உண்டு!

PFIRC

பிரசாந்த் செயன்முறை கருத்தரிப்பு மையம்

இலங்கை மற்றும் வெளிநாடு வாழ் இலங்கையரின் 25 ஆண்டு கால நம்பிக்கைக்குரிய ஒரே மருத்துவமனை!

INTERNATIONAL ACCREDITED CLINIC GCR Prashanth Fertility Research Centre FERTILITY



- கருவுருவாவதில் சிக்கல்
- தொடர் கருச்சிதைவு
- விந்தணுக் குறைபாடு
- நீரிழிவுடன் கருத்தரிப்பு
- பிந்திய வயதில் கருத்தரித்தல்
- கர்ப்பப்பை கட்டிகள்

போன்ற பிரச்சினைகளுக்கு அதிநவீன சிகிச்சைகள் மூலம் தீர்வு!

## இலவச மருத்துவ ஆலோசனை முகாம்

ஜனவரி 28 யாழ்ப்பாணம் | ஜனவரி 29 கொழும்பு

புத்தாண்டிற்கான விசேட சலுகைகள்!!

விபரங்களுக்கு:

0760155882, 0760155883

டொக்டர். கீதா ஹரிப்ரியா அவர்களை நேரில் சந்தித்து ஆலோசனை பெறலாம்!



பிரசாந்த் மருத்துவமனை தகவல் மையம்

ரோயல் மருத்துவமனை, 62, டபிள்யூ.ஏ. சில்வா மாவத்தை, வெள்ளவத்தை

www.pfrcivf.lk | infopfrcsl@gmail.com


### தந்தை செல்வா மூதறிஞர் சா.ஜே.வே.செல்வநாயகம் (Q.C) அவர்களின் 125வது ஜெயந்தியை முன்னிட்டு நடாத்தப்படும் திறந்த கட்டுரைப் போட்டி 31.03.2023

செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையானது கல்வி மற்றும் சமூக மேம்பாட்டினை நோக்கமாகக் கொண்டு, தந்தை செல்வாவின் விழுமியங்களின் அடிப்படையில் 2010ம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வருகின்றது.

தந்தை செல்வா அவர்களின் 125வது ஜெயந்தியை முன்னிட்டு மக்களிடையே தந்தை செல்வா பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்குடன், பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள், மற்றும் பொது மக்களிடையே கட்டுரைப் போட்டிகளும் நடாத்தி சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்க ஒழுங்குகள் செய்துள்ளோம்.

**திறந்த கட்டுரைப் போட்டிக்கான விதிமுறைகள்**

- 20 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் திறந்த கட்டுரைப் போட்டியில் பங்குபற்றலாம். போட்டியாளர்கள் தமது வயதினை உறுதிப்படுத்துவதற்கான ஆவணத்தை சமர்ப்பிக்க வேண்டும்.
- கட்டுரைகள் A4 தாள்களில் வரிகளுக்கிடையில் இடைவெளிகளுடன் கணினி அச்சுப் பதிவு செய்து அனுப்புதல் வேண்டும்.
- போட்டியாளர்கள் பின்வரும் தலைப்புக்களில் விரும்பிய தலைப்பினை தெரிவு செய்து 400 சொற்களுக்கு குறையாமலும், 500 சொற்களுக்கு மேற்படாமலும் எழுதுதல் வேண்டும்.

1. தந்தை செல்வாவின் அரசியல் பயணமும் சமகாலத்தில் அதன் தேவைப்பாடும்.
2. தந்தை செல்வாவின் சித்தாந்தமும் இன்றைய தலைமுறையினருக்கான தேவைப்பாடும்.
3. தந்தை செல்வாவின் காந்திய கோட்பாடும் அது பற்றிய சமுதாயச் சிந்தனைகளும்.

- கட்டுரைகளை அனுப்புபவர்கள் தங்களது முழுப்பெயரினை தமிழிலும் ஆங்கிலத்திலும் வேண்டப்படுவதுடன் அறக்கட்டளையானது போட்டியாளர்களை தொடர்பு கொள்வதற்கு உதவியாக தமது முகவரியினையும் தொலைபேசி இலக்கத்தினையும் தவறாது அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.
- வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படும்.

**கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி**

**செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை,**
**தந்தை செல்வா கலையரங்கம்,**
**114, ராஜேந்திர பிரசாத் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

கட்டுரை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி **15.02.2023**

போட்டி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு சி.கமலகாந்தன். **0774687069** இணைப்பாளர்

**தந்தை செல்வா ஜெயந்தி ஏற்பாட்டுக் குழு,**
**செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை**

(CS/48479)


### அரிசி ஆலை விற்பனைக்கு

ஊரெழுவில் இயங்கிக் கொண்டிருக்கும் மில் விற்பனைக்கு உண்டு.

077 401 3959, 077 378 6647

### விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காளி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஜந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு,**
**பிள்ளையார் கோயில் வீதி,**
**கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம்**
**கிளை:**
**K.K.S. வீதி, இணுவில்**


## சேவைநலன் பாராட்டு

**யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகின் நூலகத்தில் கடமையாற்றி இன்று (08.01.2023) ஞாயிற்றுக்கிழமை ஓய்வுபெற்றுச் செல்லும் சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்**

### திருநாவுக்கரசு - ஸ்ரீதரன்



Congratulations Congratulations

**(BA,PGD in Lib.Sc. University of Jaffna)**
**Phamacist, Sri Murugan Medical Stores,**
**Main Street, Nelliady)**

அவர்களின் சேவையினைப் பாராட்டுவதோடு அவரின் ஓய்வுக்காலம் சீரும் சிறப்புமாக அமைய எல்லாம் வல்ல யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பார்வதி பரமேஸ்வரனை வேண்டி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக நண்பர்கள்.**

(CS 22736)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக

# மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 02 . 1957

மறைவு 05 . 01 . 2023

## திரு.நடராசா கோபாலகிருஷ்ணன்
**(சின்ராசு பத்தர்)**

பொற்றொழிலாளர் வீதி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.நடராசா கோபாலகிருஷ்ணன் (சின்ராசு பத்தர்) கடந்த (05.01.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் நாகபூசணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரு. அ.நடராசா உமையம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற திரு.திருமதி இளையதம்பி பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சதாசிவம் (மாலுசந்தி பிள்ளையார் ஆலயத் தொண்டர்), நாகேஸ்வரி, புஷ்பராணி, காலஞ்சென்ற துரையன், பரமேஸ்வரன் (தயாளன்), புஸ்பலதா, சுகதாஸ் (வண்ணன்), மகிந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தவமணி, தங்கம்மா, காலஞ்சென்ற நாகராசா, நாகேஸ்வரி, சறோயினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சி.மதிவதனி, சுபாஸ்கரன் (ராஜன்), பாஸ்கரன் (கரன்), ஜந்தன் (பிரான்ஸ்), அ.சர்மிளா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகாந்தன், சுதாசினி, அதீஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கோபிகா, சிந்துஜன், ஜதுர்சனா, சிவரூபன், சிவானா, சஸ்மிகா, அக்சயா, ஆரத்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு: கரன் - 077 224 7842**
**இராஜன் - 077 969 9782**

(cr 38995) (2.6)

**தகவல்: குடும்பத்தினர்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 29 . 08 . 1932

மறைவு 11 . 12 . 2022

கடந்த 11.12.2022 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் தம்பையா மகேந்திரன்
**(ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற பதிவாளர்)**
**(Registrar High Court)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் (10.01.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத்தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

**ஆஸ்பத்திரி முன்பாக,**
**அச்சுவேலி தெற்கு.**

(CR/38983)

**ம.சுரேந்திரன்**
**(மகன் - உதயன் பத்திரிகை)**
**071 110 0044**

# மரண அறிவித்தல்



## திருமதி ரமணி சதானந்தன்

**பிறப்பு 01.04.1934**

**இறப்பு 01.01.2023**

யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும், யாழ். அரியாலை, லண்டன் வெம்பிளியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ரமணி சதானந்தன் கடந்த (01.01.2023) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானபோதம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் - தையல்முத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சபாரட்ணம் சதானந்தன் (போஸ்)அவர்களின் அன்பு மனைவியும், இரவீந்திரன் (பிரஸ் ரவி), காலஞ்சென்றவர்களான மனோகரன், சோமபாலன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற இரவீந்திரன் தங்கரத்தினம் மற்றும் மனோகரன் ஆன், சோமபாலன் பிறேமலதா மற்றும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை பூரணம், தம்பிப்பிள்ளை அம்பிகாபதி, சோமசுந்தரம் பாரதி, நடராஜா இலட்சுமிப்பிள்ளை, நடராஜலிங்கம் செல்லம்மா, சிவசுந்தரம் இராஜாம்பாள், சபாரட்ணம் ராஜா ஆகியோரின் மைத்துனியும், கோபிநாத், பிறேம்நாத், ரகுநாத், சுரேந்திரநாத், ஜெகநாத், விமல்நாத், சோபனா, காலஞ்சென்ற நிர்மலநாத் (மாவீரன்) மற்றும் தேவ்நாத் ஆகியோரின் பாசமிகு தாயாரும், நந்தினி, ஜேன், லோகேஸ்வரி, மங்களேஸ்வரி, அஞ்சலீன், ரஞ்சினி, இரத்தினபால், கவிதா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சங்கமன், ஆதமன் மற்றும் கௌதமன் றேச்சல், அலஸ்ரர், லக்ஷனா, லக்ஷ்மன், யதுமன், நிஷாந்தன், ஜெய்சன், ஜொனதன், யஸ்னா, ஜெய்லன், அருணிகா, நிர்ஷிகா, பைரவி, சிந்தவி, யாதவி, சுஜெந்தவி, இந்துஜன், சங்கவி, ரைந்தவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அல்பேட், எட்வேட், மைக்கல், டியான்ரே, றோஸ், யோய் இமையா ஆகியோரின் ஆருயிர் பூட்டியும், கணேஸ், ரதிகா, சசிகா, சதீஸ், சுகன்யா, றேகன், றுத், துசி, ஜான்சி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 06.01.2023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.00- 7.00 மணிவரையும், 07.01.2023 சனிக்கிழமை பிற்பகல் 2.00 - 5.00 மணிவரை Divinity funeral centre, 209 Kentan Road, HA3 0110 பார்வைக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2023) ஞாயிற்றுக்கிழமை 11. Scarle Road, wen HAO 4st இல் அன்னாரது இடத்தில் காலை 9.30 மணியளவில் ஆரம்பித்து 10.30 மணிவரை நடைபெற்று பூதவுடல் 11.30 மணிக்கு Kensal Green மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:**

பிரித்தானிய தொடர்புகளுக்கு :-கோபிநாத் (கோபி - மகன்) - +44 7940 795 145, பிறேம்நாத் (பிறேமா - மகன்) - +44 772 502 8711, ரகுநாத் (ரகு - மகன்) - 077 1549 3281, சுரேந்திரநாத் (சுரே - மகன்) - 0750 676 2552, ஜெகநாத் (ஜெகன்- மகன்) - 0796 166 2661 , விமல்நாத் - (விமல் - மகன்) - 0774 055 3994, சோபனா- (சோபா - மகள்) - 0753 986 6540, இரத்தினபால் -(துஞ்சு -மருமகன் ) 0781 853 1164 , தேவ்நாத் -(தேவன் - மகன்) - 0741 494 6753

இலங்கை தொடர்புகளுக்கு கோபிநாத் (கோபி - மகன்) 076 253 3361

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### மாட்டீன் அன்றூ றெஜினோல்ட் செல்வநாயகம்

**(Retired Chief Inspector of Excise Department)**

இலக்கம் 665 ஆஸ்பத்திரி வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாட்டீன் அன்றூ றெஜினோல்ட் செல்வநாயகம் கடந்த (06.01.2023) வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜேக்கப் மாட்டீன், றெஜினா (தங்கம்மா) தம்பதி களின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான பிறின்ஸ் எதிர்மனசிங்கி, நன்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஜொவிற்றா கிறேஸ் (புஸ்பா) அவர் களின் அன்புக் கணவரும், சாமினி (கொழும்பு), சுதர்சினி (இலங்கை வங்கி, மட்டக் களப்பு), நிலாந்தினி (நிலா, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பற்றிக், யோனதாஸ், பிரசாந் (ஆசிரியர், யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமானாரும், நிதுர்ஷா, ஜோனத்தன், கபிஷாந், பிரவிஷான், பற்றிக் நிலக்சன் (மொறட்டுவ பல்கலைக்கழகம்), எறிக் பிரவீன் (புனித பத்திரிசியார் கல்லூரி), அல்றின் பிரஷாளினி (யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), சில்வரின் பிரதுர்ஷிகா (யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு பேரனும், சகுந்தலாதேவி (Canada), காலஞ்சென்ற நிர்மலாதேவி மற்றும் துரைநாயகம், மதுரநாயகம், கமலா தேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (09.01.2023) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியள வில் இலக்கம் 665, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 3.30 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக் கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**S.A.Prashanth (மருமகன்)**

(CS/48504)

## மரண அறிவித்தல்



### திருமதி தவமலர் அன்ரன் மரியநாயகம்

அத்தியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமலர் அன்ரன் மரியநாயகம் நேற்று (07.01.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமார் - இராசமணி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை - பிலோமினா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை அன்ரன் மரியநாயகத்தின் அன்பு மனைவியும், பிராங்கிளின் (பிரான்ஸ்) இன் அன்புத் தாயாரும், ரூபினி (பிரான்ஸ்) யின் அன்பு மாமியாரும், டருணிகா (பிரான்ஸ்) வின் பாசமிகு பேர்த்தியும், மகாலிங்கம் - பத்மதேவி தம்பதிகளின் சம்பந்தியும், பத்மாவதி, காலஞ்சென்ற ஜெயலக்ஷ்மி மற்றும் தயாபரநாதன், அன்னஜோதி, சற்குணவதி, திலகவதி, சந்திரகாந்தி, சத்தியபவானி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சேவியட் வில்பிறட், டொமினிக் அல்பிரட், அமலேஸ்வரி, காலஞ்சென்ற சண்முகநாதன், யோகினி, காலஞ்சென்றவர்களான ஜெயக்குமார், கைத்தாம்பிள்ளை மற்றும் யோகநாதன், கேதீஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2023) ஞாயிற்றுக்கிழமை நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.07, புதுவீதி,**
**அத்தியடி.**

(CS/48487)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**தொலைபேசி இல:- 021 222 7668**

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி இராசரத்தினம்

முடமாவடி நல்லூரைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராசரத்தினம் கடந்த (06.01.2023) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னப்பு - ஆசைமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், நவரத்தினத்தின் பாசமிகு கணவரும், இராஜசேகர், இராஜவதி, இராஜதேவி, இராஜேஸ்வரி, இராஜேஸ்வரன், இராஜவதனா, கஜந்தினி ஆகி-யோரின் அன்புத் தந்தையும், தர்மிளா, கனகராசா, ஜெயரூபன், ரவி, சாதனா, சிறீகரன், சபேஸ்நாத் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிவேதா, நிதர்ஷி, நிதர்சன், டினோஜா, சாருஜா, பாரதி, மீரா, ஜெரி, றோஸ்மேரி, ஜெறோனி, ; நிசானி, சாஜனி, மிதுஸ், விபேஷ், ஆரூஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் இராஜலட்சுமி, சந்தானலட்சுமி, மகாலிங்கம், இராசலிங்கம், சிவலிங்கம், தனலட்சுமி, ஜெயலட்சுமி ஆகியோ-ரின் அன்புச் சகோதரனும், நல்லையா, தேவராணி, காலஞ்சென்றவர்களான இரத்தினம், பொன்மலர், துரைசிங்கராசா, துரைஜயா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.01.2023) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.23, சிறீலங்கா வீதி,**
**உடுவில் வடக்கு, சுன்னாகம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

தோற்றம்
09.11.1938

மறைவு
06.01.2023

**021 224 0975, 077 696 1873**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
09 . 01 . 1948

ஆண்டவன் அடியில்
19 . 12 . 2022



## திருமதி செல்வநாயகி பாலேந்திரா

யாழ். வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும், கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வநாயகி பாலேந்திரா கடந்த (19-12-2022) திங்கட்கிழமை அன்று லண்டனில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற முத்தையா, பாக்கியம் தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற Dr.நவரத்தினம், செல்வபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் நாகம்மா அவர்களின் அன்புப் பெறாமகளும், காலஞ்சென்ற பாலேந்திரா (சின்னக்கிளி- துறைமுக மேற்பார்வையாளர்- திருகோணமலை) அவர்களின் அன்பு மனைவியும், நிரஞ்சன் (லண்டன்), நிரோஷன் (யாழ்ப்பாணம்), நிர்மலா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசாதனா(லண்டன்), கார்த்திகா(யாழ்ப்பாணம்), சிவபாலன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், தனுஜன், நிதுஜன், மஹதி, அபிஷயன், அக்சயன், அஸ்விகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், எந்திரி சுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான தவமணிதேவி, கணேசம்மா, தணிகாசலம் மற்றும் நவமணி, தெய்வேந்திரராஜா(இந்திரன்), ஆனந்தராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகேஸ்வரி, காலஞ்சென்ற ராமநாதன், பவளராணி, காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணன், டில்லிராணி, யோகேந்திரன் மற்றும் காலஞ்சென்ற சத்தியேந்திரா, விஜயலட்சுமி, யோகேந்திரா, மனோரதி , ரவீந்திரா, பத்தியேந்திரா, இந்திரராஜ், குமுதினி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுதர்சனன், சசீதரன், பிரபாகரன், பாமினி, பாபுஜி, செந்தூரன், சரண்யா ஆகியோரின் அன்பு மாமியும், பாலகிருஷ்ணன்(சிறி), சிவசுதன் ஆகியோரின் அன்புச் சித்தியும், மைதிலி, தாரணி, அருண், ஆரன், அர்ஜுன் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் பிரித்தானியா லண்டனில் நடைபெற்று பின்னர் Hendon மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

0777 066 008 (கொழும்பு) , 077 321 5595 (கொழும்பு),
077 318 7967 ( யாழ்ப்பாணம்), 0777 032 622 (திருகோணமலை),
+44 7938 480 0077 (லண்டன்), +44 74 7921 2512 (லண்டன்)

## தேவை

மேசன் மற்றும் தொழிலாளர்கள் யாழ்.நகர் மற்றும் பருத்தித்துறை பிரதேசங்களுக்குத் தேவை.

077 885 7406, 077 756 9686, 077 227 1217

## வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தை Galle Road ற்கு அருகாமையில் 3Bedroom Apartment உடனடி விற்பனைக்கு

Contact : 076 058 9822

## David Pieris Motor Company (Pvt) Limited

Here's your opportunity to join our workshop and service team of David Pieris Motor Company (Private) Limited (DPMC), the largest automotive company and a member of the David Pieris Group. The Group has diversified interests in automotive products, financial services, logistics & warehouse operations, eco - friendly agribusinesses, racing & leisure, information and communication technologies.

We offer a secure and conducive climate with career growth for our dynamic team members.



### Service Executive – DPMC Workshop Jaffna

**Responsibilities**

- Ensure smooth functioning of repairs and services at the DPMC Workshop - Jaffna for Bajaj and KTM vehicles.
- Identify customer requirements and manage customer complaints by positive interactions with the customers.
- Ensure timely delivery of vehicles to customers and share knowledge of vehicle maintenance with customers.
- Monitor and action on pending jobs.
- Maintain workshop facilities, tools and equipment in good condition.
- Identify training needs of subordinates and facilitate required trainings.

**Requirements**

- A Degree in Mechanical Engineering / Motor Mechanics or an equivalent qualification from a recognized institution.
- 3 - 5 years hands on experience in the Automobile Industry.
- Knowledge and experience in using computer based diagnostic tools.
- Proficiency in MS Office (MS Excel / MS Word / MS PowerPoint) coupled with excellent verbal and written communication skills in Tamil/English.
- Willing to undergo a 12-month training programme at DPMC Workshop in Madapatha and Training Centre in Bandaragama.

If you feel that you measure up to our expectations, apply in confidence by email or post, within seven (07) days of this advertisement, providing contact details of two non-related referees and indicating the position applied for, in the subject line or top left corner of the envelope.

David Pieris
Group of Companies

Deputy General Manager – Human Resources
David Pieris Motor Company (Private) Limited
No. 120, 120A
Pannipitiya Road
Battaramulla
Email: careers@dpmco.com

# துயர் பகிர்கின்றோம்



சாமியன் அரசடி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், புலோலி தெற்கை புகுமிடமாகவும், அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட (உன்னத சாய் பக்தையான)

## அன்னை
## சிவாஜினி ஆனந்தகணேசன்

(பட்டயக் கணக்காளர்)

பிறப்பு
27.07.1953

பிரிவு
04.01.2023

எங்கள் ஆலய செயற்பாடுகளில் உன்னத பங்காற்றிய அமரர் திருமதி சிவாஜினி ஆனந்தகணேசன் அன்னையின் பிரிவால் துயருறும் உறவுகளின் துயரில் பங்கெடுப்பதோடு அன்னாரின் ஆத்மா சீரடி சாய்நாதர் பாதக் கமலத்தில் நித்திய இளைப்பாறல் பெற பிரார்த்திக்கின்றோம்.

**கருணையூர் ஸ்ரீ அபய**
**சீரடிசாய்நாதர் ஆலயத்தினர், கரவெட்டி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலைவாய்ப்பு

கோண்டாவிலில் அமையப் பெற்றுள்ள LOLC புதிய கிளைக்குப் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

1) கிளை முகாமையாளர் Degree / Other Professional Qualification.
2) குழு முகாமையாளர் - A/L சித்தி / முன் அனுபவம்
3) நிதி திட்டமிடலாளர் - O/L சித்தி

(CS/48511)

தொடர்பு :- 077 560 2579

## வீடுகள் விற்பனைக்கு

சாவகச்சேரி, கல்வயல் பகுதியில் 2 வீடுகள் விற்பனைக்கு உண்டு.
இந்து மதகுருமார்கள், சைவ வாழ்க்கை முறையைப் பின்பற்றுபவர்களுக்கு மிகவும் பொருத்தமான சூழலில் அமைந்துள்ளது.

01. நான்கு அறைகள், இரண்டு hall, attached bathroom கொண்ட 1 3/4 பரப்புக் காணியில் அமைந்த 32 அடி வீடு.
02. மூன்று அறைகள் கொண்ட attached bathroom உடனான 1 1/2 பரப்புக் காணியில் அமைந்த 32 அடிவீடு.

(CR/38971)

தொடர்புகளுக்கு: 076 400 3059

## வேலையாட்கள் தேவை

No. 226, Main street Jaffna எனும் இடத்தில் இயங்கிவரும் V.V. Mart & Constractions எனும் நிறுவனத்துக்கு வேலையாள்கள் தேவை.

1) Data Entry Operator ( ஆண் / பெண்)
2) 21 - 35 (வயதினர்)
3) A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது.

கட்டாயமாக சுயவிபரக் கோவையுடன் வருகை தரவும்.

(CS/48490)

தொடர்பு :- 077 555 2142, 074 016 5425


## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 12 . 1944



மறைவு 05 . 01 . 2023

### திருமதி இராசலிங்கம் மீனாட்சிஅம்மா

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலிங்கம் மீனாட்சிஅம்மா கடந்த (05.01.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் அமரர் இராசலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், வேலுப்பிள்ளை முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், விக்கினேஸ்வரன், சிவனேஸ்வரன், மகேஸ்வரன், விக்கினேஸ்வரி, சிவனேஸ்வரி (ஆசிரியர், யா/இணுவில் மத்திய கல்லூரி), சர்வேஸ்வரன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், நல்லூர் பிரதேச சபை), சண்முகேஸ்வரன் (கனடா), மகேஸ்வரி, கெங்கேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், விக்கினேஸ்வரி, கிருஷ்ணபவானி, புனிதவதி, உதயசோதி (சோதி பேக் ஹவுஸ்-இணுவில்), வில்வராஜன், கிருஷா, திருமகள், சச்சிதானந்தன், தர்சினி ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற பாலசுந்தரம், மங்கையற்கரசி, வைத்தீஸ்வரன் (கனடா), லீலாவதி, நித்தியானந்தன் (கனடா), புஸ்பராணி (கனடா), விவேகானந்தன் (ஜேர்மன்), பாலசோதி (கனடா), காலஞ்சென்ற பாக்கியவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஐங்கரன், அபிராமி, வைஷ்ணவி, லிகிதரன், துஸ்சந்தினி, கீர்த்தனா, கிருஷிகா, கீர்த்திகன், அஜித், அஜிந்தா, காலஞ்சென்ற எழிழன், இந்துஜன், விஸ்வக்சன், யாஜினி, கார்த்திகன், ஜேவிதன், அதியா (கனடா), வைசாயினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2023) ஞாயிற்றுக்கிழமை இணுவில் தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் மு.ப. 11.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 22681) 1/6

## மரண அறிவித்தல்

பிறப்பு 05 . 04 . 1953



இறப்பு 03 . 01 . 2023

### திருமதி பத்மாவதி நாகேஸ்வரன்

யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகவும், அமெரிக்கா பொஸ்ரனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி நாகேஸ்வரன் கடந்த (03.01.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சண்முகநாதன் நாகேஸ்வரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான விவேகானந்தன் - கமலாம்பிகை தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும், தர்சினி (Canada), கஜீந்தன் (USA), மயூரன் (USA)ஆகியோரின் பாசமிகு தாயாரும், நாகேஸ்வரி அரியகுட்டி (Canada), வசந்தமலர் பரமசிவம் (Canada), சாந்தகுமார் விவேகானந்தன் (USA) ஆகியோரின் அன்புச் சகோதரியும், டேவிட், மர்லின் ஆகியோரின் மாமியாரும், எபடி, அமயா, சென்யா, லின்டன், ஜெய்சி ஆகியோரின் பேர்த்தியும், அட்ரிம்மாவின் பூட்டியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2023) ஞாயிற்றுக் கிழமை 11 மணியளவில் New Hamashire இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

077 653 4044, 077 410 4752

## மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 07 . 1953



இறப்பு 07 . 01 . 2023

### திரு.குமாரசாமி பாஸ்கரன் (வாஸ்)

யாழ்ப்பாணம் நீராவியடியைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கு 7 ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட திரு. குமாரசாமி பாஸ்கரன் (வாஸ்) நேற்று (07.01.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாராசமி நாகபூசணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அகிலாண்டநாயகியின் அன்புக் கணவரும், பாக்கியலட்சுமி மகேந்திரம், விஜயலட்சுமி தவராசா, தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கௌசல்யா, சுவேந்திரன், பிரதீபா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமார், அருளினி, சசிகுமார் ஆகியோரின் பாசமிகு மாமனும், சூர்யா மதுமிதன், நிறஞ்சனா, கீர்த்தன், கினுசன், கிஹான், சுசிஸ்கா பவிசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வேலணை மேற்கு,
வேலணை -7.

தகவல்:
குடும்பத்தினர்.

(cs 4859) (2.6)

### இயற்கை உரம் பகிர்ந்தளிப்பு இன்று

யாழ்., ஜன. 8

மானிப்பாய் பிரதேச சபையால் கல்லுண்டாய் இயற்கை உரம் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கும் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு, மானிப்பாய் கலாசார மண்டபத்தில் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் ஆளுநர் ஜீவன் தியாகராஜா பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

(ஓ-5)

### திருவாசகம் முற்றோதல்

யாழ்., ஜன. 8

குப்பிழான் தெற்கு வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய வருடாந்த திருவாசகம் முற்றோதல் இன்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவுள்ளது. அதிகாலை 5.30 மணியளவில் விசேட அபிஷேக பூசை வழிபாடுகள் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து காலை 6 மணிக்குத் திருவாசகம் முற்றோதல் ஆரம்பமாகி நடைபெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

(ம-14-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MOBILE



UNLIMITED
WORK
& PLAY
Social Media & Office APP பலவற்றை உள்ளடக்கிய ஒரே DATA Package

7 நாட்கள் ரூ. 280/-
30 நாட்கள் ரூ. 990/-

பக்கேஜ் இனை செயற்படுத்துவதற்கு
SELFCARE APP இனை பயன்படுத்துங்கள்
உரிய தொகையை ரீலோட் செய்யுங்கள்
அழையுங்கள் #170#

Google | Zoom | Microsoft Teams | Google Meet
Facebook | WhatsApp | YouTube | Office 365
Messenger | TikTok | Instagram | Spotify

SLTMOBITEL
நிகரற்ற இணைப்பு
www.sltmobitel.lk

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது. TRC/M/Pro/22/02 *வரி உள்ளடக்கப்பட்டுள்ளது.


## வீடு வாடகைக்கு

167, நாயன்மார் வீதி, நல்லூரில் இரண்டு அறை, இரண்டு வரவேற்பறையுடைய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 076 094 7213

## பணிப்பெண் தேவை

வவுனியா நகரில் தாயை இழந்த 23 வயதான பெண்ணுடன் சொந்தக்கடையை நடத்துவதற்கு உதவிபுரிய பணிப்பெண் ஒருவர் உடன் தேவை. (AVA/001071)

தொ.பே :- 070 484 5366

## விற்பனைக்கு

வீதியோரமாக மார்டின் றோட்டில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு.
தாவடியில் காணி விற்பனைக்கு.
மீசாலையில் வீடு விற்பனைக்கு.
(CS/48506)

Contact Number
Vijenthan Kunaradnam
+94 77 227 6173


அறுசுவை உணவுகளிற்கு சுத்தமான

# றோயல் நெய்



உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை தரமான "றோயல் நெய்" கொண்டு தயாரித்த அறுசுவை உணவுகளுடன் கொண்டாடி மகிழுங்கள்

Packed By:-
Royal Industries®
Marketed By:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222 567

குறிப்பு: யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும், சுப்பர்மார்க்கட்களிலும், பலசரக்கு கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.


## தென்னந்தோட்ட பணியாளர்கள் தேவை

பளையில் அமைந்துள்ள தென்னந்தோட்டத்தில் குடும்பமாக தங்கி நின்று வேலைசெய்ய வேலையாட்கள் தேவை. (ரக்டர் ஓடத்தெரிந்தவர்களும் தொடர்புகொள்ளலாம்)

077 651 0696
077 303 8787

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி, பல்கலைக்கழகத்துக்கு அண்மையில், 3 படுக்கையறை, 2 விருந்தினர் அறை, 2 குளியலறை, விறாந்தை, வாகன தரிப்பிட வசதி கொண்ட முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட வீடு வாடகைக்கு உண்டு

தொடர்பு இல 077 3616 796

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை. (CS/48503)

077 472 5474, 077 326 7769

## தேவை

அனுபவமுள்ள களஞ்சிய காப்பாளர், கணினி அறிவுள்ளோர் தேவை.
இல.15, பிறவுண் வீதி,
4ஆம் ஒழுங்கை.

0777 722 215

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, இலங்கை வங்கிக்கு அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு உகந்தது.

T.P: 077 6696 814

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் பிரதான இடங்களில் வீடுகள், காணிகள் விற்பனைக்கு உண்டு.
கல்வியங்காடு GPS வீதிக்கருகாமையில் வீடு விற்பனைக்கு, Brown road நல்ல வீட்டுடன் கூடிய வீடு விற்பனைக்கு, கச்சேரி, நல்லூர் வீதிக்கருகாமையில் வீடு விற்பனைக்கு
Rich WIN

Contact : 077 77 00 582

## பணிப்பெண் தேவை

ஊர்காவற்துறையில் உள்ள வீடொன்றில் வயோதிபப் பெண் ஒருவரைப் பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.

தொடர்பு : 077 440 7103 (CS 48501)

## விற்பனைக்கு

சங்கரத்தையில் புதிய வீடு விற்பனைக்கு.
நல்லூரில் வீடு விற்பனைக்கு.
(CS/48507)

Contact Number
Sailakshan Uthayasoorian
+94 77 221 5531

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ 43 வயது மணமகனுக்கு மணமகள் தேவை.
(விவாகரத்து ஏற்றுக் கொள்ளப்படும்)
தொடர்புகளுக்கு (CS/48510)

077 905 8615 (வைபர் & வட்ஸ்அப்)

## விற்பனைக்கு

1) Steel Jack (இரும்பு முட்டுக்கள்)
பாவித்து சில நாட்கள் ஆனது
2) Hoist (Italy Iori)
300kg with stand and backets 6 months used
3) பாவித்த Shutter Boards

தொடர்புகளுக்கு: 077 3 222 788

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியில் இருபாலைச் சந்திக்கும் கோப்பாய்ச் சந்திக்கும் இடையில் (லில்லி கோம் அருகாமையில்) 4 பரப்பு சற்சதுரக் காணி விற்பனைக்குண்டு.

077 358 0922

## வீட்டுப் பணிப்பெண் தேவை

நல்லூர் பகுதியில் 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு (வைத்தியர்) வீட்டில் தங்கியிருந்து வேலைசெய்ய 40-65 வயதிற்குட்பட்ட பணிப்பெண் ஒருவர் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

T.P: 077 298 7556

## காணி விற்பனைக்கு

யாழ். கொழும்புத்துறை மேற்கு, விதானையார் வீதியில் (பிரதான வீதியிலிருந்து 2 ஆவது காணியாக) 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. அண்மையில் ஆலயம், பாடசாலை உள்ளது. (cr 38993) (2.6)

077 509 2541

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations

தயாவதி தனுராஜ்



ஜிவிதா றாஜித்



அண்மையில் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் **கல்வி முதுமாணிப்பட்டம் (ஆங்கில மொழி)** பெற்றமையை மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
உறவினர்கள்
எழுதுமட்டுவாழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 14 . 02 . 1929

மறைவு 01 . 01 . 2023

சுதுமலை கிழக்கை பிறப்பிடமாகவும் கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்டவரும் எமது கழக ஆர்வலர் திரு.அருண்குமார் அருணாச்சலம் அவர்களின் அன்பு மாமியாருமாகிய

**திருமதி பராசக்தி சுப்பிரமணியம்**

**(ஓய்வுநிலை ஆசிரியை சுதுமலை சின்மிய பாரதி மகா வித்தியாலயம்)**

அவர்கள் 01.01.2023 அன்று கனடா Toronto வில் இயற்கையெய்தினார். அன்னாருக்கு எமது இறுதி அஞ்சலியை தெரிவிப்பதுடன், அமரரின் இழப்பால் துயறுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆறுதலினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம்**
**வளர்மதி நிறைவாழ்வகம்**

**சம்பியன் லேன்,**
**கொக்குவில்.**

## மரண அறிவித்தல்

### அருட்சகோதரி றீற்றா கஸ்மீர் தி.கு



சில்லாலை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிட மாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி றீற்றா கஸ்மீர் தி.கு நேற்று (07.01.2023) சனிக்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (09.01.2023) திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு இறம்பைக்குளம், வவுனியா, புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், வவுனியா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**தகவல்:**
**அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்**
**மாகாணத் தலைவி,**

**121, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS 22692) 1-6

## மரண அறிவித்தல்



பிறப்பு 03 . 04 . 1941

இறப்பு 07 . 01 . 2023

### பரமசிவம் கனகாம்பிகை (கமலா)

தொல்புரம் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமசிவம் கனகாம்பிகை (கமலா) நேற்று (07.01.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு சிதம்பரம் தம்பதியரின் பாசமிகு மகளும், அமரர் கனகரத்தினம் பரமசிவம் அவர்களின் அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், இந்திராதேவியின் பாசமிகு தாயாரும், தேவநாதனின் பாசமிகு மாமியாரும். பிரிஷா, ரிஷிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான இராமநாதன், அருணாசலம், உமாதேவி, நவமணிதேவி ஆகியோரின் சகோதரியும், அமரர் திருநாவுக்கரசு, தங்கப்பிள்ளை, அமரர் பரம்சோதி, ஆச்சிப்பிள்ளை, அமரர் பத்மநாதன் ஆகியோரின் மைத்துனியும், சிவகுமாரன், சிவயோகன், தயாநிதி ஆகியோரின் சிறியதாயும், குமுதினி, தயாளினி, கருணாகரன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுத்திக்கிரியைகள் இன்று (08.01.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தொல்புரம் மேற்கு, சுழிபுரம்,**
**யாழ்ப்பாணம்.**
**077 501 8250**

**தகவல்:**
**தேவநாதன் இந்திராதேவி**
**குடும்பத்தினர்.**

(CS 22697) 1/6

### வீடு வாடகைக்கு

கிளிநொச்சியில் A9 வீதிக்கு அருகில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 076 080 1748, 076 451 1436

### பணிப்பெண் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.
**077 165 8524**

## வேலைவாய்ப்பு

யாழ். மாவட்டத்தில் கட்டட நிர்மாண வேலை செய்வதற்கு காப்பென்ரர் (சட்டரிங் வேலை தெரிந்தவர்கள்) கூலியாட்கள் உடன் தேவை.

நாள் / கிழமை அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு:**
**0777 120 945**

## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை சிவஞானம் (சிவம்)

அல்லைப்பிட்டியை பிறப்பிடமாவும், 336, கஸ்தூரியார் வீதி, யாழ்ப் பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிவஞானம் நேற்று (07.01.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புச் கணவரும், வியஜசேகரம், வினோதன், பாலராணி, நிறஞ்சலா, சபீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2023) ஞாயிற்றுக் கிழமை பி.ப 3.00 மணியளவில் அவ்ரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 22695) 1/6

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 02 . 01 . 1952

இறப்பு 09 . 12 . 2022

### அமரர் கந்தையா வில்வராசா

**(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், ஸ்ரீலங்கா ரெலிகொம்)**

எங்கு தேடினாலும் கிடைக்காத
பொக்கிஷம் நீங்கள் அப்பா
கண்கள் குளமாக வலியுடன்
என் வாழ்க்கை நகர்கிறது
பிரசவத்தில் என் தாயாக நின்றாய்
என் பிள்ளைகளின் பக்குவம் காத்தாய்
இன்று உங்கள் வரவுக்காய் காத்திருக்கின்றேன்
மீண்டும் என் மகனாய் பிறந்து வாருங்கள்
உங்கள் கடன் தீர்க்க இந்த ஒரு
ஜென்மம் போதாது எனக்கு..

**பாரதி வீதி, கம்பர்மலை.**

உங்கள் பிரிவால் ஏங்கும்
**குடும்பத்தினர்.**

## முல்லைத்தீவு இளைஞன் பெலாரஸ் - போலந்து எல்லையில் சாவு!

முல்லைத்தீவு, ஜன. 8

சட்டவிரோதமாக ஐரோப்பாவுக்குள் நுழைய முயன்ற முல்லைத்தீவு இளைஞர் ஒருவர், பெலாரஸ் - போலந்து எல்லையில் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. முல்லைத்தீவை சேர்ந்த இரத்னராசா சஜந்தன் (வயது-33) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இந்த இளைஞர் தொடர்பில் உண்மையான தகவல் அறிய முடியாது குடும்பத்தினர் பெரும்சோகத்தில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பரந்துபட்ட...

கூட்டமைப்பின் தற்போதைய 3 பங்காளிக் கட்சிகளும் தனித் தனியாகவே தேர்தலைச் சந்திக்கவேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு நேற்றுத் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் பங்காளிக் கட்சிகளுக்கு தங்கள் பரிந்துரையை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முன்வைத்து ஆராயவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன் மற்றும் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் நேற்றுக் கலந்துகொள்ளவில்லை.

இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்தில் ஜனாதிபதியுடனான பேச்சுத் தொடர்பிலேயே மத்திய குழு உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பதிலளித்தார்.

'ஜனாதிபதி ரணில் கூறும் விடயங்களை அதிகாரிகள் நடைமுறைப்படுத்த பின்னடிக்கிறார்கள். குறிப்பாக இராணுவத்தினர் தங்களது நிலைப்பாடுகளிலிருந்து விட்டுக்கொடுக்கின்றார்கள் இல்லை. அரசியல் கைதிகள் விடயத்தில் சாதகமான நிலைப்பாடுகள் உள்ளன. நாளை மறுதினம் 10ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரையிலான தொடர் பேச்சுக்களில் எங்களின் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவோம்' என்று குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் ஆராயப்பட்டது. தமிழ்த் தேசியக் கட்சிகளை இணைத்து பரந்துபட்ட கூட்டமைப்பாக போட்டியிடும் யோசனை கட்சித் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தவிர்ந்த ஏனைய அனைவராலும் நிராகரிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தற்போதுள்ள 3 பங்காளிக் கட்சிகளும் தனித்து போட்டியிடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்துக்கும் அனைத்து வட்டாரங்களுக்கும் மூன்று கட்சிகளும் வேட்பாளர்களை நிறுத்துவது என்றும், தமிழ் அரசு, ரெலோ, புளொட் ஆகிய மூன்று கட்சிகளும் தங்களது சொந்தக் கட்சியின் சின்னங்களிலேயே போட்டியிடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு தேர்தலில் போட்டியிடும்போது, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒருவரையொருவர் தாக்கிப் பேசுவதில்லை என்றும், மூவரில் யாருக்காவது வாக்களிக்கலாம் என்றே கோருவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இதன் ஊடாக தற்போதைய தேர்தல் முறைமையில் கூடிய ஆசனங்களை மூன்று கட்சிகளும் கைப்பற்றி மூவரும் இணைந்து ஆட்சியமைக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

இது தொடர்பில் பங்காளிக் கட்சிகளுடன் நாளை மறுதினம் 10ஆம் திகதி பேச்சு நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (அ-ஒ-5-22)

### தமிழ்க்...

மைப்பை பதிவு செய்தல், பொதுச் சின்னம் ஆகியன தொடர்பில் பங்காளிக் கட்சித் தலைவர்களான சித்தார்த்தன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கோரியிருந்த நிலையில், அந்தக் கோரிக்கையை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு ஏகமனதாக நிராகரித்துள்ளது.

மேலும், விக்னேஸ்வரன், அனந்தி சசிதரன், சிறிகாந்தா, சிவாஜிலிங்கம் போன்றோர் முறையே இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ரெலோவிலிருந்து பிரிந்து சென்று புதிய கட்சிகளை ஆரம்பித்தவர்கள். எனவே அவர்கள் மீளவும் தங்களது சொந்தக் கட்சிக்கு திரும்ப வேண்டும். அதேபோன்று சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியினரை கூட்டமைப்புக்குள் உள்வாங்குவது தொடர்பில் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழு தீர்மானிக்கலாம் என்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுவில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5-22)

### தனித்துப்...

இதேவேளை- தமிழ் அரசுக் கட்சி கூட்டமைப்பிலிருந்து தங்களை இவ்வாறு போட்டியிடுவதற்கு நிர்ப்பந்திக்குமாக இருந்தால் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து பரந்துபட்ட கூட்டமைப்பு அமைத்துப்போட்டியிட வேண்டிய சூழல் ஏற்படும் என்றும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

தேர்தலில் பரந்துபட்ட கூட்டமைப்பின் அவசியத்தை வலியுறுத்தி கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் அரசுத் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா ஆகியோருக்கு பங்காளிக் கட்சித் தலைவர்களால் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்தை உதாசீனம் செய்யும் வகையிலேயே இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு நேற்றுத் தீர்மானம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

### மதத்தலைவரின்...

மன்னார் மாவட்டத்திலுள்ள 5 பிரதேச செயலர்களுக்கும், வடக்கு மாகாண ஆளுநரின் செயலரால் நேரடியாக கூட்டத்துக்கான அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரதியே மாவட்டச் செயலருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மன்னார் ஆயர் இல்லத்துக்கு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நாளைய தினம் செல்லவுள்ளார். இதன் போது பிரதேச செயலர்களை அழைத்து உணவுப் பாதுகாப்புத் தொடர்பான கூட்டத்தை நடத்தவுள்ளார்.

நிர்வாக ரீதியிலான கூட்டத்தை மதத் தலைவரின் இல்லத்தில் நடத்துவது தொடர்பில் அதிகாரிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். மன்னார் மாவட்டச் செயலகத்திலோ ஏனைய அரச திணைக்களத்திலோ நடத்தாமல் மதத் தலைவரின் இல்லத்தை தெரிவு செய்தமை ஏன் என்றும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (அ-ஒ-5)

### கர்ப்பிணித்...

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 20 ஆயிரம் ரூபாவாக போஷாக்குக் கொடுப்பனவு வழங்கும் திட்டம் இந்த வருடம் 45 ஆயிரம் ரூபாவை வழங்கும் திட்டமாகத் திருத்தப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

கர்ப்ப காலத்தில் 6 மாதங்கள் மற்றும் தாய்ப்பால் கொடுக்கும் போது 4 மாதங்கள் என 10 மாத காலத்துக்கு புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மாதாந்தம் 4 ஆயிரத்து 500 ரூபா வீதம் 10 மாதங்களுக்கு போஷாக்கு கொடுப்பனவு வழங்கப்படும் என பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-ஒ-இ)

### நல்லூர்...

தில் கடந்த 2016ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தேசிய தைப்பொங்கல் விழா இடம்பெற்றது. அதில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொள்வதாகத் தெரிவிக்கப்பட்டபோதும் இறுதி நேரத்தில் அவர் பங்கேற்கவில்லை. அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலேயே நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிலையில் 8 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் யாழ்ப்பாணத்தில் தேசிய தைப்பொங்கல் விழா நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நல்லூர் சிவன் கோயிலில் பி.ப. 3 மணிக்கு பொங்கல் நிகழ்வு நடைபெறும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொங்கல் பானையில் அரிசியை போட்ட பின்னர், அங்கிருந்து துர்க்கா மணி மண்டபத்துக்கு மங்கல இசை முழங்க அழைத்துச் செல்லப்படுவார். அங்கு அரங்க நிகழ்வுகள் நடைபெறும்.

இந்த நிகழ்வில் இலங்கையிலுள்ள அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் கலந்து கொள்வதற்கான அழைப்பு அனுப்பப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-5)

### கப்பல்...

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

வட மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கப்பல் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சின் செயலர் அடங்கிய குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்தனர். காங்கேசன்துறையில் இறங்குதுறை அமைத்தல், சுங்கத் திணைக்களத்தை நிறுவுதல் உள்ளிட்ட பணிகளை உடனடியாக ஆரம்பிப்பது தொடர்பில் நேரில் சென்று ஆராய்ந்தனர்.

அதன் பின்னர் வடக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். வடக்கு மாகாண சபையின் உதவிகள் எந்த அடிப்படையில் தேவைப்படும் என்பதை ஆளுநருக்கு அவர்கள் தெளிவுபடுத்தினர். (அ-ஒ-20)

### தென்னிலங்கைக்...

ஜனநாயக இடதுசாரி முன்னணி கட்டுப் பணம் செலுத்தியுள்ளது.

வடக்கின் ஏனைய உள்ளூராட்சி சபைகளில் தேர்தலில் போட்டியிடுவதற்கு எந்தவொரு தரப்பும் இதுவரை கட்டுப்பணம் செலுத்தவில்லை. (அ-ஒ-5-18)

### யாழ்...

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுவருகை தந்த அவர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சில கட்சிகளே யாழ்ப்பாணத்தில் இதுவரை காலமும் செயற்பட்டன. மக்கள் மாற்றத்தை எதிர்பார்த்துள்ளனர். அந்த மாற்றத்தை வழங்குவதற்காக யாழ்ப்பாணம் உட்பட இலங்கை முழுவதும் தனித்துப் போட்டியிடவுள்ளோம். தேர்தல்களில் அடிப்படையான பிரதேச சபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று மாகாண சபை நாடாளுமன்றம் என்று அனைத்துத் தேர்தல்களிலும் எதிர்காலத்தில் போட்டியிடுவோம் - என்றார். (அ-ஒ-20)


## மரண அறிவித்தல்

பிறப்பு 06 . 08 . 1929



இறப்பு 06 . 01 . 2023

## வயிரமுத்து தங்கம்மா (குழந்தை)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வயிரமுத்து தங்கம்மா (குழந்தை) அவர்கள் 06.01.2023 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி சின்னாச்சி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி வயிரமுத்துவின் அன்பு மனைவியும், தேவராணி, இராஜதுரை, ஞானேஸ்வரி, கமலநாதன், பத்மினி, இராஜேஸ்வரி, பாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சின்னத்தம்பி, சிற்றம்பலம், மகேஸ்வரி, மாலினி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் விஜயசோதி ஆகியோரின் அன்பு மாமியாரும், இராசையா, நல்லையா, செல்லம்மா, தம்பையா, நல்லம்மா, இராசம்மா, இராசேந்திரம், கோபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் அஞ்சலி நிகழ்வுகளுக்காக வைக்கப்பட்டு. அதனைத் தொடர்ந்து 09 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இறுதிக்கிரியைகள் நடைபெறும், தொடர்ந்து அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் வடக்கு, இருளன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு அன்னாரது பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் எல்லோரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
075 090 1261

(cs.48498) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். நகருக்கு அண்மையில் தங்கிநின்று குழந்தையை பராமரிப்பதற்கும், வீட்டு வேலை செய்வதற்கும் உகந்த நல்லொழுக்கமுள்ள பணிப்பெண் தேவை.

**077 308 3007**

## மணமகள் தேவை

1989 இல் பிறந்த செவ்வாய்க் குற்றமுள்ள உள்நாட்டு இந்து ஐம்பொன் சிலைகள், திருவாசிகள், கொடித்தம்பம், கலசங்கள் செய்யும் முதலாளி மணமகனுக்கு உள்நாட்டு மணமகள் தேவை.

**074 111 7874**

(CS/22653)

## வீடு, காணி வியாபாரம் வாங்க, விற்க



தெல்லிப்பளையில் 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**விலை - 5,500,000.00**

ஏழாலையில் அழகிய புதிய மாடி வீடு விற்பனைக்கு. 4 1/4 பரப்பு

**விலை - 36,000,000.00**

**தரகர்கள் தேவையில்லை**

டிவாகர் தவவிநாயகன்

**+9477 221 6683**

## காணி விற்பனைக்கு

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் K.K.S. வீதியில் 1 1/2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

(cs22618) (2.6)

**077 315 1521**

## பணியாளர்கள் தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள சுப்பர் மார்க்கட் நிறுவனத்துக்கு பணியாளர்கள் தேவை.

ஆண். பெண் இருபாலாரும் தேவை.

1. Packing (பொதி செய்பவர்)
2. Track Maintainer

தொ.பே :- **075 757 5166**

## காணி, தென்னங்கன்று விற்பனைக்கு

- யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட A.V. றோட்டில் 5 பரப்பு வெற்றுக்காணி உடனடி விற்பனைக்கு உண்டு. (பரப்பு 16 லட்சம்) யூரியா -20,000
- வருட இறுதி விழாக்களை முன்னிட்டு 3.5 வருட தரமான தென்னங்கன்றுகள் மலிவான விலைக்கு உண்டு.

**076 219 5666, 070 566 8015**

## ENGLISH CLASSES

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

ஆர்வமுள்ள சகலருக்கும்

**From Grade 7 to Graduates**

தொழில்புரிபவர்களுக்குமானது.

K.Ganesh B.A **077 766 8725**

## உழவர் அரிசிக்கடை மருதனார்மடம் சந்தை

**உழவர் திரு நாள் 2023 தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மலிவு விற்பனை**

ஆட்டக்காரி Rs. 223.00 கிலோ (10 கிலோ Rs. 2230.00)

ஆட்டக்காரி தீட்டல் Rs. 220.00 கிலோ (பொங்கல் அரிசி)

மிளகாய் தூள் Rs. 1800.00 கிலோ

வறுத்த சிவப்பு அரிசி மாவு Rs. 370.00கிலோ

(CS 22720)(3/6)

## காணி உடனடி தேவை

இலங்கையில் பிரபலமான தனியார் பல்கலைக்கழகத்தின் கிளை ஒன்றினை அமைப்பதற்கு KKS அல்லது பலாலி வீதியை அண்டிய பகுதியில் 10 ஏக்கருக்கும் அதிகமான அளவு உறுதிக்காணி உடனடி தேவையாக உள்ளது.

தொடர்புகளுக்கு

**076 719 9789**

## திருவாசக முற்றோதல்

கிளி., ஜன. 8

கிளிநொச்சி, ஜெயந்திநகர் மகாதேவ ஆச்சிரமத்தில் நாளை திங்கட்கிழமை காலை 8 மணி முதல் திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெறவுள்ளது என அறங்காவலர் நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர்.

(ச)

## வேலை வாய்ப்பு

- **முன்பள்ளி ஆங்கில, தமிழ், கணித ஆசிரியர்**
  (முன்பள்ளி Diploma முடித்தவர்கள் / பழக விரும்புபவர்கள்)
- **ஆடல், பாடல் தெரிந்த அறிவு சார்ந்த கல்வியை ஊட்டுபவர்கள்**
  அனுபவமுள்ளவர்கள் மட்டும்
- **முன்பள்ளி இணைப்பாளர்**
- **VTA நிறுவனத்தில் முன்பள்ளி Diploma முடித்தவர்களுக்கு** முன்னுரிமை வழங்கப்படும்
- **தகுதிகளுக்கு ஏற்ப தகுந்த சம்பளமானது வழங்கப்படும்**

**மல்லாகம், வட்டுக்கோட்டை, சண்டிலிப்பாய், இனுவில், தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்**
ஆகிய இடங்களுக்கு ஆள்கள் தேவைப்படுகின்றனர்.

**நேர்முகத் தேர்வு நடைபெறும் திகதி: 10.01.2023 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 - 5.00 மணிவரை நடைபெறும்.**

### கணினி நிலைய வேலைவாய்ப்பு

- MS Office, Photoshop தெரிந்தவர்கள் பழக விரும்புபவர்களுக்கு 6 மாதம் பயிற்சி வழங்கப்படும.

**நேர்முகத்தேர்வுக்கு சமூகமளிக்கும்போது உரிய ஆவணங்களுடன் வருகை தருதல் வேண்டும்**

### Work Opportunity

- English Teachers (6 Month,1 year or 2 years Contract Salary - 23,000 /- Permonth

நேர்முகத் தேர்வுக்குரிய இடம்: **Little Masters' Montesoori**

கே.கே.எஸ். றோட், சிவபதி, இனுவில் (இனுவில் மத்திய கல்லூரிக்கு அருகில்)

**T.P.: 077 337 4261**

## நோர்வே சைவ இந்து கலாசார மன்றம், ஸ்ரீ ஜெயதுர்க்கை அம்மன் ஆலயம் ஒஸ்லோ நோர்வே

## 2023/ 2024 ஆண்டுக்கான ஆலயக்குருக்கள் / சிவாச்சாரியாருக்கான விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன.

### பணியாற்றும் காலம் 1 வருடம்

**தகைமைகள்**

1. குருக்கள் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.
2. மகோற்சவ குருக்களாகத் தொடர்ந்து 4 வருடங்கள் பிரபல்யமான ஆலயங்களில் பணியாற்றி இருத்தல் வேண்டும்.
3. குறைந்தது 6 வருடங்கள் ஆலயக் குருக்களாகப் பணியாற்றி இருத்தல் வேண்டும்.

**மேலதிக தகைமைகள்**

1. பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. சிறப்புத் தகைமைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

**வேதனம்**

நோர்வே வேதன முறைமைகளுக்கமைவாக வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவுதிகதி :- 15.02.2023 முன்பாக

**thurkaiamman@gmail.com**

என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.

(CS/22750)

## A/L 2024 English Medium Classes

Biology, Chemistry, Bio Systems Texhnology, Science for Technology and Agricutural Science

(CS 48444)(3/6)

**075 987 5566**

## பணியாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல புடைவை விற்பனை நிலையத்துக்கு முன்னனுபவம் உள்ள மற்றும் பழக விரும்பும் ஆண்/ பெண் பணியாளர்கள் தேவை. சம்பளம் 20,000/= முதல் 40,000/= ரூபாவரை வழங்கப்படும்.

**074 015 7095**

## வீடு வாடகைக்கு

கலாசாலை வீதி, திருநெல்வேலியில் 3 அறைகள், ஹோல், சமையலறையுடன் அமைந்த புத்தம் புதிய ஆடம்பர வீடு மாத வாடகைக்கு உண்டு.

**076 177 34 46, 077 926 5264**

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி ஆடியபாதம் வீதி கேணியடி வைரவர் கோவில் அருகில் 2 பரப்பு நீள் சதுரக் காணி மூன்று பக்க மதில். குழாய்க்கிணறு என்பவற்றுடன் விற்பனைக்குண்டு. (CS 48407) (3/6)

**076 231 3139, 071 822 9630**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 06 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

### நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன். 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700 M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 42 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம் : காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு:- **ஜெயம் 077 9865 457, 077 0267 619**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

### நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும். சாவகச்சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்) நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது) ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.
- **பார்வையிடும் நேரம்:-** காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொடர்பு:- **ஜெயம் 077 8147 389, 077 2417 589**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இல் உள்ள அவர்களது பணிமனையில் 08.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper

பக்கங்கள்: 08

கெட்டித்தனமாகவே அரசாங்கம் இழுத்தடித்திப்போ
குட்டித்தேர்தலுக்கு ஓமெண்டு சொன்னதுமே – பெட்டிப்பாம்பாய்
பொத்திக் கொண்டு பொந்துக்க இருந்தவையெல்லாம்
கத்திக்குளறியினி வாக்குக் கடை விரிப்பினம் காண்!
- கொரோனானந்த சுவாமிகள்

# சஞ்சீவி

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2053 | மார்கழி 24 | ஞாயிற்றுக்கிழமை | (08.01.2023) | சிகரம் : 131

ஜெரா



சாந்தி

# பசி பலியெடுத்த பாலகன்

மூதூர் நகரின் இரைச்சல் மங்கும் தூரமளவுக்குள் பிரமாண்டமாக நிமிர்ந்து நிற்கும் குடையப்பட்ட மலையடிவாரத்தில்தான் அந்தக் கிராமம் இருக்கிறது.

அகன்ற காப்பெற் வீதியும், அதனை அண்மித்தாகப் பச்சைப்பசேல் வயல்வெளியும் சகாயபுரம் என்னும் பெயருடைய இந்தத் தமிழர் கிராமத்துக்கு அரண் செய்கின்றன. சதாகாலமும் ஈரப்பதன் அதிகமுள்ள காற்றினை அள்ளிவீசிக் கொண்டிருக்கும் தாழ்வுத்தரையில் மிக நெருக்கமாக மக்கள் வாழிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. உயர்ந்து வளர்ந்த பயன்தரு - காட்டுக்கு மரங்களுக்கு நடுவில் வீடுகள் குறுக்கும் நெடுக்குமாக கட்டப்பட்டுள்ளன. அங்கு வாழும் மக்களின் பொருளாதார நிலைமைகளுக்கு அமைவாக வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்படியான அந்தக் கிராமத்தினுள் நுழைபவர்களுக்குப் போர்க்கால முகாமொன்று இலகுவாக நினைவுக்கு வந்து விடுகிறது.

இத்தகைய எழில்மிகு கிராமத்துக்குள்தான் வசிக்கிறார் நாற்பத்தியிரண்டு வயதைக் கடந்த வயிரமுத்து சாந்தி. பல நாள்கள் ஒழுங்கான உணவு உட்கொள்ளாத உடல், பசியை - துயரத்தை - ஏக்கத்தை ஒப்புவிக்கும் கண்கள், சத்தற்று சூம்பிப்போன உடற்பாகங்கள், பல வருடங்களாக எண்ணெய் எதனையும் காணாத பறட்டைத் தலையென வறுமையின் மூல வடிவமாக நம் முன் நிற்கிறார் சாந்தி. ஐந்து பிள்ளைகளின் தாயாகிய சாந்தியின் கணவர் தற்போது குடும்பத்தாரோடு இல்லை. தகராறு ஒன்றில் குற்றவாளியாக்கப்பட்டு சிறைக்கு சென்ற அவர், சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதும் வீடு திரும்பவில்லை. குடும்பத்தைவிட்டு எங்கேயோ சென்றுவிட்டார்.

சாந்தி தன் முழுப்பலத்தையும் கொடுத்தே ஐந்து பிள்ளைகளையும் வளர்த்தார். ஆரம்ப நாள்களில், விறகு எடுத்து விற்பது, ஆற்றில் இறால், மீன் பிடிப்பது என ஏதாவது வேலைசெய்து ஐந்து பிள்ளைகளின் பசியினையும் ஆற்றிவந்தார். ஆனால் பிள்ளைகள் வளர , அதில் கிடைக்கும் வருமானம் துளியளவும் போதவில்லை. மூத்தமகன் வீட்டை விட்டே ஓடிவிட்டான். எஞ்சிய நான்கு பிள்ளைகளையும் காப்பாற்றுவதுதான் சாந்தியின் வாழ்நாள் போராட்டமாகியது.

“....அதுக்குப் புறவு நான் ஊருக்குள்ள இறங்கினன். பிச்சையெடுக்கிறதுதான் என்ர வேலை. ஒரு நாளைக்கு ஐநூறு ரூபா கிட்ட கிடைக்கும். அதைக் குடுத்து கிடைக்கிற அரிசி, சாமானுகள் வாங்கி பிள்ளைகளும் நானும் சாப்பிட்டு வந்தம். ஒரு நாளைக்கு ஒரு நேரம்தான் சாப்பாடு. எனக்கும் கேணியா வருத்தம். தூர இடம் நடந்துகொள்ள ஏலா. எழும்பிக்கொள்ள ஏலா. கிழமக் கணக்கில படுத்தபடுக்கை ஆகிடுவன்.

அந்த நேரங்களில என்ர ரெண்டாவது பெடியன்தான் எங்கயாவது போய், எதையாவது செய்து ரெண்டு பார்சல் சோறு வாங்கிவருவான். சாமம் எத்தினை மணி ஆகினாலும் அவனைப் பார்த்துக்கொண்டிருப்பம். பிள்ள எப்பிடியாவது சோறோட வந்து எங்கள எழுப்பும். இப்ப அந்தப் பிள்ளையும் என்னோட இல்லையே....” எனக் கூறிக்கொண்டிருந்த சாந்தி இருண்டிருந்த வானம் வெடிக்கக் கதறத் தொடங்கினார்.

சாந்தியின் இளைய புதல்வனுக்கு என்ன நடந்தது? இலங்கை அரசாங்கத்தின் துர் அரசியல் - பொருளாதார வழிநடத்தல்களால் நாடு வறுமையின் பிடியில் சிக்கியிருக்கிறது. இந்த வறுமை காரணமாகப் பத்தில் ஏழு குடும்பங்கள் குறைபோசாக்குடைய இருவேளை உணவுகளை மட்டும் உண்பதாகவும், கிட்டத்தட்ட ஏழு லட்சம் சிறார்கள் பட்டினி அவலத்தை எதிர்கொண்டிருப்பதாகவும் யுனிசெவ் அறிக்கைப்படுத்தியிருக்கிறது. இந்த அறிக்கையின் முதல் உதாரணம்தான் சாந்தியின் அவலக்குரலுக்குப் பின்னால் இருக்கின்றது.

“... இங்க ஒரே மழை. என்னாலயும் எங்கயும் போக முடியேல்ல. றோட்டுப் போடுறதுக்காக மூடப்பட்ட வாய்க்காலால இந்தக் காணிய விட்டுத் தண்ணி வெளிய போகாமல் இங்க எல்லாம் தேங்கி நிண்டது. இந்த இடமெல்லாம் வெள்ளம். ஒரே குளிர். மகனுக்கு காய்ச்சல் வந்திட்டு. இந்தக் குளிருக்குள்ளயும், மழைக்குள்ளயும் வெறுந்தரையில தான் கிடந்தவன். கீழ விரிச்சுப்போடக்கூட எங்களிட்ட ஒண்டுமில்ல. பிச்சைக்குப் போகாததால சாப்பாட்டுக்கும் ஒண்டுமில்ல. ஆஸ்பத்திரிக்குப் போவமெண்டால், வேணாம் அம்மா எண்டு சொல்லி என்ர மடியிலயே படுத்திட்டான். பசியால பல்ல நறுநறு எண்டு கடிச்சிக்கொண்டே கிடந்தான். என்ர பிள்ளையளின்ர நிலைய பார்த்து பக்கத்தில இருக்கிற ஆக்கள் கொஞ்சம் சோறு தந்தவை. அதை எல்லாருக்கும் உருட்டிக் குடுத்தன். கொஞ்சம் சாப்பிட்டிற்று தங்கச்சிக்குக் குடுத்திட்டான். தனக்கு பல்லு நோகுது என்றான். பிறகு யாரோ ரஸ்க் கொண்டந்து குடுத்தவ. அதில தனக்கு கிடைச்சதையும் சாப்பிட்டு, தங்கச்சிக்குக் குடுத்ததையும் பறிச்சி சாப்பிட்டான். அதுதான் அவன் சாப்பிட்ட கடைசிச்சாப்பாடு.

> இந்தக் குளிருக்குள்ளயும், மழைக்குள்ளயும் வெறுந்தரையில தான் கிடந்தவன். கீழ விரிச்சுப்போடக்கூட எங்களிட்ட ஒண்டுமில்ல. பிச்சைக்குப் போகாததால சாப்பாட்டுக்கும் ஒண்டுமில்ல. ஆஸ்பத்திரிக்குப் போவமெண்டால், வேணாம் அம்மா எண்டு சொல்லி என்ர மடியிலயே படுத்திட்டான். பசியால பல்ல நறுநறு எண்டு கடிச்சிக்கொண்டே கிடந்தான்.

...பல்லு நோகுது. வயிறு நோகுது எண்டு சொல்லிக்கொண்டிருந்தவனின்ர தொண்டையில் ஒரே சத்தம். பதினாறு வயசுப் பெடியன். ஒரு குழந்தையப் போல தான் மெலிஞ்சிபோய் இருந்தான். அவ்வளவுக்கு பட்டினி கிடந்து மெலிஞ்சி சின்னதாப் போனான். நான் என்ர தோளில் தூக்கிப் போட்டுக்கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போனன். போற வழியில என்ர கழுத்த இறுக்கிப் பிடிச்சி நெரிக்கத் தொடங்கீற்றான். அப்படியே கொஞ்சத்தால மயங்கின மாதிரி போனான். அதில நிண்ட ஆட்டோக்காரத் தம்பி, ரெண்டு பேரையும் ஏற்றி வீட்ட கொண்டு வந்து விட்டது. அதில ஒரு அம்மா சொன்னா பிள்ள செத்துப்போயிற்றான் எண்டு. அதை நம்பித்தான் நான் செய்றது தெரியாமல் வீட்ட வந்தன்.

இங்க வந்த பிறகு மகனுக்கு உயிர் இருக்கிறதா சில பேர் சொன்னாங்க. திருப்பியும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனன். அங்க போனதும், ஒன்றரை மணி நேரத்துக்கு முதலே மகன் இறந்திட்டார் எண்டு டொக்டர் சொன்னார்.” இவ்வளவு பெரிய அவலம் ஒரு குடும்பத்தைச் சூழ நடந்துகொண்டிருக்கையில் அயலவர்கள் யாரும் உதவவில்லையா? என்ற கேள்விக்கும் சாந்தியிடம் வலுவான பதில் இருந்தது.

“இங்க எல்லாரிண்ட நிலைமையும் இதுதானே. எல்லா நாளும் எப்பிடி எங்களுக்கு சோறு குடுப்பாங்கள்? மகனின்ர வயித்தில இருந்து பெரிய ஒரு மண் உருண்டைய எடுத்ததாக ஆஸ்பத்திரியில சொன்னாங்கள். பசி தாங்காமல் என்ர பிள்ளை மண்ணைத் திண்டிருக்கிறான். செத்தவீட்டுக்கு அயலட்டை ஆக்கள் உதவினாங்கள். இண்டைக்கு ரெண்டாம் நாள். பிள்ளைக்கு படையல் வைக்ககூட ஒண்டுமில்ல. காலமயே நாங்க பட்டினிதான். இப்ப கொஞ்சம் முதல் ரஸ்க் ஒரு பக்கெற் வாங்கித்தந்தாங்கள். அதை பிள்ளையளுக்குக் குடுக்கத்தான் சுடுதண்ணி வச்சிக்கொண்டிருந்தன். நீங்கள் வந்திட்டிங்கள்” எனத் தன் மொத்த அவலத்தையும் சொல்லிமுடித்தார் சாந்தி. அரசு வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கு சமுர்த்திக் கொடுப்பனவு, அவசர கால உதவித் திட்டங்கள், சீனா, இந்தியா வழங்கும் அவசர உதவிகள் எனப் பலவற்றை செய்கிறது. அந்த உதவிகள் சாந்தியின் குடும்பத்தினருக்கு கிடைப்பதில்லையா என அந்த ஊரில் வசிக்கும் இளைஞர் ஒருவரிடம் கேட்டோம்.

“சமுர்த்தி மூன்று மாசத்துக்கு ஒருக்கா கிடைக்கும். அதை வச்சி எவ்வளவு காலத்துக்கு சமாளிக்கிறது? 50 கிலோ அரிசி, தேங்காய் எண்ணெய், பருப்பு எல்லாம் குடுக்கிறதாச் சொல்றாங்கள். ஆனால் உண்மையில் எங்களுக்கு எதுவும் கிடைக்கிறதில்ல. அதிகாரிமார் தங்களுக்கு வேண்டப்பட்ட ஆக்களுக்குத்தான் குடுக்கி றாங்கள். உண்மையா வறுமைப்பட்ட சனங்களுக்கு பட்டினிதான் மிச்சம். இதுகளுக்கு 12 கோழிக்குஞ்சுகளும், ஒரு கூடும் குடுத்தாங்கள். இதுகள் சாப்பிடவே இங்க ஒண்டுமில்ல. கோழிக்குஞ்சுகளுக்கு எங்கயிருந்து சாப்பாடு போடுங்கள்? ஆக்களுக்குப் பொருத்தமான வாழ்வாதாரமோ, உதவியோ இங்க குடுக்கப்படுறதில்ல.

இதுகளுக்கு காசின்ர பெறுமதி தெரியிறளவுக்குக்கூட படிப்பறிவு இல்ல. எழுதப் படிக்கத்தெரியாது. ரவுணுக்குள்ள வேலைக்குப் போனால், நாள் முழுவதும் வச்சி வேலைவாங்கிப்போட்டு 100 ரூபா காசும் ஒரு சோத்துப் பார்சலும் குடுத்து அனுப்புவாங்கள். உண்மையில் இதுகளுக்கு ஐநூறு ரூபாய்க்கு எவ்வளவு பொருட்கள் வாங்கலாம், ஆயிரம் ரூபாய்க்கு எவ்வளவு வாங்கலாம் எண்டெல்லாம் தெரியாது. ஒரு நேரச் சாப்பாட்டுக்கு ஏதாவது கிடைச்சால் போதும் என்ற நிலையில வாழப் பழகீற்றாங்கள்” எனத் தம் பக்க நியாயத்தைச் சொன்னார் அந்த இளைஞர்.

இந்தக் கதைகள் நீண்டு கொண்டே போக மலையடிவாரப் பக்கமாக பெருமழையும் காற்றும் சோவென கதறிக்கொண்டு வந்தது. வருவது மழையா, புயலா என நிமிர்ந்து பார்க்கையில் மழையின் உச்சியில் பிரமாண்டமாக வடிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது புத்தர் சிலை. ஒரு சிங்களவர்கூட வசிக்காத அந்த மலையடிவாரக் கிராமத்துக்கு வந்திருக்கிறார் சனங்களின் பசியறியாத புத்தர். அவரால் ஆக்கிரமிப்பைத் தவிர என்னசெய்ய முடியும்? ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிச்சை எடுக்கப் பேச்சுவார்த்தை?

○ நிலாந்தன்



> கடந்த சில வாரங்களாக ரணில் விக்கிரமசிங்க இந்தியாவை அதிகம் நெருங்கிச் செல்கிறார். அவர் பதவியேற்ற காலத்தில் இருந்ததைவிடவும் இப்பொழுது அவருக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு ஒப்பீட்டளவில் சுமுகமாகி வருகிறது.

2023 ஆம் ஆண்டிலாவது உலக நாடுகளிடம் கையேந்தாத நிலைக்கு இலங்கை வளர்ச்சியடைய வேண்டும் என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். ஆனால் நாடு இந்த ஆண்டு மட்டுமல்ல இனிவரும் ஆண்டுகளிலும் பிச்சை எடுக்காமல் தப்பிப்பிழைக்க முடியாது என்பதே மெய்நிலை ஆகும். சர்வதேச நாணய நிதியம் தரும் சிறிய உதவி கடனைத் தீர்க்கப் போதாது. அது 2.8பில்லியன் டொலர் மட்டும்தான். ஆனால் நாட்டின் மொத்தக் கடன் தொகை 50 பில்லியன் டொலரைவிட அதிகம். எனவே கடன்வாங்கி கடனை அடைக்கமுடியாது. சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை அரசு கடன் வாங்குவது இதுதான் முதல் தடவையுமல்ல. இதற்கு முன் பதினாறு தடவைகள் கடன் வாங்கியிருக்கின்றது. அதில் ஏழு தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தோடு பொருந்திக்கொண்ட உடன்படிக்கைகளை இலங்கை அரசு முழுமையாக அமுல்படுத்தவில்லை.

இந்நிலையில் கடனை வாங்கிக் கடனை அடைப்பது என்பதற்கும் அப்பால், கடனே இல்லாத ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. கடன் இல்லாத ஒரு நாட்டை அல்லது பிச்சை எடுக்காத ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவது என்றால் ஒரே ஒரு வழிதான் உண்டு. அது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதுதான். இனப்பிரச்சினைதான் நாட்டைக் கடனாளியாக்கியது. கடன் வாங்கி, கடன் வாங்கி யுத்தம் செய்தார்கள். வாங்கிய கடனில் வெடிமருந்து வாங்கி கடனைக் கரியாக்கினார்கள், தமது சொந்த மக்களையே கொன்று குவித்தார்கள். இப்பொழுது மீள முடியாத கடனில் நாடு சிக்கிவிட்டது.

இவ்வாறாக கடன்வாங்கி அல்லது பிச்சையெடுத்து யுத்தம் செய்த ஒரு நாடு இப்பொழுது பிச்சை எடுப்பதற்காக சமாதானம் செய்கிறது என்பதுதான் நூதனமான ஒரு மாற்றம். ஆனால் பிச்சையெடுத்துச் செய்த யுத்தம் உண்மையானது. பிச்சை எடுப்பதற்காக செய்யும் சமாதானம் உண்மையானதா? என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் உண்டு.

உண்மையாகவோ அல்லது பொய்யாகவோ பேச்சுவார்த்தைகள் நடக்கப்போகின்றன. கடந்த 75 ஆண்டுகளாக இவ்வாறு பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன. இந்தப்பேச்சுவார்த்தைகளில் சிங்களத்தலைவர்கள் மாறியிருக்கிறார்கள். தமிழ்த்தலைவர்களும் மாறியிக்கிறார்கள். இதில் ஒப்பீட்டளவில் நீண்டகாலம் மாறாமல் இருந்த ஒரே தலைவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர்தான். அவர் ஐந்து சிங்களத் தலைவர்களோடு பேசியிருக்கிறார். இப்பொழுது கடந்த 13 ஆண்டுகளாக சம்பந்தர் பேசி வருகிறார்.

கடந்த 75 ஆண்டுகால அனுபவத்தின்படி பேசுவதற்கு புதிதாக விடயங்கள் கிடையாது. ஒரே ஒரு விடயத்தில் துணிச்சலான முடிவை எடுத்தால் சரி. நாட்டின் ஒற்றையாட்சிக் கட்டமைப்பை உடைத்து ஒரு கூட்டாட்சிக் கட்டமைப்பை உருவாக்கத் தயாராக இருந்தால் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறும். ஆனால் இலங்கைத் தீவின் துயரம் எதுவென்றால், சிங்களமக்கள் மத்தியில் அதிகம் பிழையாக விளங்கிக் கொள்ளப்பட்ட ஒரு வார்த்தை சமஷ்டி என்பதுதான். உலகின் மிகச்செழிப்பான ஜனநாயக நாடுகளில் நாட்டை ஒரு தேசமாக கட்டியெழுப்பும் சமஷ்டிக் கட்டமைப்பானது இலங்கைத்தீவில் நாட்டை பிரிக்கக் கூடியது என்று கருதப்படுகிறது.

> கடந்த 75 ஆண்டுகால அனுபவத்தின்படி பேசுவதற்கு புதிதாக விடயங்கள் கிடையாது. ஒரே ஒரு விடயத்தில் துணிச்சலான முடிவை எடுத்தால் சரி. நாட்டின் ஒற்றையாட்சிக் கட்டமைப்பை உடைத்து ஒரு கூட்டாட்சிக் கட்டமைப்பை உருவாக்கத் தயாராக இருந்தால் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறும்.

கடந்த 75 ஆண்டு காலப்பகுதிக்குள் நிகழ்ந்த பிரதான தீர்வு முயற்சிகளை பின்வருமாறு தொகுக்கலாம். 1957இல் பிராந்திய சபைகள், 1965 இல் மாவட்ட சபைகள். அதன்பின் 1980இல் தென்னகோன் அறிக்கை, 1981ல் மாவட்ட அபிவிருத்தி சபைகள், 1983இல் மாவட்ட மட்ட அதிகார பரவலாக்கம், 1986 இல் இரண்டு தமிழ் மாகாணங்கள் என்ற யோசனை, 1987இல் இந்திய-இலங்கை உடன்படிக்கை, 1992 இல் நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் அறிக்கை, 1995 இல் சந்திரிகாவின் பிராந்தியங்களின் ஒன்றியம் அதன்பின், 2002 இல் ஒஸ்லோப் பிரகடனம், 2003 இல் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை, 2005 இல் சுனாமிக்கு பின்னரான பொதுக் கட்டமைப்பு, 2009 க்குப் பின் மஹிந்தவின் 13பிளஸ், 2015 இலிருந்து 2018 வரையிலுமான ரணில் - சம்பந்தன் கூட்டின் 'ஏக்கிய ராஜ்ய'.

இதில் 1965 இல் திருமதி சிறிமாவோவின் அணிக்குள்ளிருந்த என்.எம். பெரேரா சமஷ்டிப் பண்புடைய ஒரு தீர்வு யோசனையை முன்வைக்கத் தயாராகக் காணப்பட்டார் என்றும் ஆனால் தமிழ்த் தரப்பு அதனை சமயோசிதமாகக் கையாளவில்லை என்றும் ஒரு விமர்சனம் உண்டு. அம்முயற்சி கருவிலேயே கைவிடப்பட்டது.

மேற்கண்ட தீர்வு முயற்சிகளையும் தீர்வுத் திட்டங்களையும் யார் குழப்பினார்கள், ஏன் குழப்பினார்கள் என்பவற்றைத் தொகுத்துப் பார்த்தால் தெளிவாகத் தெரிவது என்ன? ஆயுதப் போராட்டத்துக்கு முன்னும் பின்னுமான மிதவாத அரசியலில் நிகழ்ந்த பெரும்பாலான பேச்சுவார்த்தைகளில் சமஷ்டிப் பண்புடைய அல்லது ஒற்றையாட்சி கட்டமைப்புக்கு வெளியே வருவது போன்ற தோற்றத்தைக் கொண்டிருக்கும் தீர்வு யோசனைகளை ஒன்றில் சிங்களத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை, அல்லது கருவிலேயே கைவிட்டிருக்கிறார்கள், அல்லது முதலில் ஏற்றுக்கொண்டு பின்னர் குழப்பியிருக்கிறார்கள். அதேசமயம் தமிழ்த் தலைவர்கள் ஒற்றையாட்சிப் பண்புடைய தீர்வு முன்மொழிவுகளை பெரும்பாலும் நிராகரித்திருக்கிறார்கள். அல்லது முதலில் நம்பிக்கை வைத்து பின்னர் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள்.

ஆயுதப்போராட்ட காலகட்டத்தில்தான் ஒப்பீட்டளவில் உயர்வான தீர்வு யோசனைகள் முன்வைக்கப்பட்டன. அதற்குக் காரணம் நாட்டின் அரசியல் வலுச் சமநிலையை மாற்றக்கூடிய சக்தி ஆயுதப் போராட்டத்துக்கு இருந்தது. 2009 க்குப்பின் ஒரு சிங்களத் தொலைக்காட்சி திருமதி சந்திரிகாவை நேர்கண்டபோது "நீங்கள் முன்பு வழங்கத் தயாராக இருந்த பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற தீர்வு இப்பொழுது பொருத்தமானதா?" என்ற தொனிப்பட ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு அவர் "இல்லை. இப்பொழுது அதற்குத் தேவை இல்லை. ஏனென்றால் இப்பொழுது ஆயுதப்போராட்டம் இல்லை." என்ற பொருள்படப் பதில் கூறியுள்ளார். அதுதான் உண்மை. நாட்டின் அரசியல் வலுச் சமநிலையை மாற்றக்கூடிய சக்தி இப்பொழுது தமிழ் அரசியலுக்கு இல்லை. அதனால்தான், பிரிக்கப்பட முடியாத, பிளவுபடாத நாட்டுக்குள் சமஷ்டி என்று கூற வேண்டியிருக்கிறது. ஆனால் சமஷ்டிக்கு சிங்களத் தலைவர்கள் தயாரா?

2012ஆம் ஆண்டு எஸ்.ஜே.வி செல்வநாயகத்தின் பேர்த்தி ஒரு நேர்காணலுக்காக சர்வோதயம் அமைப்பின் தலைவர் ஆரியரட்ணாவை சந்தித்தபோது அவர் சமஷ்டி பற்றிக் கூறியதை இங்கு சுட்டிக்காட்டவேண்டும். தன்னுடைய சிறுவயதில் 1950 கள் 60 களிலேயே சமஷ்டி என்பது ஒரு பிரிவினைக் கோரிக்கையாக வியாக்கியானம் செய்யப்பட்டது என்று ஆரியரட்ணா கூறியிருக்கிறார். ஆனால் ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்கு பின்னரும் நிலைமை அப்படித்தான் உள்ளது.

எனவே ஒரு சமஷ்டித் தீர்வை நோக்கி சிங்கள மக்களின் கூட்டு உளவியலை தயார்படுத்தும் பொறுப்பை ரணில் ஏற்றுக்கொள்வாரா? அதற்குத் தேவையான அரசியல் திடசித்தம் அவரிடம் உண்டா? அதற்குத் தேவையான மக்கள் ஆணை அவருக்குண்டா?

அவர் தனது அரசியல் எதிரிகளின் பலத்தில் தங்கியிருக்கிறார். அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் அவர் ராஜபக்சக்களின் வேட்பாளராகக் களமிறங்கக்கூடிய வாய்ப்புகள் தெரிகின்றன. எனவே ராஜபக்சக்களை மீறி ஒரு தீர்வை அவர் தரமாட்டார். ராஜபக்சக்கள் 13பிளஸ் தான் தங்களால் தரக்கூடிய தீர்வு என்று ஏற்கனவே சொல்லிவிட்டார்கள். சஜித் பிரேமதாஸவும் 13ஐ முழுமையாக அமுல்படுத்துவதே தமது தீர்வு என்று கூறுகிறார். இப்படிப்பார்த்தால் 13ஆவது திருத்தத்தைத் தாண்டிச் செல்வதற்கு மஹிந்தவும் தயாரில்லை சஜித்தும் தயாரில்லை. பதின்மூன்றாவது திருத்தத்தை தொடர்ந்து வலியுறுத்துவதன் மூலம் சிங்களத் தலைவர்கள் இந்தியாவையும் தமது நிகழ்ச்சிநிரலின் பங்காளிகளாக்கலாமா? என்று யோசிக்கக்கூடும்.

கடந்த சில வாரங்களாக ரணில் விக்கிரமசிங்க இந்தியாவை அதிகம் நெருங்கிச் செல்கிறார். அவர் பதவியேற்ற காலத்தில் இருந்ததைவிடவும் இப்பொழுது அவருக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு ஒப்பீட்டளவில் சுமுகமாகி வருகிறது. பலாலி விமான நிலையத்தை மறுபடியும் திறந்துவிட்டார், காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்கும் இடையே ஒரு பயணிகள் கப்பல் போக்குவரத்துச் சேவையும் விரைவில் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அடுத்த சுதந்திர தின விழாக் கொண்டாட்டங்களில் ஒரு பகுதி யாழ்ப்பாணத்திலும் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதில் இந்திய நிதி உதவியோடு கட்டப்பட்ட யாழ். கலாசார மையத்தை ஒரு இந்திய தலைவர் வந்து திறந்து வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முதலில் இந்தியப் பிரதமர் மோடி வருவார் என்று கூறப்பட்டது. பின்னர் இந்திய ஜனாதிபதி வருவார் என்று கூறப்பட்டது. இப்பொழுது வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. யார் வந்தாலும் அது ஒரு கோலாகலமான விழாவாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். அவ்வாறு கலாசார மையத்தை கையளிக்கும் விழாவை இலங்கையின் சுதந்திரதின விழாவின் ஒரு பகுதியாக ஒழுங்கமைப்பதன்மூலம் தமிழ் மக்களுக்கான இந்தியாவின் உதவிகள் எவையும் இலங்கைத்தீவின் சுதந்திரத்துக்கு வெளியே இல்லை என்ற செய்தி இந்தியாவுக்கும் தரப்படும், தமிழ் மக்களுக்கும் தரப்படும். இவ்வாறாக, கடந்த சில வாரங்களாக ரணில் விக்கிரமசிங்க இந்தியாவை நோக்கி முன்னெடுக்கும் நகர்வுகளைத் தொகுத்துப் பார்த்தால், அவர் பேச்சுவார்த்தைகளிலும் இந்தியாவின் ஒத்துழைப்பை மறைமுகமாகப் பெற முயற்சிக்கலாம் என்று தெரிகிறது. 13வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த போகிறோம் என்று அரசாங்கம் கூறுமாக இருந்தால் அது இந்தியாவுக்கும் விருப்பமாகத்தான் இருக்கும். கடந்த வெள்ளிக்கிழமை ஆறாம் திகதி தமிழ்நாட்டில் ஒரு கருத்தரங்கு இடம்பெற்றது அதன் தலைப்பு 13 ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு தீர்வை ஈழத்தமிழர்களுக்கு வழங்க வேண்டும் என்று இந்திய ஒன்றிய அரசைக் கோரும் நோக்கிலானது.

அதில் சுமந்திரனும் பங்குபற்றினார். எனவே நடக்கவிருக்கும் பேச்சுவார்த்தைகள் 13ஆவது திருத்தத்தைத் தாண்டாமல் இருப்பதற்கு ரணில் இந்தியாவிடமிருந்து உதவியை எதிர்பார்க்கக்கூடும். அவரைப் பொறுத்தவரை ஒருபுறம் பிச்சையெடுப்பதற்காகச் சமாதானம் செய்ய வேண்டியிருக்கிறது. இன்னொருபுறம் அவருடைய வயோதிப காலத்தில் அவருக்கு கிடைத்திருக்கும் சிம்மாசனத்தை சமாதானத்துக்காகத் தியாகம் செய்யவும் முடியாது. பிச்சையா? சமாதானமா? அரச போகமா? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிலிந்த மொறகொடவும் புதுடில்லியும்!

அ.நிக்ஸன்



தமிழ் நாட்டுக்கு ஊடாக இந்தியாவை ஈழத்தமிழர்கள் ஒருபோதும் அணுகக்கூடாது. புதுடில்லியுடன் நேரடியாகத் தமது அணுகுமுறையை ஈழத்தமிழர்கள் கட்டமைத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் இந்திய மத்திய அரசின் நிலைப்பாடு.

குறிப்பாகச் சோனியாவை மையப்படுத்திய காங்கிரஸ், மோடியை மையப்படுத்திய இந்துத்துவவாத பி.ஜே.பி ஆகிய பிரதான அரசியல் கட்சிகள் ஈழத்தமிழர்களுக்குத் தொடர்ந்து வலியுறுத்துகின்ற விடயம் இதுதான். மோடியின் காலத்தில் தமிழ்த்தேசியச் செயற்பாட்டாளர்களில் ஒருபகுதியினர் இந்துத்துவ சக்திகளின் வலைக்குள் வீழ்த்தப்பட்டு வருகிறார்கள் என்பது தற்போது பகிரங்கமாகி வருகின்றது. புலம்பெயர் சமூகத்திலும் தமிழகத்திலும் மட்டுமல்ல, நோர்வேயின் எரிக் சொல்ஹெய்ம் வரை இந்த வலைப்பின்னல் இயக்கப்படுகின்றது. ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி , இதற்குப் பிரதான களம் அமைத்துக் கொடுத்துள்ளது. இந்த இடத்தில் ஜனாதிபதி ரணில் , இலங்கையில் இந்தியாவுக்குக் கொடுத்துள்ள முக்கியத்துவம் பற்றியும் அவதானிக்க வேண்டும்.

இந்த முக்கியத்துவத்தின் பின்னால் இரண்டு விடயங்கள் உண்டு. ஒன்று, வடக்கில் தமிழகத்தின் துறைமுகங்கள், விமான நிலையங்கள் ஊடாகத் தொடர்புகளைப் பேண அனுமதித்தல் மற்றும் திருகோணமலை உள்ளிட்ட வடக்கு - கிழக்கில் சில பிரதேசங்களில் இந்தியாவுக்குத் தேவையானதைப் பெற்றுக்கொள்ள அனுமதித்தல்.

இரண்டாவது, ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்தியாவுக்கு இருக்கும் கரிசனையை இலங்கையின் ஒற்றையாட்சிக்கு ஏற்றவாறு மேலும் உறுதிப்படுத்தல். அதாவது '13 'ஆவது திருத்தச் சட்டம் பற்றிய இந்தியத் தலையீட்டை அல்லது அழுத்தங்களை நீக்கம் செய்தல்.

இங்கே இரண்டாவது விடயத்தை ரணில் கனகச்சிதமாக மேற்கொள்ள எடுக்கும் முயற்சியில் இந்தியாவுக்கு மெதுவான உடன்பாடு இல்லை. ஏனெனில் '13 'என்பது இலங்கையில் இந்தியாவை உருவகப்படுத்தும் ஆயுதம். ஆனாலும் இந்தோ - பசுபிக் பிராந்திய நலன் சார்ந்து குறிப்பாக இந்தியப் பிராந்திய நலன் அடிப்படையில் இலங்கை இயங்குவது பற்றிச் சிங்கள ஆட்சியாளர்கள் நம்பிக்கையூட்டினால், '13' நீக்கம் செய்யப்படுவதில் அல்லது' 13' இல் இருக்கின்ற அதிகாரங்களை மேலும் குறைத்து அதனை வேறு வடிவத்தில் மாற்றியமைப்பதில் இந்தியாவுக்குப் பிரச்சினையில்லை.'13' பற்றிய இந்தியாவின் இந்த நிலைப்பாடு தெரிந்த பின்னணியிலே தான் ரணில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் தொடந்து பேச்சு நடத்தவுள்ளார். முதற் கட்ட பேச்சு கடந்த வியாழக்கிழமை முடிவடைந்துள்ளது.

ஆனால் சிங்கள ஆட்சியாளர்கள் இந்தியாவை எந்த நேரமும் தூக்கிப் பிடிப்பார்கள் என்று இந்தியா இன்று வரை நம்புவது அல்லது நம்புவதுபோன்று காண்பிக்கும் இராஜதந்திர அணுகுமுறைதான் வேடிக்கையானது.

யாழ்ப்பாணத்தின் காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து புதுச்சேரி காரைக்காலுக்குப் பயணிகள் கப்பல் சேவையை இந்த மாதம் ஆரம்பிக்க இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ளமை ஒரு தற்காலிக ஏற்பாடுதான். இந்தியாவுக்கு ஈழத்தமிழர்களுடன் இருக்கும் ஒரேயொரு தொடர்பான '13' ஐ மாற்றியமைக்கப் புதுடில்லியின் ஒத்துழைப்பு இலங்கைக்கு நிச்சயமாகத் தேவை.

அதனைச் சமாளிக்கவே யாழ்ப்பாணத்துக்கும் தமிழகத்துக்கும் இடையிலான விமானம் மற்றும் கப்பல் சேவைகள் எல்லாம் ஆரம்பிக்க இலங்கை இணங்கியது என்பது புரியாத புதிர் அல்ல. அத்துடன் இதனைக் காண்பித்தே இந்திய மத்திய அரசும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் இலங்கையில் தமது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ற முறையிலான நம்பிக்கையைப் பெறமுடியும்.

ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை கிழக்கில் திருகோணமலையில் எண்ணெய்க் குதங்களை இந்தியா தொடர்ந்து வைத்திருப்பதில் பிரச்சினை இருக்காது. அத்துடன் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவுக்குத் தொடர்ந்து ஒத்துழைப்பை வழங்குவதிலும் இலங்கைக்குப் பிரச்சினை இருக்காது. ரணில் உள்ளிட்ட சிங்கள ஆட்சியாளர்கள் அனைவருக்கும் தேவைப்படுவதெல்லாம், ஈழத்தமிழர்களின் விவகாரத்தில் இந்தியா விரும்பியோ விரும்பாமலே அழுத்தம் கொடுக்கக் கூடாது என்பதுதான். அல்லது ஈழத்தமிழர் விவகாரத்தில் புதுடில்லியைக் கேட்டுத்தான் எதையும் செய்ய வேண்டும் என்ற இந்திய நிலைப்பாடும் இருக்கவேகூடாது என்பதும் சிங்கள ஆட்சியாளர்களின் விருப்பம்.

இந்த விருப்பம் நிரந்தரமாக உறுதிப்படுத்தப்பட்டால் யாழ்ப்பாணத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையிலான விமான சேவை மற்றும் ஆரம்பிக்கப்படவுள்ள கப்பல் சேவைகளை இலங்கை உடனடியாகவே நிறுத்தும் என்று இந்தியாவுக்கும் நன்கு புரியும். அத்துடன் இந்தச் சேவைகளைத் தொடர்ந்து நீடிக்கவும் இலங்கை விரும்பாது. ஆனால் தமக்குத் தேவையான புவிசார் அரசியல் நலன்களில் இலங்கை தொடர்ந்து ஆதரவு வழங்கும் என்ற நம்பிக்கையை இந்தியா பேணக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகவே உண்டு.

பல சந்தர்ப்பங்களில் இலங்கை , இந்தியாவுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறியிருக்கிறது. வர்த்தக ரீதியிலும் அரசியல் செயற்பாடுகளிலும் இந்தியா, இலங்கையிடம் ஏமாந்த சந்தர்ப்பங்கள் பலவுண்டு என்பதே வரலாறு. தமிழ் நாடு மற்றும் ஈழத்தமிழர் தொடர்பான வட இந்தியர்களின் எதிர்மறை விருப்பங்கள் இந்திய வெளியுறவுக் கொள்கைக்குள் வலிந்து புகுத்தப்பட்டுள்ளமையே இதற்குக் காரணம். இதனாலேயே சிங்கள ஆட்சியாளர்களைக் கண்ணை மூடிக்கொண்டு நம்ப வேண்டிய ஆபத்தான நிலை இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையை சிங்கள ஆட்சியாளர்கள் நன்கு தெரிந்து வைத்திருந்தினால் பல சந்தர்ப்பங்களில் மிக இலகுவாக இந்தியாவை, இலங்கை இராஜதந்திர முறையில் கையாண்டிருக்கிறது.

ரஷ்ய - உக்ரைன் போர்ச்சூழலில் இந்தியா இரட்டைத் தன்மை கொண்ட கொள்கையுடன் செயற்படுகின்றமையினால், புவிசார் அரசியல் போட்டி நிலைமைகளில் கூட இந்தியாவை இலங்கை இலகுவாகக் கையாள்கின்றது.

ஏப்ரல் மாதம் பாகிஸ்தானிலும் ஜூலை மாதம் இலங்கையிலும் ஆட்சிமாற்றங்கள் ஏற்பட்டன. இந்த ஆட்சிக் கவிழ்ப்பின் பின்னணியில் வெவ்வேறு காரணங்கள் இருந்தாலும், இதன் சூத்திரதாரி அமெரிக்காவே என்பது வெளிப்படை. அதாவது இம்ரான்கானின் ஆட்சியை கடந்த ஏப்ரல் மாதம் கவிழ்த்துவிட்டுத் தனக்குச் சார்பான ஆட்சி ஒன்றை அமெரிக்கா பாகிஸ்தானில் உருவாக்கியுள்ளது. கடந்த ஆறு மாதங்களில் பாகிஸ்தான் இராணுவத்தையும் கடற்படையையும் அமெரிக்கா பலப்படுத்தியுமுள்ளது. அமெரிக்காவின் இந்த நகர்வுகூட இந்தியாவுக்கு அழுத்தம் கொடுக்கும் செயற்பாடுதான்.

புதுடில்லியின் எதிர்ப்பையும் மீறி பாகிஸ்தான் கடற்படைக்குத் தேவையான போர் விமானங்களை அமெரிக்கா வழங்கியதுடன் அது முக்கியமான விவகாரம் என அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் அன்டனி பிளிங்கன் வோஷிங்டனில் பகிரங்கமாகக் கூறியுமிருந்தார். தற்போது இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதராக எரிக் கார்செட்டி ஜோ பைடனால் நியமிக்கப்பட்டிருக்கிறார். இது வழமையான இடமாற்றம். இருந்தாலும் எரிக் கார்செட்டி, பன்னிரெண்டு ஆண்டுகள் அமெரிக்கக் கடற்படையின் உளவுத்துறை அதிகாரியாகக் கடமை புரிந்தவர். அரசியல் பொருளாதார நிபுணரும் கூட. ஆகவே புதுடில்லிக்கு அழுத்தம் கொடுப்பதை மையமாகக் கொண்டு இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்கா நகர்த்தும் அரசியல், பொருளாதார நகர்வுகள் ஒவ்வொன்றுமே ரணிலுக்கு அத்துப்படி. இந்தியா தற்போது எப்படிச் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கின்றது, விசேடமாக உக்ரைன் போரினால் ரஷ்ய ஆதரவுக்கு எதிரான அமெரிக்காவின் அழுத்தம் ஒருபுறம், சீனாவுடன் எல்லை மோதல் மறுபுறும் மற்றும் பாகிஸ்தானில் மேலோங்கி வரும் அமெரிக்கச் செல்வாக்கு இன்னுமொரு புறம் என்று, இந்தியா பல சோதனைகளைச் சந்தித்து வருகின்றது.

இந்தப் பின்புலத்தில் இலங்கையில் ஈழத்தமிழர்கள் தொடர்பாக ரணில் எடுத்து வரும் நிலைப்பாட்டில் இந்தியத் தலையீட்டை நீக்க வேண்டும் என்ற கருத்தியல் பெரும் அவமானமாகவும் தொல்லையாக இருந்தாலும், தனது பிராந்திய நலனில் இலங்கை தொடர்ந்து ஆதரவாக இருக்க வேண்டும் என்று இந்தியா தொடர்ந்து எதிர்பார்க்கிறது; நம்புகின்றது.'13' ஐ நீக்க வேண்டுமென முதன் முதலில் கருத்திட்ட முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறொகொடவை இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்க முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய முற்பட்டபோது ஆரம்பத்தில் இந்தியா எதிர்ப்பு வெளியிட்டிருந்தது. ஆனால் சில மாதங்களின் பின்னர் மிலிந்த மொறொகொடவைத் தூதுவராக இந்தியா ஏற்றுக் கொண்டது. அமைச்சரவை அந்தஸ்துள்ள தூதுவராகப் புதுடில்லியில் மிலிந்த மொறொகொட மிகவும் உயர்ந்த அந்தஸ்துடன் பதவியேற்ற நாள் முதல் இன்றுவரை இந்திய மாநிலங்களை நோக்கிய செயற்பாடுகளிலேயே ஈடுபடுகின்றார். குறிப்பாக தமிழ்நாட்டு ஒத்துழைப்புடன் புதுடில்லியை ஈழத்தமிழர்கள் அணுகக்கூடாது என்ற இந்திய மத்திய அரசின் கொள்கையைத் தமிழ் நாடு ஏற்கவேண்டும் என்ற தொனியில் தனது செயற்பாட்டை மிலிந்த மொறொகொட மேற்கொண்டு வருகின்றார்.



இந்தக் கருத்தியலின் பின்னணியிலேயே தமிழக முதலமைச்சர் ஸ்டாலின், கனிமொழி ஆகியோரை மிலிந்த மொறொகொட சந்தித்ததுடன் தொடர்ச்சியாக அவர்களுடன் இன்று வரை உரையாடுகிறார். தமிழகத்தில் உள்ள ஏனைய கட்சிகள் மற்றும் பிரமுகர்களைக் கூட மிலிந்த தொடர்பு கொண்டு பேசியிருக்கிறார்.

35 வருடங்களின் பின்னர் முதன் முதலாகப் புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதுவர் ஒருவர் தமிழ் நாட்டு முதலமைச்சரைச் சந்தித்திருக்கிறார் என்றால் அது மிலிந்த மொறொகொடதான். ஏனைய சில மாநிலங்களின் முதலமைச்சர்களுடனும் மிலிந்த தொடர்பு கொண்டுள்ளதாக உள்ளகத் தகவல்கள் கசிந்துள்ளன. மிலிந்த மொறொகொட அமெரிக்காவோடும் சீனாவுடனும் சமாந்தரமான இராஜதந்திர உறவைப் பேணுவதில் வல்லவர். இந்த நிலைப்பாட்டையே ரணில் 2015 இல் பிரதமராகப் பதவியேற்றபோது இலங்கை நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக இராஜதந்திர வார்த்தைகளில் கூறியிருந்தார். இதை ஒத்த கருத்தையே சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும் 2015 இல் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தியிருந்தார். அதாவது இந்தியா இன்றி ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று சுமந்திரன் சொல்லியிருந்தார்.

ஆனால் சுமந்திரன் தற்போது ரணிலுடன் முரண்படுவது போன்று காண்பித்தாலும், சம்பந்தனின் தலைமை மாற்றமடையும் சூழலில் ஈழத்தமிழர் விவகாரத்தில் ரணில் மற்றும் இந்தியாவுக்கு எதிரான ஏனைய சிங்கள ஆட்சியாளர்களின் கருத்தியலோடு இணைந்து பயணிக்கக்கூடிய இயல்பைக் கொண்டிருக்கிறார் என்பதும் வெளிப்படை.

எனவே சுமந்திரனின் கொழும்பு மைய அரசியல் ஈடுபாட்டை ஈழத்தமிழர்களுடைய கருத்தாக அவதானிக்க முடியாது. ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை இன்றுவரை இந்தியத் தலையீட்டை விரும்புகின்றனர். ஆனால் அந்த அரசியல் தீர்வு '13 'அல்ல. மாறாக வடக்கு- கிழக்கில் சுயாட்சி கொண்ட நிரந்தர அரசியல் தீர்வையே எதிர்பார்க்கின்றனர்.

இந்தப் பின்புலத்தில் '13' ஐ ஈழத்தமிழர்கள் பலரும் விரும்பவில்லை என்பதைக் காரணம்கூறி, '13' ஐ அகற்றும் நகர்வுகளில் ரணில் ஈடுபடுகிறார் என்று இந்தியா தெளிவுடன் நம்புமானால், அதற்கான மாற்றுத் திட்டங்களை உடனடியாக அறிமுகப்படுத்த வேண்டியது புதுடில்லியின் கடமை.

ஏனெனில் இலங்கையிடம் இந்திய இராஜதந்திரம் தோல்விடையக்கூடாது என்பதில் உறுதியாக இருப்பவர்கள் ஈழத்தமிழர்கள் தான். ஆகவே அதற்குரிய ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கடமையும், ஒருமித்த குரலில் இந்தியாவுக்கு நம்பிக்கையை உறுதிப்படுத்த வேண்டிய அவசியமும் தமிழ்த்தேசியக் கட்சிகளுக்குரிய பிரதான பொறுப்பு.

வெறுமனே கையாளப்படும் சக்திகளாக இதுவரை காலமும் செயற்பட்டு வந்ததன் வலியை ரணிலின் நாசூக்கான காய்நகர்த்தல்களில் இருந்தாவது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உணர்ந்துகொள்ள வேண்டும். பிரதானமாக ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற முன்னாள் ஆயுத இயக்கங்களுக்கு இராஜதந்திர ரீதியில் இந்தியாவை தற்துணிவோடும் சுய மரியாதையுடனும் அணுக வேண்டிய கடமையும் பெறுப்பும் அதிகமாகவே உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
08 ஜனவரி 2023

# படைக்குறைப்பே மீட்சிக்கு வழி!



கடந்த மாதம் 'டெய்லி மிரர்' பத்திரிகையில் 'Right Sizing The Sri Lanka Army' என்ற தலைப்பில் இறுதிப் போர் நடைபெற்ற காலத்தில் வன்னி மாவட்டக் கட்டளைத் தளபதியாக கடமையாற்றிய மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா எழுதிய கட்டுரையின் தமிழாக்கத்தின் சுருக்கம் இது. பொனிபஸ் பெரேராவை, கோத்தாபய வடமாகாண ஆளுநராக நியமிக்க முற்பட்டார். எனினும் பின்னர் அந்த முயற்சி கைவிடப்பட்டது. பொனிபஸ் பெரேரா 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது கோத்தாபயவால் உருவாக்கப்பட்ட 'வியத்மக' என்ற புத்திஜீவிகளின் அமைப்புக்குத் தலைமை தாங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழாக்கம் ந.பரமேஸ்வரன்

## மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா

**2023** ஆம் ஆண்டு வரவு - செலவுத்திட்டத்தில் பாதுகாப்புக்கு 410 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் இராணுவத்துக்கு 209 பில்லியனும் கடற்படைக்கு 75 பில்லியனும் விமானப் படைக்கு 66 பில்லியனும் பல்நோக்கு படையணிக்கு (MULTI TASK FORCE) 9.8 பில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் பாதுகாப்புக்கு 129 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 116 பில்லியன் பொலிஸுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பொலிஸாரும் இராணுவத்தினரும் 539 பில்லியன் ரூபாவை பெற்றுக்கொள்கின்றனர். தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு இராணுவத்துக்கு அதிக நிதி ஒதுக்கப்படுவதும் காரணமெனச் சில ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்தப் பொருளாதாரப் பின்னடைவிலிருந்து விடுபட வேண்டுமானால் இலங்கை தனது இராணுவச் செலவீனத்துக்கு கடிவாளமிட வேண்டும்.

இலங்கை, சனத்தொகை தர வரிசைப்படுத்தலில் உலகில் 58 ஆவது இடத்திலும் உள்நாட்டு உற்பத்தியில் 65 வது இடத்திலும் இராணுவக் கட்டமைப்பில் 17 வது இடத்திலும் உள்ளது. உலகில் 17 ஆவது பெரிய இராணுவமாகக் காணப்படுகின்ற இலங்கை இராணுவம், இராணுவத் தளபாடங்களை உற்பத்தி செய்வதில்லை; ஏனைய நாடுகளைப் பொறுத்தமட்டில் அவர்கள் தமக்குத் தேவையான இராணுவத் தளபாடங்களை தாமே உற்பத்தி செய்கின்றனர். இராணுவத் தளபாட இறக்குமதி , மூலதனச் செலவினத்தில் தாக்கம் செலுத்துகிறது.

யுத்தம் முடிந்து 13 வருடங்களாகியும் இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்படவில்லை. ஆயுதப்படை மற்றும் துணைப்படையினரின் எண்ணிக்கை 3 லட்சத்து 50 ஆயிரம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள இக்கட்டான சூழ்நிலையில் இராணுவத்துக்கு ஒதுக்கப்படும் நிதியைக் குறைத்து , கல்வி,சுகாதாரம் போன்ற துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமெனவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இலங்கையின் சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் இலங்கை இராணுவத்தின் ஆளணி , வல்லரசு நாடுகளின் இராணுவ ஆளணியை விட அதிகம். உதாரணமாக 68,770,889 என்ற சனத்தொகையைக் கொண்ட பிரிட்டனில் இராணுவத்தினரின் எண்ணிக்கை வெறும் 79,830 மட்டுமே.

ஆனால் 21,636,018 சனத்தொகையைக் கொண்ட இலங்கையில் இராணுவத்தினரின் எண்ணிக்கையோ 3 லட்சத்து 50 ஆயிரம்.சிவில் நிர்வாகம் இராணுவமயப்படுத்தப்படுவதும் நிறுத்தப்படவேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி இலங்கைக்கு கிடைக்க வேண்டுமானால் 2023 ஆம் ஆண்டு வரவு - செலவுத்திட்டத்தில் இராணுவத்துக்கு ஒதுக்கப்பட்ட 410 பில்லியன் குறைக்கப்படவேண்டும். ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தையும் இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

அவுஸ்திரேலிய தேசியப் பல்கலைக்கழக பாதுகாப்புக் கல்லூரியின் (Australia National University Security College Senior Research Fellow David Brewster) ஆய்வாளர் கலாநிதி டேவிட் ப்ரூஸ்டர் , 'இலங்கை இராணுவத்தின் ஆளணி மிக அதிகம்' என 'The Morning' பத்திரிகைக்கு கூறியுள்ளார்.

இதேவேளை சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத் தெற்காசியக் கற்கைகள் நிறுவனம், '2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின் இலங்கையில் பாதுகாப்பு செலவீனம் வருடாந்தம் தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளது, இதுவும் தற்போதைய பொருளாதர நெருக்கடிக்கு காரணமாக அமைந்துள்ளது, குறிப்பாக இராணுவத்தினரின் ஓய்வூதியக் கொடுப்பனவுக்கான ஒதுக்கீடு கடந்த மூன்று வருடங்களில் 14.5 வீதத்தில் இருந்து 17 வீதமாக அதிகரித்துள்ளது' எனத் தெரிவித்துள்ளது. இராணுவத்தினரின் ஓய்வூதிய கொடுப்பனவுக்கான ஒதுக்கீடு ஆண்டொன்றுக்கு 170 மில்லியன் டொலராகக் காணப்படுகிறது. அரச நிர்வாகக் கட்டமைப்பை (இராணுவம் உட்பட ) உடனடியாக மறுசீரமைக்க வேண்டிய தேவை உள்ளது . இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டிய தேவை உள்ள போதும் அரசியல்வாதிகள் அதைப்பற்றிப் பேசுவதற்குத் தயக்கம் காட்டுகின்றனர். 2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இது சாத்தியமற்ற விடயம். ( சர்வதேச ரீதியில் ஆய்வுகளை மேற்கொண்டு வரும் கட்டுரையாளர் மேஜர் ஜெனெரல் பொனிபஸ் பெரேரா ஜப்பான்,சுவீடன்,ஜேர்மனி, அவுஸ்திரேலியா, பிரிட்டன் , சீனா,இந்தியா, பங்களாதேஷ், இஸ்ரேல், இலங்கை ஆகிய நாடுகளில் உள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல்களையும் அந்த நாடுகள் இராணுவத்துக்கு ஒதுக்கும் தொகையையும் ஒப்பிட்டு மேற்கொண்ட ஆய்வில் , இஸ்ரேலுக்கு அடுத்த இடத்தில் இலங்கை உள்ளதாகத் தெரிவித்துள்ளார்)

சீன இராணுவம் அதன் ஆளணியை 24 மில்லியனிலிருந்து 20 மில்லியனாகக் குறைக்கவுள்ளது. இந்திய இராணுவமும் தேவையில்லாத இடங்களில் இராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைக்கவுள்ளது. அடுத்த 5,10 வருடங்களில் அரச நிர்வாகக் கட்டமைப்பு விஞ்ஞானபூர்வமான ஆய்வுகள் மூலம் அரச ஊழியர்களின் குடும்பங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் மறுசீரமைக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் இலங்கை, அழிவிலிருந்து பேரழிவுக்குச் செல்வதைத் தடுக்க முடியாது. இப்போது நாட்டில் மக்கள் பொருளாதார நெருக்கடி காரணமாக அரசாங்கத்துக்கு எதிராக மேற்கொண்டு வரும் போராட்டங்களைத் தவிர வேறு அச்சுறுத்தல் எதுவுமில்லை.

இறுதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அரசாங்கமும் செய்ய வேண்டியது என்னவென்றால் இராணுவத்தினரின், எண்ணிக்கையையும் அரச ஊழியர்களின் எண்ணிக்கையையும் குறைப்பதுதான். இதைத் தவிர இலங்கை மீள்வதற்கு வேறுவழியேதுமில்லை. ■

---

1505–1948 வரை

# யாழ்ப்பாண வரலாறு

ந.பரமேஸ்வரன்

> குறிப்பு: யாழ்ப்பாண வரலாற்று தொடரில் தற்போது இடம் பெற்று வரும் சம்பவங்கள் யாவும் (Seven Years in Ceylon)நூலாசிரியரின் கருத்துகளே. கட்டுரையாளரின் கருத்துக்கள் எதுவுமில்லை. கட்டுரையாளர் மொழி பெயர்ப்பை மட்டுமே செய்து வருகிறார். )

இங்குள்ள இந்துக்கள் சாமியார் ஒருவருக்கு பாதபூஜை செய்து அந்த நீரை அருந்துகின்றனர்; அதனை அருந்தினால் நோய்கள் குணமாகும் என இவர்கள் நம்புகின்றனர்.

### மரியா பியர் போடி

இந்த அழகிய இலங்கைத்தீவில் பல வருடங்களுக்கு முன்னர் தமது வீடுகளிலும் டச்சுத் தேவாலயங்களிலும் வழிபாடுகளை மேற்கொண்டு வந்த உள்ளூர் கிறிஸ்தவர்கள் தமக்கு ஒரு தேவாலயத்தை அமைக்க விரும்பினர். உடுவில் மகளிர் கல்லூரியில் தங்கி கல்வி கற்று வந்த மாணவியான மரியா பியர் போடி என்பவர் தேவாலயம் அமைப்பதற்கு காணி அன்பளிப்புச் செய்தார். இந்தக்காணி அவளது திருமணத்துக்கென வழங்கப்பட்ட காணி. சிலர் மரியாவின் மனதை மாற்ற முயற்சித்தனர்; ஆனால் அவள் மறுத்துவிட்டாள் , 'இது நான் யேசுவுக்கு வழங்கிய காணி. அவர் அதை ஏற்றுக்கொண்டுவிட்டார்' என்று சொல்லி அவர்களின் வாயை அடைத்துவிட்டாள். ஒரு ஏழை அநாதைச் சிறுமி வழங்கிய காணியில் உள்ளூர் கிறிஸ்தவர்களுக்காக, உள்ளூர் கிறிஸ்தவர்களால் அமைக்கப்பட்ட முதலாவது தேவாலயம் நிமிர்ந்து நிற்கிறது. அமெரிக்காவில் வசிக்கும் ஒருவர் இந்தச்சிறுமிக்கு வருடாந்தம் 20 டொலர் அனுப்பிக்கொண்டிருந்தார். அவர் தனது பெயரை வெளியிட விரும்பவில்லை. பின்னர் வெளிநாட்டில் இறையியல் கற்று வந்த மாணவர் ஒருவர் இந்த உறுதியைப்பற்றி தெரிந்து கொண்டார். இந்த மாணவர் அளவெட்டி மாவட்டத்தில் (district என்று தான் குறிப்பிட்டுள்ளார்; அளவெட்டி பெரிய கிராமம் என்பதால் district என குறிப்பிட்டாரோ தெரியவில்லை) தற்போது 40 அங்கத்தவர்களுடன் தேவாலயம் ஒன்றை நடத்தி வருகிறார். இந்த இலங்கைத்தீவில் இப்போதும் எல்லோரும் உருவ வழிபாட்டையே மேற்கொண்டு வருகின்றனர். அளவெட்டியில் ஒரு அறநெறிப் பாடசாலையும் , ஐந்தாறு நாள் பாடசலைகளும் உள்ளன. இங்கு பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் ஒழுங்காக பைபிள் வகுப்புகளுக்கு சமூகமளித்து வருகின்றனர். வணக்கத்துக்குரிய கலாநிதி பூவர் அமெரிக்கா சென்ற போது இந்த விடயத்தை அறிந்து கொண்டார். இந்த மரியா பியர் போடி ஒரு காலஞ் சென்ற பேராசிரியரின் மனைவி (விதவை) என்பது பின்னர் தெரிய வந்தது. இலங்கையில் மதமாற்றம் செய்யப்பட்டவர்களுள் இந்தப்பெண்ணைப்போன்று ஒருவரைக் காண்பது மிக அரிது; இந்தப்பெண் மற்றவர்களிலிருந்து விதிவிலக்கான ஒருவர்.

*(இத்துடன் Seven Years in Ceylon நூலின் தமிழாக்கம் நிறைவுற்றது. இதுவரை Seven Years in Ceylon நூலின் முக்கியமான பகுதிகளை மட்டும் உதயன் வாசகர்களுக்காக தமிழாக்கம் செய்து வழங்கியிருந்தேன். அடுத்த வாரம் முதல் யாழ்ப்பாண வரலாறு மீண்டும் தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் கைவண்ணம்



கு.அதீதனா
தரம் -10 C
கிளி/பளை மத்திய கல்லூரி



பு.ஜீவேந்திரன்
தரம்7
யா/இந்துக் கல்லூரி



சு.மாதுளன்,
தரம் 1
யா/கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலயம்



வி.ஜனுஷா,
தரம் 5
யா/ நீர்வேலி C.C.T.M பாடசாலை



பா.லதுர்ஷன்
தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி



த.துஷாரன்
தரம் 6E
யா / இந்துக் கல்லூரி




தலதா மாளிகையின் பின்புறம் அமைந்திருக்கும் பிரிட்டிஷ் வீரர்கள் நிர்வாகிகளுக்கான கெரிசன் மயானத்தில் அமைந்துள்ள டொய்லியின் கல்லறை

# கண்டியை வீழ்த்திய டொய்லி

கோகுலராகவன்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இரண்டு பேர் முக்கியமானவர்கள். ஒருவன், கண்டி இராச்சியத்தை வீழ்த்திய மேஜர் ஜோன் டொய்லி (Major Jhon Dole) மற்றவன், வன்னி இராச்சியத்தை வீழ்த்திய கப்டன் டிறிபேக் (colonel Von Driberg) டிறிபேக் ஆபத்தானவன் இல்லை.

போரிலே தான், பண்டாரவன்னியனை வென்றான். ஆனால் டொய்லி தன் தந்திரத்தாலும், உளவு வேலைகளாலும் கண்டியைக் கைப்பற்றிய மகா தந்திரசாலி.

அவனது தந்திரங்கள் யாராலும் செய்யப்பட முடியாதவை. கண்டி மக்களை போல வெற்றிலை போட பழகிக்கொண்டான்.

யாராவது வழிப்போக்கனிடம் வெற்றிலை வாங்கிப் போடுவான். அவர்களிடம் கதை கொடுத்து மன்னனை பற்றி தகவல் எடுத்து கொள்வான்.

அடுத்து ஒரு பௌத்த பிக்குவிடம் சிங்களம் கற்றுக்கொண்டான். இதுவே அவனுக்கு கண்டியைக் கைப்பற்ற பெரும் உதவியாக இருந்தது.

கண்டி ஏற்கனவே போர்த்துக்கேயராலும், ஒல்லாந்தராலும் மூன்று தசாப்தங்களாக வீழ்த்தப்பட முடியாத இராசதானியாக இருந்தது. இரு தரப்பும் கண்டியைக் கைப்பற்ற கிட்டத்தட்ட பத்தாயிரம் போர் வீரர்களை இழந்திருந்தன.

சில போர்களில் போர்த்துக்கேய, ஒல்லாந்த வீரர்கள் எவருமே உயிருடன் தப்பியதில்லை.

அத்தகைய வீரம் நிரம்பியவர்கள் கண்டி இராச்சியப் படை வீரர்கள். போர்த்துக்கேயத் தளபதிகள் கூடப் போரில் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

பிரித்தானிய அரசு இரண்டு தடைவை படையெடுத்து பெரும் தோல்வியைச் சந்தித்தது. இத்தகைய சந்தர்ப்பத்திலேயே ஜோன் டொய்லியின் பங்களிப்பு நிகழ்கிறது.

கண்டியை நேரடியாகக் கைப்பற்ற முடியாது என்பதை உணர்ந்துகொண்ட டொய்லி தனது தந்திரங்களைப் பிரயோகிக்கத் தொடங்கினான்.

சிலவேளை பௌத்த பிக்குவாக மாறுவேடத்தில் கண்டிக்குள் போய் வந்தான். கண்டி இராச்சியத்தின் பிரதானிகளை கைக்குள் போட்டுக் கொண்டாலேயே இது சாத்தியப்படும் என்பதை டொய்லி இலகுவாகப் புரிந்துகொண்டான். தான் சந்தித்த பிரதானிகளிடம் "அடுத்த மன்னன் நீதான்" என்று ஆசை காட்டி வைப்பான். ஆனால் கண்டி வீழ்ந்த பின் எந்த ஒரு பிரதானியும் அரசன் ஆக்கப்படவே இல்லை. கண்டியின் கடைசி மன்னன் ஸ்ரீ விக்கிரம இராசசிங்கனின் முன்கோபமும் இதற்குக் காரணமாக இருந்தது .

பிரதானிகளுக்கும் அரசனுக்குமான முரண்பாட்டை டொய்லி சாதமாகப் பயன்படுத்தி விரைவில் அரசனைத் தனிமைப்படுத்திவிட்டான். போரின் போது படை திரட்டும் ஆற்றல் பிரதானிகளிடமே இருந்த காரணத்தால் அரசனால் இறுதிப் போருக்கு படை திரட்ட முடியவில்லை. பிரதானிகள் எக்னலிகொட, கெப்படிக்கொல, எஹலபொல போன்றோர் டொய்லியின் வலையில் வீழ்ந்திருந்தனர். அரசன் மீதான கோபத்தால் நாட்டை அடிமைப்படுத்த உதவப்போகின்றோம் என்பதை அவர்கள் அறியவில்லை.



ஜோன் டொய்லி உடரட்ட தலைவர்களை சந்தித்தல்




குறிப்பாக எக்னெலிகொடவின் 'சிம்மாசனக் கனவு' டொய்லியால் சிதறடிக்கப்பட்டது.

இந்த மகா அதிகாரங்கள்(பிரதானிகள்) அனைவரும் கண்டி மன்னனை தோற்கடிக்க டொய்லிக்கு உதவியவர்கள் பின்னர் அதே டொய்லியால் ஊவா வெல்லச கிளர்ச்சியின் பின் சிரச்சேதமும் செய்யப்பட்டனர். இதில் ஆச்சரியம் என்னவென்றால் டொய்லி யாருக்காகவும் பரிந்து பேசவேயில்லை. இந்த டொய்லியே கண்டி ஒப்பந்தத்தை தயார் செய்தவனும் கூட.

டொய்லி புலனாய்வுப் பயிற்சி எதுவும் முறைப்படி பெறாத புலனாய்வு மேதை. இலங்கையின் கடைசி இராசதானியை வீழ்த்திய தில்லாலங்கடித் தந்திரசாலி.

டொய்லி கண்டியில் ஆணையாளராக பதவிவகித்து அங்கேயே 1824 இல் காலமாகினான். அவனது சமாதி கண்டி கரிசன் சேமக்காலையில் இப்போதும் இருக்கிறது.

(இன்னும் கதைப்பம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்தும் அறியாமலும்

● சுழியன்

## பதுங்கிய ரணில்



உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் இருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 'தந்திரோபாயப்' பின்வாங்கலை மேற்கொண்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகச் செயற்பட்டாலும், அந்தக்கட்சியின் பிரசார நடவடிக்கைகளில் பங்கேற்கப்போவதில்லை என்ற அறிவிப்பை அவர் விடுத்துள்ளார்.

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் நடத்தப்பட்ட சந்திப்பின்போதே இவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதே தனது பிரதான இலக்கு எனவும் அவர் கூறியுள்ளாராம். எனினும், அடுத்த ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்தே ஜனாதிபதி இவ்வாறானதொரு தந்திரோபாயத்தைக் கையாண்டுள்ளார் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. 2024 இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க மொட்டுக் கட்சி இணக்கம் தெரிவித்துள்ளது.

எனவே , 'குட்டித் தேர்தலில்' தலைமைத்துவம் வழங்கி, ஐ.தே.க.வுக்கு தோல்வி ஏற்பட்டால் அது ஜனாதிபதித் தேர்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். இதுபோன்ற காரணங்களாலேயே தேர்தல் பிரசார நடவடிக்கையில் இருந்து ஜனாதிபதி ஒதுங்கிவிட்டாராம்.



## மஹிந்த ஒரு மெஸ்ஸி

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அண்மைக்காலமாக கொழும்பிலேயே முகாமிட்டிருக்கிறாராம். இப்போது தனது சொந்த ஊர்ப் பக்கம் அடிக்கடி செல்வது குறைவாம். கொழும்பில் தங்கியுள்ள மஹிந்த, காலை வேளையில் தினமும் 'போர்ட்சிற்றி' பக்கம் நடைப்பயிற்சியில் ஈடுபட்டுவருகின்றாராம். அதன்பின்னர் தனது மகன் நாமல் உட்பட மொட்டுக் கட்சி எம்.பிக்கள் சிலருடன் இணைந்து 'புட்போலும்' விளையாடி வருகின்றாராம். மஹிந்தவுக்கு தற்போது 'பிட்னஸ்' இல்லை எனக் கூறியவர்கள், அவர் மெஸ்ஸி போல 'புட்போல்' விளையாடுவதைப் பார்த்து விழிபிதுங்கி நின்றனராம்.

## தெற்கில் மொட்டு: வடக்கில் கூட்டு

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சம்பந்தமாக மொட்டுக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் இன்று ஞாயிற்றுக்கிழமை முக்கியத்துவமிக்க சந்திப்பொன்று இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சிலவேளை இன்று சந்திப்பு நடைபெறாவிட்டால் இவ்வாரத்துக்குள் அதனை நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாம்.

'யானை- மொட்டு' கூட்டணி அமைப்பது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட பேச்சுகள் இன்னும் வெற்றியளிக்காத நிலையில், சில இணக்கப்பாடுகளுக்கு வரும் வகையிலேயே இந்தக்கூட்டம் நடைபெறவுள்ளதாம். குறிப்பாக கடந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்ற சபைகளில், அந்தக்கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்கேனும் இதன்போது கொள்கை அளவில் இணக்கம் எட்டப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கிடையில் தெற்கில் மொட்டுச் சின்னத்தை முன்னிலைப்படுத்தும் ராஜபக்ச தரப்பு, வடக்கு - கிழக்கில் தமிழ் பேசும் வாக்குகளை இலக்கு வைத்து, பங்காளிகளின் சின்னத்தைப் பயன்படுத்திக் களமிறங்கவுள்ளது.

## எதிரும் புதிரும்

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.க்களுக்கும், அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி.யினருக்கும் இடையில் கடும் சொற்போர் மூண்டுள்ளது.

அரசியல் களத்தில் கடந்த சில வருவடங்களாக பொது இணக்கப்பாட்டுடன் பயணித்த இவ்விரு தரப்பினரும், தற்போது மோதிக்கொள்வது மொட்டுக் கட்சியை குஷிப்படுத்தியுள்ளதாம்.

பாடசாலைகளுக்கு 'பஸ்' வழங்கும் வேலைத்திட்டத்தை சஜித் முன்னெடுத்து வரும் நிலையில், 'பஸ் மேனால்' நாட்டை ஆளமுடியாது என்ற விமர்சனத்தை ஜே.வி.பி. முன்வைத்தது.

அத்துடன், ராஜபக்ச, ரணில், சஜித் எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான் என்ற தொனியிலும் பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இதற்குப் பதிலடி கொடுத்த சஜித், ஜே.வி.பி.யின் போலி சமத்துவவாதிகள், மாணவர்களை வீதிக்கு இறக்கி அரசியல் பிழைப்பு நடத்துபவர்கள், அவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் படிக்கின்றனர், அவர்கள் அணியும் ஆடைகளில் விலையோ ஏராளம் என்றெல்லாம் ஜே.வி.பி.யின் அந்தரங்க விடயங்களை அம்பலப்படுத்திவருகின்றார். சஜித்தின் சகாக்களும் தங்கள் பங்குக்கு விளாசித்தள்ளி வருகின்றனராம்.

## 116 சொற்சிலம்பம் போட்டி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | 9 | | |
| 10 | | ■ | 11 | | | | ■ |
| ■ | 12 | 13 | | ■ | | ■ | 14 |
| 15 | | | ■ | 16 | | 17 | |
| 18 | | | 19 | ■ | 20 | | |
| | ■ | 21 | | 22 | | ■ | |
| 23 | | ■ | 24 | | ■ | 25 | |

அனுப்புபவர் பெயர்:..........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..........................................................

கையொப்பம்:..............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. விலாவாரியாகக் கூறுதல் 5. ஈகையாளனைக் குறிக்கும் சொல் 7. சிற்றுயிர் 8. வஞ்சகம் 10. திக்கு 11. சீவிப்பு 12.கூற்றுவன் 15. ஒளியையும் குறிக்கும் சூரியனையும் குறிக்கும் 16. சாவுடன் நின்றுவிடும் 18. போதை தரும் உள்ளூர் தயாரிப்பு 20. ஏகாந்தம் 21. வளர்ச்சிக்குத் தேவையான சத்துப்பொருள் 23. சானம் 24. பெறுமதி 25.யுத்தம்

### மேலிருந்து கீழ்

1. திருநீறு 2. அவிக்காத தானியவகை 3. முனிவர் 4. கீர்த்தி 5. இராமாயண அரக்கிகளுள் ஒருத்தி 6. மரியாதையைக் குறிக்கும் முன்னிலைச்சொல் 9. உடலின் ஒருபக்க உணர்ச்சியை இழக்கச் செய்யும் நோய் 11. ஆகாயம் 13. புகழ் 14. முதியவள் 15. பார்வதியின் மற்றொரு பெயர் 17. நவக்கிரகங்களுள் ஒன்று. 19. குதிரை 22. சிரசு

### சொற்சிலம்பம் போட்டி 115 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.விசித்திரம் 6.சாண் 7. கதி 8. தண் 9. கடுகதி 11.பரணி 12.வலி 13. கத்தரி 15. கடி 16. தந்தம் 17. கிளி 18. காதல் 19. கராம்பு 21. மைல் 22.வலம்புரி

**மேலிருந்து கீழ்**

1. விசாகம் 2. சிண்டு 3. திகதி 4. ரதி 5. கண்ணிவெடி 8. தர 10. கணித்தல் 11. பலி 12. வரி 13. கந்தல் 14. தம் 15. களிம்பு 16. தகாமை 17. கிராம் 19.கல 20.புரி

### போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=. ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.116**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**13.01.2023** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

### போட்டி இலக்கம் 115 இல் வெற்றி பெற்றோர் விபரம்

| 1 ஆம் பரிசு | 2 ஆம் பரிசு | 3 ஆம் பரிசு | 4 ஆம் பரிசு | 5 ஆம் பரிசு |
|---|---|---|---|---|
| கி.கிருஷாந் | அ.துஷியந்தா | ச.வசந்தராணி | ச.அற்புதவிநாயகன் | றொ.ஆன்லிஷா |
| புத்தூர் கிழக்கு, | சீனியர் லேன் | காரைநகர் கிழக்கு | அராலி தெற்கு, | 4ஆம் கட்டை |
| வாதரவத்தை | யாழ்ப்பாணம் | காரைநகர் | வட்டுக்கோட்டை | ஆனைக்கோட்டை. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறீன் அமெரிக்காவுக்குத் திரும்புதல்

○ பா. துவாரகன்



## யாழ்ப்பான மருத்துவ வரலாறு: 15 சில குறிப்புக்கள்

மருத்துவர் கிறீன் 1847 இல் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். கிறீன் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்ட ஆங்கில மருத்துவ நூல்களை சுதேச மருத்துவர்கள் (சித்த மருத்துவர்கள்) வாங்கி, படித்துப் பயனடைந்தனர். சுதேச மருத்துவர்களிற் சிலர் தங்கள் பிள்ளைகளை மருத்துவர் கிறீனிடம் ஆங்கில மருத்துவம் பயில அனுப்பினர். இது தனது பணிகுறித்த மனநிறைவை மருத்துவர் கிறீனுக்கு ஏற்படுத்தியது.

கிறீன் முதல் 10 ஆண்டுகளில் 4 மருத்துவ அணி மாணவர்களைப் பயிற்றுவித்தார். ரி. கொப்கின்ஸ், ஜி.எம். ரெய்டு, சி. மக்கின்ரையர், எ. மக்ஃபார்லாண்ட் ஆகியோர் கிறீனது மருத்துவக்கல்லூரியின் 3 ஆவது அணியிலும் (1853 - 1856) ஜே. எச். பெய்லி, ஏ. பிலான்ச்சாட், ஜே. பி. ஹாவார்ட், எவ். இலற்றிமர், ஜே. வில்சன், ஜே . ரொப்ஸ், ஜே. பிளட் , டி.பி. மான் ஆகியோர் 4 ஆவது அணியிலும் (1855 - 1858) பயின்றனர்.

மருத்துவர் கிறீன் அமெரிக்க மிஷனுக்கு 1857 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஓராம் நாள் அனுப்பிய 6 மாதகால அறிக்கையில் மானிப்பாயிலுள்ள டிஸ்பென்சரியில் கடந்த 6 மாதத்தில் 1003 பேருக்குச் சிகிச்சை வழங்கப்பட்டதையும், தன்னுடைய 4 ஆவது அணியைச் சேர்ந்த 8 மாணவர்களும் மருத்துவக்கல்வியில் சிறந்து விளங்குவதாகவும் அவர்கள் அடுத்த ஆண்டு மருத்துவக் கல்வியைப் பூர்த்திசெய்து மருத்துவர்களாக வெளிவருவர் என்றும் குறிப்பிட்டிருந்தார். மேலும் அவ்வறிக்கையில் பிரித்தானிய அரசாங்கம் கோப்பித் தோட்டங்களில் மருத்துவசேவையை வழங்கும் தகுதிவாய்ந்த மருத்துவர்களுக்கு மாதாந்தம் ஊதியமாக 7 தொடக்கம் 12 பவுண்ஸ் வழங்கத் தீர்மானித்திருந்ததையும் குறிப்பிட்டிருந்தார்.

**முதற் பத்து ஆண்டுகளில் (1847- 1857)**
**கிறீன் யாழ்ப்பாணத்தில் ஆற்றிய பணிகள் சில:**

- மானிப்பாயில் மேலைத்தேச மருத்துவமனையைத் தாபித்து 10 ஆண்டுகளில் ஏறத்தாழ இருபதாயிரம் பேருக்குச் சிகிச்சை வழங்கினார். ஆயிரத்துக்கும் அதிகமானோருக்குச் சத்திரசிகிச்சையை மேற்கொண்டார்.
- 1848 இல் மானிப்பாயில் இலங்கையின் முதலாவது மேலைத்தேச மருத்துவக் கல்லூரியையும் போதனா மருத்துவமனையையும் தாபித்து 20 தமிழர்களை மருத்துவர்களாக்கினார்.
- சேர் பேர்சிவல் அக்லண்ட் டைக் அவர்கள் யாழ் நகரத்தில் 1850 ஆம் ஆண்டு ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழக மருத்துவமனையை (யாழ். யாழ். போதனா மருத்துவமனை) தாபிக்க மருத்துவர் கிறீன் அவர்களே காரணமாக விளங்கினார்.
- மருத்துவர் கிறீன் ஒரு மருத்துவ வல்லுநராக (Physician) மட்டுமன்றி சத்திரசிகிச்சை நிபுணராக (Surgeon), மகப்பேற்று மருத்துவ நிபுணராக (Obstetrician), என்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணராக (Orthopaedic Surgeon) ஒட்டு உறுப்பு சத்திரசிகிச்சை நிபுணராக (Plastic Surgeon) என்றவாறு... பல்துறைசார் விசேட மருத்துவ நிபுணர்கள் ஆற்றும் பணியை விசேட மருத்துவ நிபுணத்துவத் துறைகள் மற்றும் உப மருத்துவ நிபுணத்துப் பிரிவுகள் எதுவுமே அறிமுகமாகாத 19 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் தனியொருவராக மேற்கொண்டார்.
- தமிழில் சொற்பொழிவாற்றவும் எழுதவும் வல்ல புலமையாளரானார். ஆங்கிலத்திலிருந்த மருத்துவ நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார்.
- மேலைத்தேச விஞ்ஞானக் கல்வி தமிழர்கள் மத்தியில் அறிமுகமாகாத காலத்தில் தமிழில் விஞ்ஞான மற்றும் மருத்துவக் கலைச்சொற்களை கிறீன் உருவாக்கினார்.

**கிறீன் அமெரிக்காவுக்குத் திரும்புதல்**

யாழ்ப்பாணத்தில் 10 ஆண்டுகள் பணியை நிறைவு செய்து கிறீன் 1857 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 5 ஆம் திகதி அமெரிக்காவுக்குப் புறப்பட்டார். இரு குளிர்காலங்கள் அமெரிக்காவில் தங்கியிருந்து தனது உடல் நலத்தைத் தேற்றிய பின்னர் யாழ்ப்பாணம் திரும்புவதற்கு கிறீன் தீர்மானித்திருந்தார்.



Frame of the House I Live in.



THE
HOUSE I LIVE IN;
OR
THE HUMAN BODY.
FOR THE USE OF FAMILIES AND SCHOOLS.
BY WM. A. ALCOTT,
Author of the Young Mother and the Young Man's Guide, and Editor of the Library of Health and the Annals of Education.
Second Edition—Enlarged.
BOSTON:
LIGHT & STEARNS, 1 CORNHILL.



மருத்துவவைத்தியம்.
இஃது
வைத்தியத் தேர்ச்சியிற்றலைமை பொலிந்த
மான்சேல்பண்டிதர்
இயற்றிய மருத்துவ வைத்தியநூற்கு
அயார்க்குப் பட்டினத்தில்
வைத்திய மாட்சிமைபெற்று விளங்காநின்ற
கில்மன்பண்டிதர்
தாற்பரியங்களும் நூதனவிஷயங்களும் அமைத்துக்கூறிய
இங்கிலிஷ் பனுவலை
யாழ்ப்பாணத்து அமெரிக்கன் மிஷனரிகளின் அனுமதிப்படி
வைத்தியனாகிய ச. பி. கிறீன்
ஆராய்ந்து திருத்தி தமிழ் வாட்டாசாரங்களுக்கிசைய
வில்லியம் நேவின்ஸ்
முதலிய சில ஆசிரியருடைய உதவியைக்கொண்டு
தமிழ்ச் செய்தது.
யாழ்ப்பாணம்:
இரிப்பிளி, ஸ்ரேங்கு என்பவர்களுடைய இயந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது.
சகஅ.
GOOD 5 FEB'32

ஒக்ரோபர் 5ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து பாய்மரக் கப்பலில் புறப்பட்டு 23 ஆம் திகதி சென்னையை அடைந்த கிறீன் பிரித்தானியாவுக்குச் செல்லும் கப்பல் புறப்படுவதற்காக 2 மாதங்கள் சென்னையில் காத்திருக்க வேண்டியேற்பட்டது. சென்னையில் இருந்த காலத்தில் உடற்கூற்றியல் பற்றிய பிரபல்யமான நூலான "The House I Live In" என்பதையும் தாய் சேய் நலன் பற்றி ஆங்கிலத்தில் பிரபல்யமாக விளங்கிய "The Mother and Child" என்ற தொகுப்பையும் மொழிபெயர்ப்பதில் ஈடுபட்டார். 1857 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி ஆக்ரா(Agra) என்ற பாய்க்கப்பலில் சென்னையிலிருந்து புறப்பட்ட கிறீன் ஆபிரிக்காவின் நன்னம்பிக்கை முனை, அத்திலாந்திக் சமுத்திரத்தில் அமைந்துள்ள பிரத்தானியாவின் ஆட்சிக்குட்பட்ட செயின்ட் ஹெலினாவைக் கடந்து 1858 ஏப்ரல் ஓராம் திகதி இலண்டனை அடைந்தார். கிறீன் கடற்பணயத்தின் போது படங்களை வரைவதிலும் மொழிபெயர்ப்புப் பணியிலும் தொடர்ந்து ஈடுபட்டார்.

1858 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் திகதி கிறீன் இலண்டனிலிருந்து அமெரிக்காவிலுள்ள பிறதேசங்களுக்கு மிஷனரிகளை அனுப்பும் , அமெரிக்க மிஷன் சங்கத்தின் (ABCFM) தொடர்பாடல் செயலாளர் ரூபஸ் அன்டர்சனுக்கு எழுதிய கடிதத்தில் அமெரிக்காவிலள்ள தனது நண்பர்களின் நிதியுதவியுடன் இலண்டனிலிருந்து பாரிசுக்கும் பிற ஐரோப்பிய நகரங்களுக்கும் குறுகியகாலப் பயணம் செய்யும் தனது எண்ணத்தைத் தெரிவித்திருந்தார்.

அந்தக்கடிதத்திலே கிறீன் கேட்டிருந்த முக்கியமான விடயம், தான் மொழிபெயர்ப்பில் ஈடுபட்டுள்ள நூல்களான இரண வைத்தியம் (Science and Art of Surgery) மற்றும் கெமிஸ்தம் (Chemistry) ஆகியவற்றை அச்சிடுவதற்கு நிதியுதவி செய்யக் கூடியவர்களுக்கு அக்கடிதத்தை அன்டர்சன் அவர்கள் அனுப்பினால், அவர்களைச் சந்திப்பதில் தான் மகிழ்ச்சியடைவதாகவும் நிதியுதவி கிடைக்கும் பட்சத்தில் குறிப்பாக இந்நூல்களில் உள்ள விளக்கப்படங்களின் மரச்செதுக்கு அச்சுக்களை ஐரோப்பாவில் சிறந்தமுறையில் செய்யமுடியும் என்றும் தெரிவித்திருந்தார்.

கிறீன் சென்னையில் தங்கியிருந்த காலப்பகுதியில் சென்னையிலிருந்த எடின்பரோ மருத்துவ மிஷனரிச் சங்கத்தின்(Medical Missionary Society in Edinburgh) கிளையினருடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தார். மருத்துவர் கிறீன் இலண்டனை அடைந்த போது எடின்பரோ மருத்துவ மிஷனரிச் சங்கத்தின் செயலாளரிடமிருந்து அன்பான அழைப்பிதழ் கடிதம் ஒன்று கிறீனுக்கு வந்தது. கடிதத்திலே 1858 ஆண்டு ஜூலை மாதம் எடின்பரோவில் நடைபெறவிருக்கும் பிரித்தானிய மருத்துவச் சங்கத்தின் (British Medical Association) வருடாந்த மகாநாட்டில் கலந்துகொண்டு கௌரவ விருந்தினருக்கான உரையை ஆற்றுமாறு மருத்துவர் கிறீன் அழைக்கப்பட்டிருந்தார். கிறீன் எடின்பரோவில் நடைபெற்ற பிரித்தானிய மருத்துவச் சங்கத்தின் வருடாந்த மகாநாட்டில் ஆற்றிய உரையின்போது தாய்மொழியில் மருத்துவ விஞ்ஞானத்தை கற்பிப்பதன் அவசியம் குறித்துத் தனது எண்ணங்களையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொண்டார். மருத்துவ விஞ்ஞானத்தை பிறமொழியினர் மத்தியில் அவர்களது தாய்மொழியில் அறிமுகப்படுத்தும் போது வெறும் மொழிபெயர்ப்பு என்பது பயனற்றது என்றும் பல்வேறு ஆசிரியர்களதும் கருத்துக்களை ஒருங்கு சேர்த்தும் நன்கு திட்டமிட்டும் அடிப்படையான ஆய்வுக்கட்டுரைகளுடன் தேவையானவற்றைச் சேர்த்தும், அவசியமற்றவற்றை நீக்கியும் இடங்களை, வசனங்களை மாற்றியும் தேவையான விளக்கப்படங்கள் மற்றும் சொற்றொடர்களுடனும் எளிதில் புரிந்து கொள்ளத்தக்க வகையில் வட்டார மொழியில் மருத்துவ விஞ்ஞான நூல்களை வெளியிடுவது பயனுள்ளதென்றும் ஒவ்வொருபுத்தகமும் இலகுவான மொழிநடையில் மருத்துவக் கோட்பாடுகளை ஐரோப்பியர்கள் புரிந்து கொள்வது போல் தமிழர்களாகிய இந்துக்கள் விளங்கத்தக்கவாறு இருக்கவேண்டும் என்று மருத்துவர் கிறீன் எடின்பரோ மகாநாட்டில் தெரிவித்திருந்தார். லிவெப்பூலிலிந்து ஜூலை 7ஆம் திகதி பாய்மரக் கப்பலில் புறப்பட்ட கிறீன், ஜூலை 21 இல் நியூயோர்க் நகரையடைந்தார். 1858 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28 ஆம் திகதி வெளிவந்த 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை, கிறீன் நாடு திரும்பியமையை தனிப்பட்ட பத்தியொன்றில் (Column) பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது.

"பதினொரு வருடங்களுக்குப் பின்னர் இந்தியாவிலிருந்து மருத்துவர் சாமுவேல் பிஷ்க் கிறீன் புதன்கிழமை கங்காருவில்(கப்பலின் பெயர்) நாடு திரும்பினார். இக்காலப்பகுதியில் கிறீன் மிஷனரிப் பணியில் ஈடுபட்டதுடன் மருத்துவக் கல்லூரியை நிறுவி அந்நாட்டவர்களுக்கு மருத்துவம் பயிற்றுவித்தார். அத்துடன் மருத்துவ நூல்களை சுதேச மொழியிலும் மொழிபெயர்த்தார்."

அமெரிக்கா சென்ற கிறீனை மருத்துவர் ஒருவர் உடனடியாகப் பரிசோதித்து அவருக்கு எவ்வித நோய்களும் இல்லையென்று தெரிவித்தார். கிறீன் நியூயோர்க்கில் வசித்த தனது சகோதரர்களையும் சகோதரிகளையும் சந்தித்து உரையாடிய பின்னர் தனது சொந்த ஊராகிய கிறீன் கில்லுக்குச் (Green Hill) சென்று 82 வயதான தனது தந்தையாருடன் குளிர் காலத்தைக் களித்தார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ இராகவன்

## பதிவும் பதிவேடுகளும்?

இரண்டையுமே முழுமையாக்க எத்தனித்துக் கொண்டிருக்கிறேன். இது பொதுவாக நிகழக் கூடியதொன்றுதான். பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்படலாம். முதன்மையானது பதிவினதும் பதிவேடுகளினதும் முக்கியத்துவம் உணரப்படாத பருவத்தில் நிகழ்பவற்றுக்கு பதிவிருக்காது. முக்கியத்துவமுணரப்படும் பருவத்தில் பதிவு செய்வதற்கான காலங்கடந்திருக்கும். அத்தோடு தற்போது பதிவு செய்ய வேண்டியவையும் சேர்ந்திருக்கும். இதனால் முழுமையான பதிவென்பது படிப்படியாகவே நிகழும். அடுத்தது நிகழ்ந்த காலத்திலேயே பதிவு செய்யப்பட வேண்டியதென அடையாளங் காணப்பட்டிருந்தும் பதிவு செய்யப்பட முடியாதிருக்கும் நிகழ்வு அல்லது நிகழ்வுகளால் முழுமையென்பது சாத்தியப்படாமலும் போகலாம். ஏனெனில் அந்நிகழ்வை அல்லது நிகழ்வுகளைத் தற்போதும் பதிவு செய்ய முடியாதிருக்கலாம். இன்னொன்று பதிவு செய்யவேகூடாது என்ற நிலைப்பாட்டிருந்தாலும் முழுமையென்பது சாத்தியமில்லை. இன்னமும் பதிவினதும் பதிவேடுகளினதும் முக்கியத்துவத்தை உணராத பருவத்திலிருந்தாலும் பதிவும், பதிவேடுகளும் முழுமை பெறச் சாத்தியமேல்லை. இதையெல்லாம் கடந்த நிலையில்தான் பதிவும் பதிவேடுகளும் முழுமைபெறக்கூடுமென்பதை உணர்ந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

பதிவுகளைச் சாதாரணம், விசேடம் எனப் பிரிக்க வேண்டியதில்லை. பதிவுகள் எல்லாமே ஏதோவொரு வகையில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகவேயிருக்கும். அது ஒவ்வொருவர் நோக்கிலும் வேறுபடக்கூடியது. எனக்கு மிக முக்கியமானதாகவிருக்கும் பதிவொன்று உங்களுக்கு எந்தவகையிலும் அவசியமற்றதொன்றாக அமையலாம்.

அதனால் நீங்கள் அதைக் கவனத்தில் கொள்ள வேண்டியதில்லை என்பது பக்கச்சார்பு கொண்ட கருத்து நிலையாகும். பதிவொன்றின் பெறுமதி உணரப்படாத நிலையில் இது நிகழ்வது வழமையானதொன்றுதான். ஏதோவொருவகையில் எந்தவொரு பதிவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவேயிருக்கும் என்ற நிலைக்கு வந்துவிட்டால் பதிவொன்றின் பெறுமதி தெரியவரும். அது தெரியவந்துவிட்டால் எந்தவொரு பதிவினையும் உங்களால் புறக்கணிக்கமுடியாது.

இங்கேதான் ஒரு பதிவின் முடிவுத் திகதி அல்லது ஆயுட்காலங் குறித்த கேள்வியெழும். உண்மையில் ஒரு பதிவுக்கு காலாவதித் திகதி அல்லது ஆயுள்கால முடிவு என்பதிருக்கிறதா? எனக் கேட்டால் உடனடியாக நேரான பதில்தான் முன்வைக்கப்படலாம். மாறாகப் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டியது. பதிவில் குறிப்பிடப்படும் விடயம் முடிவுத் திகதியைக் கொண்டிருக்கலாம். ஆனால் எந்தவொரு பதிவுக்குமே முடிவுத் திகதியென்பதில்லை. ஒரு பதிவு காலக்கழிவில் ஆவணமாக மாறிவிடும். ஆவணத்துக்குப் பெறுமதியிட முடியுமா? அதற்கு முடிவுத்திகதியென்ன? அதன் ஆயுட்காலம் என்ன? என்றெல்லாம் கேள்விகள் எழலாம். பதிவொன்று ஆவனமாகிவிட்டாலே அதற்குப் பெறுமதியிட முடியாது. அதற்கு முடிவுத் திகதியுமில்லை. குறிப்பிட்ட ஆயுட்காலமென்பதுமில்லை. குறித்த ஆவணம் தொடர்ந்து பேணப்பட்டு வருமானால் அது தொடர்ந்துமிருக்கும்.

திட்டமிட்டு அழிக்கப்படாத வரையில் இது நடைமுறையிலிருக்குமென்பதை கவனத்திற் கொள்ள வேண்டும். பதிவு செய்வதில் மிகுந்த ஆர்வமுள்ளவர்களுக்கு முக்கியமாக ஒரு விடயத்தைச் சொல்ல நினைக்கிறேன். நீங்கள் சந்திக்கும், நாளாந்தம் உறவாடும் ஒவ்வொருவருக்கும் தனித்தனியான பதிவேட்டைத் திறந்து பேணிவரலாம். அதில் அவரைச் சந்தித்து உரையாடியபோது நிகழ்ந்ததை யெல்லாம் பதிவு செய்யலாம்.

இதையும் தினக்குறிப்பேட்டுப் பதிவுகளையும் வெவ்வேறாகக் கருதிக் கொள்ள வேண்டும். இரண்டையும் ஒன்றெனக் கருதிக் குழம்பக் கூடாது என்பதும் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியதாகும். இதை நான் சொல்லும்போது நடைமுறைச் சாத்தியமற்றதாகத் தோன்றலாம். இதற்கு முதற்கட்டமாக நீங்கள் யாரேனுமொருவருக்குத் தனியான பதிவேட்டைத் திறந்து பதிவினை மேற்கொண்டு பார்க்கலாம். ஒரு மாதகாலம் பதிவுகளை மேற்கொள்ளும்போது வெகுசுவாரசியமாகவிருக்கும்.

பின்னர் நீங்களே தன்னியல்பாக இதை மேற்கொள்ள ஆரம்பித்துவிடுவீர்கள். அதற்குப் பின்னர் உங்களுக்கு எந்தவொரு வழிகாட்டலோ ஆலோசனையோ தேவைப்படாது. மேலும் இதனை மற்றவர்களை மேற்கொள்ளத் தூண்டுபவராக மாறிவிடுவீர்கள். இன்னுமொன்றைச் சொல்ல வேண்டியிருக்கிறது. நீங்கள் மேற்கொள்ளும் பதிவுகளை ஒரு மாதங்கடந்தபின்பாக அல்லது உங்களுக்கு வசதியான கால இடைவெளியில் அவகாசமெடுத்து வாசித்துப் பார்க்க வேண்டும். இந்த வாசிப்புத்தான் பதிவு செய்தலின் மீதான ஆர்வத்தைத் தூண்டுவது மட்டுமல்லாமல் அதனது முக்கியத்துவத்தையும் உணர்த்துவதாக அமையும்.

# ஒரு நேர்காணல் கடவுள்

## கனவுகள்? 3



கனவு காண்பதற்கு விதிக்கப்பட்டிருக்கிறோம். அல்லும் பகலும் கனவு காண்பதற்கு விதிக்கப்பட்டிருக்கிறோம். அல்லில் காண்பது அற்கனவு, பகலில் காண்பது பகற்கனவு. எந்தவிதத் திட்டமிடலுமின்றிச் சம்பவிப்பது தான் கனவு. இதனைப் பொதுவாக அல் கனவு என்றே குறிப்பிடுவர். இது வழமையாக நிகழக்கூடியது . அல் என்பது இரவினை குறிப்பதாகும். அதாவது இரவில் சம்பவிக்கின்ற கனவைத்தான் அல் கனவு எனலாம். வழமையாக சம்பவிக்கும் இதற்கு மாறாக முறையான திட்டமிடலுடன் நிகழ்த்தப்படுவது பகற்கனவு. அதாவது பகலில் நாங்கள் விரும்பவதையெல்லாம் நிகழ்த்திப்பார்த்து தற்காலிக இன்பத்தையடைந்து கொள்வதைக் குறிக்கும். எனது நோக்கில் நானிதை விரும்புவதுமில்லை , நாடியதுமில்லை . என் நாட்டமும் விருப்பமும் அல் கனவு மீது தான் .உங்களனுமதியுடன் அங்கே சில அல் கனவுகளை கோர்வையாக்கித் தருகிறேன். வாசலில் மாடம் கொண்ட வீடுகளுக்குள் புகுந்து வெளியேறுகிறேன். ஒவ்வொரு வீட்டிலிருக்கும் சண்டியனும் என்னை கையில் அகப்பட்ட ஆயுதங்களோடு துரத்தி வருகிறார்கள். முத்து விநாகயனின் தேரடியே தஞ்சமென ஓடுகிறேன். தேரடியில் யாருமில்லை உட்காருகின்றேன். அப்போது பார்த்தால் அங்கே முத்து விநாயகன் கோவிலுமில்லை, குளமுமில்லை ,தேரடியுமில்லை . நான் வேறெங்கோ வழி மாறி வந்து உட்கார்ந்திருக்கிறேன் அதுவும் ஒருவித்தில் நன்மைபயக்க கூடியது தான்.

நேரம் நள்ளிரவாகி விட்டது .

என் மூன்றாவது ஒருதலைக் காதலியின் வீட்டுக்கு முன்னிருக்கும் வீதியால் சிற்றுழவியந்திரமொன்றில் முகமூடியணிந்த ஏழுபேர் மும்முலையம்மன் சிலையை கடத்திச் செல்ல , நான் அவர்களைப் பின் தொடர்ந்து செல்கிறேன். முடிவில் கோவிற் சந்தைக்கு வந்து சேர , பகலாகி விட்டது. அங்கே துறைமுகமொன்றையமைப்பதில் சிலர் ஈடுபட்டிருக்கிறார்கள். கடலைப் பற்றி கேட்கலாமெனப் பார்த்தால் அந்தச் சிலரும் மாயமாகி விட்டனர். அப்போது என்னைத் துரத்திய சண்டியர்கள் அங்கே வந்து சேர்ந்து விட்டார்கள். எனக்கு அவர்களிடமிருந்து தப்பிச் செல்லத் தோன்றவில்லை. அவர்களில் ஒருவன் வந்து என்னிடம் 'இந்த வழியால் ஒரு திருடன் ஓடிச் சென்றதைப் பார்த்தாயா? ' எனக் கேட்கிறான். அவனுக்கு என்னை அடையாளந் தெரியவில்லை என்பது நிம்மதியையும் மகிழ்ச்சியையும் தருகின்றது. இது வரைக்கும் உங்களைத் தவிர யாருமிங்கே வருகை தரவில்லை என நான் அவனுக்குச் சொன்னதும் எல்லோரும் மாயமாகி விட்டனர். இப்போது நான் மட்டுமே தனித்திருக்கிறேன். துறைமுகமுமில்லை ,கோவிற் சந்தையுமில்லை. அவ்விடத்தை விட்டு வெளியேறுவதுதான் பாதுகாப்பானது எனத் தோன்றுகின்றது.

அங்கிருந்து கிழக்கு நோக்கி நடக்கிறேன். என்னைக் கடந்து ஒருவர் சைக்கிளில் போகிறார். 'என்னை ஏற்றிச் செல்ல முடியுமா ?'எனக் கேட்கிறேன். அடுத்து வந்த திருப்பத்தில் அவர் மறைந்து விட்டார். நானும் இன்னும் விரைவாக நடக்கிறேன். பாதை செங்குத்தாக இறங்குகிறது. நான் சறுக்கிக் கொண்டே போகிறேன். அங்கே ஒரு மண்ணிறக்குதிரை வாலைச் சுற்றியபடியே நின்று கொண்டிருக்கிறது. நான் சறுக்கிக்கொண்டு போன வேகத்தில் எம்பி, குதிரை மேல் ஏறிவிடுகிறேன். உடனே குதிரை பறப்பது போல ஓடத்தொடங்கிவிடுகிறது. ஒரே கூச்சலும் ஆரவார ஒலியும் கிளம்புகிறது. திரும்பிப்பார்க்கிறேன். அது ஒரு குதிரைப்பந்தயத்திடல். சுற்றிவரப் பல்லாயிரக்கணக்கானோர் அமர்ந்திருந்து பார்க்கின்றனர். எனக்குப்பின்னால் பத்துப்பதினைந்து குதிரைகளில் ஆட்கள் துரத்தி வருகின்றனர். ஆனால் நான் செல்லும் குதிரையை அவர்களால் நெருங்க முடியவில்லை. கூச்சலும் ஆரவாரமும் இன்னும் உச்சமடைகின்றன. பிறகு பார்த்தால் குதிரையுமில்லை. ஆரவாரம்,கூச்சல் எதுவுமில்லை. சுடுகாட்டுக்கு அருகாமையிலுள்ள கள்ளிக்கூடத்தில் வந்திருக்கிறேன். நானாகப் புறப்பட்டு வந்திருப்பதாகத் தோன்றவில்லை. யாரோ அழைத்து வந்திருக்கிறார்கள் எனத் தோன்றுகிறது. அதுதான் விசாரணை முகாம் என்று முகந்தெரியாத சிலர் சொல்வது கேட்கிறது. ஏன் முகந்தெரியவில்லையென்றால் அது ஒரு மைம்மல் பொழுது .

நான் உள்ளே கொண்டு செல்லப்பட்ட போது காவலுக்கு நின்றவர்கள் ஏதோ என்னிடம் கேட்டனர். எனக்கு விளங்கவில்லை. அவர்கள் எனக்குத்தெரியாத மொழியில் அந்தக்கேள்வியைக் கேட்டிருக்க வேண்டுமென நினைக்கிறேன். வெளியே தான் மைம்மலாக இருந்ததே தவிர உள்ளே பகல் நேரந்தான். அது வகுப்பறை என்று கூறப்பட்டாலும் வகுப்பறைக்குரிய அடையாளம் ஏதும் இருக்கவில்லை. திரை மறைவில் தான் விசாரணை நடந்து கொண்டிருக்கிறதென நினைக்கிறேன். திரையின் நிறம் கடும்பச்சை. அப்படியொரு பச்சை நிறத்தை நானிதுவரை பார்த்ததேயில்லை. அது எனக்குப் பயத்தைக் கிளப்பி விடுகிறது. திரைக்கு வெளியே என்னைக் காத்திருக்கும் படி யாரோ பின்னாலிருந்து குரல் கொடுக்கிறார். அவரைத் திரும்பிப் பார்க்க வேண்டும் எனத் தோன்றவில்லை. திரைக்குள்ளே ஒரு விசும்பல் கேட்கிறது. அது ஓய்வதற்கிடையில் இன்னொரு சிரிப்பொலி கேட்கிறது. எனக்கு மெதுவாக எழுந்து ஓடிவரத்தோன்றுகிறது. நானொரு சிமெந்து மேடையில் உட்காரவைக்கப்பட்டு இருந்தேன். சற்று நேரத்தின் பின்பாக அந்தச் சிமெந்து மேடையின் நடுவே படிகள் தோன்றிக் கீழிறங்கின. அங்கிருந்து தப்பிச்செல்வதற்கு இதைவிடவும் தக்கதருணம் கிடைக்காதென்பதால் மேடையிலிருந்து மெல்ல மெல்ல படிகளில் இறங்கினேன். அது இன்னொரு நகரத்துக்கு என்னைக்கொண்டு சென்றது.

அது ஒரு விசித்திரமான நகரமாயிருந்தது. அங்கே நான் முதலில் நீண்ட குடும்பி வைத்த வட்டமுகமும், பூனைக்கண்களும், தெற்றுப்பற்களும் ,குடும்பியின் நீளத்துக்கு வெண்தாடியும் அரையில் கறுப்பங்கியும் அணிந்திருந்த நோக்கர் ஒருவரைச் சந்தித்தேன். அவர் என்னைத் தன்னுடன் வரும்படி அழைத்துச் சென்றார். அது ஓர் இரவுப் பொழுதாக இருந்தது. எனினும் ஆளையாள் தெளிவாகப் பார்க்கக் கூடியதாக மென்னொளியெங்கும் பரவியிருந்தது. ஒடுக்கமான சாலைவழியே நாங்கள் நடந்து கொண்டிருந்தோம். ‘இப்படியே நிகழ்ந்தால் அதற்கு என்னதான் தீர்வு? இதை அனுமதிக்கவே கூடாது. இதை எதிர்க்கத்தான் வேண்டும். இதென்ன சாதாரண காரியமா? இவர்களெல்லாம் என்ன மாதிரியான ஆட்கள்? இப்படியெங்கேனும் மனிதர்கள் இருப்பார்களா? இவர்களை முதலில் துரத்தியடிக்க வேண்டும் ' எனச் சிலர் உரத்துப்பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டேன். இதைப் பற்றி நோக்கரிடம் கேட்டேன். அவர் ஒரு நீண்ட பெருமூச்செறிந்துவிட்டு 'வா நேரில் காட்டுகிறேன்' எனக்கூறிக்கொண்டே முன்நடக்க ,நான் பின்தொடர்ந்தேன். நாங்கள் ஒரு முடக்கால் திரும்பிப் பிரதான வீதியில் மிதந்து சதுக்கமொன்றை நெருங்கினோம். 'இங்கேயே நின்று கொள்ளலாம். அப்போது தான் நீ கேட்ட கேள்விக்கு என்னால் முழுமையாக பதிலளிக்க முடியும்' என நோக்கர் சொன்னார். நாங்கள் அங்கேயே ஒதுங்கி நின்று கொண்டோம். அங்கிருந்து சதுக்கத்தைத் தெளிவாக நோக்கக்கூடியதாகவிருந்தது. “அங்கே ஒரு தடவை வடிவாகப் பார்” என நோக்கர் சொன்னார்.

நான் சதுக்கத்தை நுணுக்கமாகப் பார்த்தேன். ஒரு கொடிக்கம்பத்தில் அழகும் வனப்பும் பொழிந்த காராம்பசுவொன்று கட்டப்பட்டிருந்தது. முதல் நோக்கில் சிங்க முகம் கொண்டவர்கள் எனத் தோன்றும் ஒரு தொகுதியினரும் சாதாரண மனித முகம்கொண்டு இன்னொரு தொகுதியினரும் மீசையின்றின்றித் தாடிமட்டும் வளர்த்து தொப்பி அணிந்த பிறிதொரு தொகுதினருமான மூன்று தொகுதியினராகப் பிரிந்துநின்று விவாதித்துக் கொண்டிருப்பதை நான் பார்த்தேன்.

‘அங்கே கொடிக் கம்பத்தில் கட்டிவைக்கப்பட்டிருக்கும் காமதேனுதான் இந்தத் தேசத்தில் உள்ளவர்களுக்கெல்லாம் தாய். சிங்க முகம் கொண்டவர்களும் மீசையின்றி தாடிமட்டும் வளர்த்து தொப்பி அணிந்துகொண்டிருப்பவர்களும் காமதேனுவின் வளர்ப்புப் பிள்ளைகள். சாதாரண தோற்றத்தில் இருப்பவர்கள் மட்டுமே காமதேனுவால் ஈனப்பட்ட பிள்ளைகள். ஆனால், சிங்க முகம்கொண்டவர்கள் மற்றிரு பகுதியினரைக் காட்டிலும் பல்கிப் பெருகியிருப்பதால் அப்பகுதினரே இத்தேசத்தை ஆட்சிசெய்து வருகின்றனர். ஆனால், தாங்கள் மட்டுமே இந்தக் காமதேனுவின் சொந்தப் பிள்ளைகள் என்றும் மற்றவர் எல்லாம் வெறும் வளர்ப்புப் பிள்ளைகள் என்றும் சொல்லிவருவதோடு அதற்கான மெய்யற்ற ஆதாரங்களை தொடர்ந்தும் உருவாக்கிக் கொண்டே இருக்கின்றனர். நாங்கள் எல்லாம் இந்தச் சாதாரண தோற்றத்தில் இருப்பவர்களால் எங்களுக்கு விடிவுகாலம் வருமென்று இன்றுவரை நம்பிக்கொண்டுதான் இருக்கின்றோம். அது அவநம்பிக்கைதான் எனத் தெரிந்தும் எங்களுக்கு வேறு வழியில்லாமல் இவர்களை நம்பிக்கொண்டு இருக்கின்றோம். இவர்களோ சிங்க முகத்தோற்றம் கொண்டவர்களின் நிழலிலே பதுங்கிக்கொண்டு சுகபோகங்கள் அனைத்தையும் அனுபவித்துக்கொண்டு எங்களுக்கு நிச்சயமாக ஒரு விடிவுகாலத்தைக் கொண்டுவந்தே தீருவோம் என்றும், சிங்கமுகத் தோற்றம் உடையவர்களுக்கு சார்பாக ஒருபோதும் நடக்க மாட்டோம் என்றும் பசப்பு வார்த்தைகளால் எமது செவிகளைக் குளிரவைத்துக்கொண்டு இருக்கின்றனர். மீசையின்றி தாடிமட்டும் வளர்த்துத் தொப்பியணிந்தோர் மதில்மேல் பூனைகளாகவே இருந்துவருகின்ற போதிலும் அப்பகுதியினரும் சிங்க முகத் தோற்றம் கொண்டவர்களின் நிழலில் ஒதுங்கி சுகபோகம் அனுபவிப்பவர்கள் தான். இப்போது இங்கே நடந்துகொண்டிருப்பது என்னவென்றால், இந்தக் காமதேனுவின் உடற்பாகங்களை ஒவ்வொன்றாக விலைகுறித்து வெளியாருக்கு விற்றுக்கொண்டிருக்கின்றனர். இதை எதிர்ப்பதுபோல் சாதாரண முகத்தோற்றம் கொண்டிருக்கும் எங்களது பிரதிநிதிகள் எங்களை ஏமாற்றி நெருங்காலமாகவே தொடர் நாடகமொன்றை அரங்கேற்றி வருகின்றனர்’ - எனச் சொல்லி முடித்தார் நோக்கர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org